REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK


2022 செப்டெம்பர் 23 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 225 | Friday 23, September, 2022 | 20பக்கங்கள் | 40/-

## அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை



நம் நாட்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்னோடிகளுள் ஒருவரான தெல்தோட்டை அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் இலக்கிய உலகுக்கு ஆற்றிய 06



# உணவு பாதுகாப்பை அரசு உறுதி செய்யும்

## ஜனாதிபதி அலுவலகத்தின் ஊடாக முறையான ஏற்பாடு

### மாணவர் ஒருவர் மதிய உணவுக்கு தேங்காய்த் துண்டுகள் கொண்டு வந்த செய்தியில் உண்மையில்லை.

### எந்தவொரு குழந்தையோ, குடும்பமோ உணவு நெருக்கடிக்குள்ளானால் தீர்வு காண விசேட வேலைத்திட்டமும் தயார்


நாட்டில் எந்தவொரு குழந்தையோ, நபரோ அல்லது குடும்பமோ உணவு நெருக்கடிக் குள்ளானால் இதற்குத் தீர்வு காண விசேட வேலைத்திட்டமொன்று பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் மட்டத்தில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

அத்துடன் ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் பேரில் ஜனாதிபதி அலுவலகத்தில் உணவுப் பாதுகாப்புத் திட்டப் பிரிவொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

011 4354647 மற்றும் 0114354354 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து 5705/5707 ஆகிய நீட்டிப்பு இலக்கங்களினூடாக ஜனாதிபதி அலுவலகத்துக்கு இது தொடர்பான தகவல்களை வழங்க முடியுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. வறுமை காரணமாக மாணவத் தலைவி ஒருவர் மதிய உணவுக்கு தேங்காய்த் துண்டுகளை பாடசாலைக்கு எடுத்துவந்ததாக தேசிய பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பில் 06

# 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட சர்வதேச புத்தகக் கண்காட்சி

## கொழும்பு புத்தக கண்காட்சியை பார்வையிட்ட பின் ஜனாதிபதி தெரிவிப்பு




இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள அரிய மற்றும் வரலாற்று மதிப்புமிக்க புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் உள்ளடங்கிய விசேட புத்தகக் கண்காட்சியொன்றை இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்த 06

# சகல இன மக்கள் சமூகத்தினதும் உரிமைகள் உறுதி செய்யப்படும்

## ஐ.நா உயர்மட்ட கூட்டத்தில் அலி சப்ரி உறுதி




அனைத்து இன சமூகங்களினதும் உரிமைகளை உறுதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமாந்தரமாக நடைபெறும் உயர்மட்ட சிறுபான்மை சமூக கூட்டமொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற 06

# மீனவர்களுக்கு குறைவின்றி எரிபொருள் கிடைக்க ஏற்பாடு

## ஆலோசனை குழு கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் உறுதி



கடற்றொழிலாளர்களுக்குத் தேவையான எரிபொருளை விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதுடன், இதற்கமைய மீனவர்கள் நாளாந்தம் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்குஏற்பாடுகள்செய்யப்பட்டிருப்பதாக கடற்றொழில் அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் 06

## ஜெனீவா மாநாடு; தமிழர் பிரச்சினை; சமாதான முன்னெடுப்பு:

# வடக்கு, கிழக்கு எம்பிமாருக்கு தெளிவுபடுத்தவுள்ள நீதியமைச்சர்



வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜெனீவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது, போர்க்குற்றம் தொடர்பில் வெளியக விசாரணைகள் இலங்கையின் அரசியலமைப்புக்கு முரணானவை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கேள்வி எழுப்பப்பட்டது. "கடந்த 2015 செப்டெம்பரில் 06

## பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள

# இலங்கைக்கு உதவுவதாக வெளிநாட்டு தூதுவர்கள் ஜனாதிபதியிடம் உறுதி



பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக வெளிநாட்டு தூதுவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளனர்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (22) பிற்பகல் நடைபெற்ற வெளிநாட்டு தூதுவர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பின்போதே தூதுவர்கள் 06

## போலி குற்றச்சாட்டுகளை நிராகரிக்கிறோம்

# 'திரிபோஷ' பிரச்சினையை அரசியலாக்க வேண்டாம்

## பாராளுமன்றில் அமைச்சர் கெஹெலிய தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



திரிபோஷ தொடர்பில் பிரச்சினைகள் உள்ளதென்பதை ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் அரசியல் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக அது தொடர்பில் போலியான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள 06

## அலுவலக கடமைக்கு சமுகமளிக்கும் போது

# அரச உத்தியோகத்தர்களுக்கு பொருத்தமான உடைகள்

## புதிய சுற்று நிருபம் – தயாராகிறது



அரச உத்தியோகத்தர்கள் அலுவலகங்களுக்கு கடமைக்காக வருகை தரும் போது அலுவலகத்திற்கு பொருத்தமான உடைகளை அணிவது தொடர்பில் புதிய சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு 06

## சுமார் 07 இலட்சம் டொலர்கள் பெறுமதியான

# அவசர மருந்து மற்றும் மருத்துவ பொருட்கள் இலங்கைக்கு

## அமெரிக்க முன்னணி மருத்துவ நிறுவனம் அனுப்பிவைப்பு



அமெரிக்காவில் இருந்து 7 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக பெறுமதியுடைய அவசர மருந்துகள் மற்றும் மருத்துவ பொருட்கள் இலங்கைக்கு வழங்கப்படுகின்றன.

அமெரிக்காவில் உள்ள உலகின் முன்னணி மருத்துவ நிறுவனம் ஒன்றினால் இந்த மருந்துப் பொருட்கள் வழங்கப்படுவதாக அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகம் அறிக்கை ஒன்றை விடுத்து அறிவித்துள்ளது.

இதன்படி, இலங்கைக்கு 7 லட்சத்து 73 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மருந்து மற்றும் மருத்துவ 06

# நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படாத வகையில் செயற்பட அழைப்பு

## அரச, தனியார் ஊடகங்களிடம் அமைச்சர் பந்துல கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் வருமானத்தில் 86 வீத நிதி அரசாங்க ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்துக்காக செலவிடப்படுவதாகவும் இத்தகைய சூழ்நிலையில் உண்மையான நிலைமையை மக்களுக்கு தெளிவுபடுத்துவதில் ஊடகங்களின் ஒத்துழைப்பு முக்கியமானதென்றும் அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 06

## சுமார் 15 மில். டொலர் பெறுமதியான

# 600 மெ.தொன் அரிசியை வழங்கியது அவுஸ்திரேலியா

## பொருளாதார ரீதியில் பாதிப்புற்றோருக்கு பகிர்ந்தளிக்க ஏற்பாடு



அவுஸ்திரேலியாவினால் நன்கொடையாக அளிக்கப்பட்ட சுமார் 15 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அரிசி இலங்கையை வந்தடைந்துள்ளது.

இந்த அரிசி தொகை தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் விநியோகிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 600 மெட்ரிக் தொன் அரிசி இந்த நன்கொடையில் உள்ளடங்குகிறது. 06

## காணாமல்போன

# பேராதனை பல்கலைக்கழக மாணவன் சடலமாக மீட்பு



கண்டியில் கடந்த வாரம் காணாமல் போன 24 வயதான பேராதனை பல்கலைக்கழக மாணவன் கண்டி மகாவலி ஆற்றங்கரையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்த மாணவன் யக்கல பகுதியைச் சேர்ந்தவரெனவும் பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் கல்வி பயில்பவரெனவும் தெரிவிக்கப்படுகின்றது. 06

# புதிய Gas சிலிண்டர்கள் விநியோகம் இடைநிறுத்தம்

## டிசம்பர் வரை நிறுத்தியது லிற்றோ



உள்நாட்டுச் சந்தையில் புதிய எரிவாயு வெற்று சிலிண்டர்கள், எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை விற்பனை செய்யப்பட மாட்டாது என லிற்றோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களுக்காக, நாட்டில் உள்ள அவர்களது உறவினர்கள் சார்பாக டொலர்களை செலுத்தி எரிவாயு கொள்கலன்களை வழங்கும் வகையில் லிற்றோ எரிவாயு நிறுவனம் செயற்திட்டம் ஒன்றை 06

# IMF உடன் கலந்துரையாட இலங்கை குழு அமெரிக்காவுக்கு

## மத்திய வங்கி ஆளுநர் தலைமையில் ஒக்.06 இல் பயணம்



சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உத்தேச கடன் வசதிகள் தொடர்பில் அதன் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்காக, இலங்கை பிரதிநிதிகள் குழுவொன்று அமெரிக்கா செல்லவுள்ளது.

அடுத்த மாதம் 6ஆம் திகதி வொஷிங்டன் செல்லவுள்ள அவர்கள், அங்கு மேலதிக கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அரசாங்க பிரதிநிதிகள் கலந்து 06

## IMF உடன் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன

# இறுதி உடன்படிக்கை சாத்தியமானதும் அமைச்சரவைக்கு அறிவிக்கப்படும்

## சபாநாயகர் ஊடாக ஜனாதிபதி பாராளுமன்றுக்கு அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) ஏற்படுத்தப்படவுள்ள உடன்படிக்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின் அனுமதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனவும் அந்த அனுமதி கிடைத்ததன் பின்னர் உரிய தரப்பினருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை 06

# எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சில தனியார் கட்டுப்பாட்டில்

## நவம்பர் முதல் அமுல்படுத்த அமைச்சர் திட்டம்



இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 1250 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒரு பகுதியின் கட்டுப்பாட்டினை தனியாருக்கு வழங்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை தனியாருக்கு வழங்குவதற்கான வேலைதிட்டத்தின் மீளாய்வு கூட்டத்தின் போதே அமைச்சர் கஞ்சன விஜேசேகர இவ்விடயத்தை தெரிவித்துள்ளார். 06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# ஈழத்து இஸ்லாமிய இலக்கியத்தின் சிகரம் மெய்ஞ்ஞான அருள் வாக்கி

**தெல்தோட்டை ஊடக மன்றம் மற்றும் அதன் கீழ் இயங்கும் அருள்வாக்கி அப்துல் காதிர் கலை இலக்கியக் கழகம் ஆகியவை இணைந்து நாளைய தினம் (24) ஏற்பாடு செய்துள்ள 'நிமிட வித்துவான் அருள்வாக்கி அப்துல் காதிர்' நினைவு பேருரையினை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

19ம் நூற்றாண்டில் காலனித்துவ ஆட்சிக்குள் சிக்குண்டிருந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் தத்தம் சமயங்கள் மற்றும் கலாசாரங்களைப் புத்துயிர்ப்பிக்கும் நோக்கில் பல அறிஞர்கள், படைப்பாளிகள், கலைஞர்கள்... என பல மேதைகள் தோன்றி பங்களித்து காலத்தால் அழியாத புகழ்பெறும் வரம் பெற்றுள்ளனர். அந்த வரிசையில் 19ம் நூற்றாண்டின் இருகடைத் தசாப்தங்களில் ஈழத்து இஸ்லாமிய இலக்கியத் தமிழ் வரிசையில் அறிஞர் சித்தி லெப்பை போலவே பேசவும் போற்றவும் பட வேண்டிய மேதையே அருள் வாக்கி அல்லா பிச்சை அப்துல் காதிர் புலவர் ஆவார்.

பலரும் இவர் குறித்து இவர் யார்;? என கேள்வி எழுப்பும் சமகால சூழலில் அவரது நினைவு நாளையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுவதில் தெல்தோட்டை மீடியா குழுமம் சார்பாக பேருவகை கொள்கிறோம். ஈழத்து இஸ்லாமிய இலக்கியத்தின் கொடுமுடி என போற்றப்படும் அருள் வாக்கி அப்துல் காதிருப் புலவர் மலையகத்தின் தலை நகராய்த் திகழும் கண்டி மாநகரின் தென் திசையில் 36 கிலோமீற்றர் தொலைவிலுள்ள தெல்தோட்டையின் வீரபுரி எனப்படும் தற்போதைய போப்பிட்டியில் 1866 ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி அல்லாப்பிச்சை ராவுத்தர் மற்றும் ஹவ்வா எனும் இந்திய வம்சாவளி தம்பதியினரின் புதல்வராய்ப் பிறந்தார்.

நான்கு சகோதரர்கள் மற்றும் நான்கு சகோதரிகளுடன் பிறந்த புலவர், தந்தை வழியில் இந்திய வம்சாவளியினராகவும் தாய் வழியில் வெத முகாந்திரம் மாமு நெய்னார் வைத்திய திலகத்தின் வம்சா வழியினராகவும் அடையாளம் காணப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

புவலர் தமது ஆரம்பக் கல்வியை 1860 1871 காலப்பகுதியில் போப்பிட்டிய இஸ்லாமிய மார்க்கக் கல்வி போதிக்கும் மத்ரஸாவிலும் தமிழ் வித்தியாலயத்திலும் கற்றுத் தேர்ந்ததுடன் கண்டியிலுள்ள குயின்ஸ் எகடெமியிலும் கல்வி கற்றுள்ளதாக ஆவணச்சான்றுகள் சான்று பகர்கின்றன. 1877 முதற் கொண்டு இலக்கியத்தின் மீதிருந்த தனது காதலை வெளிப்படுத்தத் தொடங்கிய அறிஞர், 1881 களில் யாழ்ப்பாணத்தில் அருள் வாக்கி எனும் பட்டம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார். புலவரின் இலக்கியத்தின் மீதான ஆர்வத்தை இனங்கண்டு கொண்ட அவரது தந்தை அ.பி ராவுத்தர் உயர்கல்விக்காக புலவரை இந்தியாவிலுள்ள திருப்பத்தூர் தமிழ் வித்தியாலயத்திற்கு அனுப்பினார். அங்கு தமிழ் இலக்கியம் கற்றுத் தேர்ந்த அருள்வாக்கி ஈழத்து இஸ்லாமிய தமிழ் உலகிற்கு அன்று முதல் பங்காற்றத் தொடங்கினார் எனலாம்.

அவ்வகையில் புலவர் குறித்த தெளிவானதும் சுருக்கமானதுமான வரலாற்றுப் பார்வையைச் செலுத்துவது சாலப் பொருத்தமாக அமையும். ஈழத்து இஸ்லாமிய இலக்கிய மரபு மற்றும் பிற இலக்கிய மரபுகளுக்கு காலனிய ஆட்சியின் 1880 /1930 வரையான கால கட்டம் மிக முக்கியமான காலகட்டமாகத் திகழ்கிறது. குறிப்பாக இக்கால கட்டத்தில் 1918 வரை தனது பணியினை அருள்வாக்கிப் புலவர் செய்துள்ளமையைக் காணலாம். முற்றிலும் இலக்கிய மரபு பேணி இலக்கியம் படைக்கும் ஆற்றலைக் கொண்டிருந்த புலவர் நவீனத்தைப் புறக்கணித்துப் பின்னர் இடைக்கால இஸ்லாமிய



மரபில் உறுதியாகக் காலூன்றி நின்ற அதன் இறுதி தலைமுறையின் முக்கியமான ஆளுமையாக இஸ்லாமிய இலக்கிய மரபில் அடையாளம் காணப்படுகிறார்.

இந்த பின்புலத்தில் அருள்வாக்கி குறித்த தேடலை முன்னெடுத்துச் செல்லும் பொழுது முஹம்மத் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாடியகாசிம் புலவரை அடியொட்டிப் பாடிய சந்தத் திருப்புகழ் அவரது இஸ்லாமிய உலகிற்கான முதல் இலக்கிய அடையாளமாக நோக்கப்படுகிறது. அதன் ஓரிரு வரிகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக அமையும் என நினைக்கிறேன்.

" கொத்துற்றம லர்த்துற் றியகுழ லிச்சைக்கெழு பொட்டிட் டொளிர்நுதல் கொட்டத்தினு ரைத்துப் பரிமள முயர்– சேலை...."

குறிப்பாக இப்பாடல்கள் 15ம் நூற்றாண்டின் பின் தமிழில் மேலோங்கியிருந்த சிற்றிலக்கிய மரபிலும் அருள்வாக்கி பெற்றிருந்த ஆழ்ந்த ஞானத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

அந்த வரிசையில் தொடர்ச்சியாகவே ஈழத்து இஸ்லாமிய ஆன்மிகத் துறை மரபின் வளர்ச்சிக்கும் அருள்வாக்கியின் பங்களிப்புகள் பெருமளவில் காணப்படுகின்றன. குறிப்பாக சம காலத்தில் மேலோங்கியிருந்த சூபித்துவ ஆன்ம நெறியில் பெருமுனைப்பு காட்டியுள்ள இவர் காதிரிய்யா தரீக்கா நெறியிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததாக அறிய முடிகிறது. அதைப் பறைசாற்றும் விதமாக புலவரின் சகல நூல்களும் இஸ்லாமிய ஆன்மிகம் பற்றியதாகவும், அல்லாஹ்வையும், முஹம்மத் (ஸல்) அவர்களையும் புகழ்பவையாகவும், வலிமார்களைப் பாடுவதாகவுமே அமையப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் முக்கியமான தூண்களுள் ஒருவராகக் கொண்டாடப்படவும், நினைவு கூரப்படவும் வேண்டிய ஆளுமையே அருள் வாக்கி அப்துல் காதிருப் புலவர் என்பதை இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ள இந்நினைவுப் பேருரையும் களமமைத்துக் கொடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை எனலாம்.

மிக முக்கியமாக புலவரின் இஸ்லாமிய இலக்கியத் தொண்டுகள் சிலவற்றை அவரின் ஆளுமைக்குரிய எடுத்துக் காட்டுகளாக இக்கட்டுரையில் குறித்துக் காட்டுவது சிறப்பானதாக அமையும். அது குறித்துக் கவனம் செலுத்துகையில் தன்பீகுள் முரீதீன் எனும் புலவரின் உரைநடை நூல் இஸ்லாமிய சமூகத்தின் மீதான அக்கறைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். அதாவது 1897ல் அறிஞர் சித்தி லெப்பையின் அஷ்ரானுல் ஆலம் என்ற நூலுக்கு பலராலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டவேளை, அவற்றை மறுத்து சமூகத்தின் மறுஎழுச்சி அல்லது




புத்தெழுச்சியின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் சித்தி லெப்பையின் இஸ்லாமியப் பணிகளுக்குத் துணை நின்றமைக்குச் சான்றாகவும் இப்புத்தகம் வரையப்பட்டதாக அறிய முடிகின்றது.

இந்நூலின் ஊடாகப் புலவர் சம காலத்தில் இஸ்லாமிய சமூகத்தின் மத்தியில் சில முல்லாக்களால் கடுமையாகப் பின்பற்றப்பட்ட மார்க்க விடயங்கள் எனும் மூட நம்பிக்கைகளை களைந்து ஞான ஒளி பாய்ச்ச அறிஞர் சித்தி லெப்பைக்குப் பக்கபலமாக நின்று உழைத்துள்ளதையும் எம்மால் அறிய முடிகின்றது. அந்த வகையில் தன்பீகுள் முரீதீன் என்னும் நூலை இயற்றமிழ் வசன நடைக்கு மாற்ற நூலாசிரியருக்குப் புலவர் உதவியுள்ளமையானது அருள்வாக்கியின் இஸ்லாமிய ஆன்மிகக் கருத்தாடலுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இஸ்லாமிய ஆன்மீகக் கவிஞனென்றும், சந்தத்திருப்புகழ் பாடிய பாவலரென்றும் அடையாளம் காணப்படும், புலவர் மலையின் புலமைச் சொத்து அருள் வாக்கியின் இஸ்லாமிய இலக்கியத் தொண்டுகள் பற்றி கலாபூஷணம் எஸ். எம். ஏ ஹஸனின் கூற்றிலிருந்து நல்ல விளக்கமொன்றைப் பெற முடியுமாக உள்ளது.

'அதாவது தமிழ் இலக்கிய மரபில் சிறந்த தமிழ் இஸ்லாமிய இலக்கியங்களைப் படைப்பதில் தன்னிகரற்றவராகத் தன்னை அருள்வாக்கி ஆக்கிக் கொண்டார். அறபுச் சொற்களையும், இஸ்லாமிய கருத்துக்களையும் இலக்கிய அமைப்பில் புகுத்தி அறபு கவி நயத்தையும் தமிழ் உலகுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் முதன்மை பெற்று விளங்கினார். இவரால் படைக்கப்பட்ட இஸ்லாமிய இலக்கிய பிரபந்தங்களில் இதற்கான சான்றுகள்நிறையவே காணப்படுகின்றன.

இவரது பாடல்கள் பலவற்றில் தேவையான இடத்தில் அறபுச் சொற்களைக் கையாண்டிருப்பதால் இஸ்லாமிய தமிழ் இலக்கிய நயத்தை உள்ளவாறே அனுபவிக்கச் செய்கிறது. அதனால் இலக்கிய நயம் எவ்வித்திலும் குறைவு படாது இஸ்லாமிய தத்துவங்களோடு நிறைவு பெற்றுக் காணப்படுகிறது'. இக்கூற்றானது புலவரின்இஸ்லாமிய இலக்கிய பங்களிப்பின் வகிபாகத்தை செவ்வனே தெளிவூட்டுகிறது எனலாம்.

மேலும் இவர் பற்றித் தேடுகையில் காதிரிய்யா தரீக்காவில் ஈடுபாடு கொண்ட புலவர் தரீக்கா சம்பந்தமாக இடம் பெறும் நிகழ்வுகளின் போதெல்லாம் கவி பாடியுள்ளார். இதனால் இவர் கண்டி தர்ஹா வித்துவான் என்ற சிறப்புப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இது ஆன்மிக ரீதியில் புலவர்க்கு இருந்த ஆர்வத்தினை எடுத்துக் காட்டுகிறது. அதே சமயம் இஸ்லாமிய கல்வி மேம்பாட்டினை முதலாகக் கொண்டு திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றையும் கொண்டு நடத்தியுள்ளார். இது சமூகத்தின் மீதான அவரது அக்கறை மற்றும் ஏனையோருடன் அவர் நெருங்கிப் பழகியமை போன்றவற்றிற்கு ஆதாரமாகக் காணப்படுகிறது எனலாம்.

குறிப்பாக புலவரால் ஆரம்பிக்கப்பட்ட அத்திண்ணைப் பள்ளிகூடமே வித்துவதீப மகா வித்தியாலயமாகவும், இன்று க/ எனசல்கொல்ல முஸ்லிம் மத்திய கல்லூரியாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. அந்தவகையில் புலவரால் விதையிடப்பட்டதே தெல்தோட்டையின் கல்வி அச்சாணி என்பதும் அது இன்று அப்பிரதேசத்தில் பல்லாயிரம் ஆசிரிய பெருமக்கள், அதிபர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என நீண்டு செல்லும் கல்வியியலாளர்களையும், அதற்காக முன்னின்று உழைப்பவர்களையும் தோற்றுவித்துள்ளது எனலாம். அந்தப் பெருமையின் ஆரம்ப கர்த்தா வித்துவதீபம் அ.பி. அப்துல்காதிர் ஆவார்.

தமிழில் எல்லா சந்தங்களிலும் கவிதை புனைந்த இவர் அறபுச் சந்தத்திலும் கவிதை இயற்றியுள்ளமை போற்றுதற்குரிய செயலாகும்.'

அடுத்து புலவரின் இஸ்லாமிய இலக்கிய படைப்புகளில் 'பிரபந்த பஞ்சம்' எனும் நூல் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. இதில் புலவரின் ஆறு நூல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நூலே புலவருக்கான இஸ்லாமிய இலக்கிய உலகின் அடையாளத்தை தூக்கி நிறுத்தியது எனலாம். அந்த வகையில் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள நூல்களாக 'அடைக்கலமாலை'; (அல்லாஹ்வின் சிறப்புகளை கூறி அடைக்கலம் தேடுதல்),'முனாஜாத்து' (முஹம்மத் நபியின் பெயரில் பாடப்பட்டுள்ளது.) 'என கலை வண்ணம்'; (முஹம்மத் நபியின் பெயரில் பாடப்பட்டுள்ளது.) 'எண்கலை வன்மெல்லிசை வண்ணம்' (முஹிய்யத்தீன் ஆண்டகை பற்றி பாடப்பட்டுள்ளது.),'கண்டி பதிற்றுப்பத்தந்தாதி' (கண்டி மீராமக்கம் தர்காவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள செய்ஹு சிஹாபுத்தீன் வலியுல்லாஹ் பெயரில் பாடப்பட்டுள்ளது.) 'அருள் மணிமாலை' (கண்டி சிஹாபுத்தீன் வலியுல்லாஹ் பற்றி பாடப்பட்டுள்ளது.) இவ்வாறாக பல்வேறு இலக்கிய சான்றுகளை இஸ்லாமிய உலகுக்கு பரிசளித்த புலவர் உலக தீபம், முத்தமிழ்ச் சிங்கம், கலை வல்லோன், கல்விக்கடல் போன்ற இன்னும் சில சிறப்புப் பெயர்களாலும் கொண்டாடப்பட்டுள்ளமை ஈழத்து இஸ்லாமிய இலக்கிய மரபில் அவர் கொண்டாடப்பட வேண்டிய அவசியத்தை மீளமீள வலியுறுத்துவதாக அமையப் பெற்றுள்ளது எனலாம்.

இவ்வாறாக ஈழத்து இஸ்லாமிய இலக்கிய மரபின் அச்சாணியாக திகழ்ந்த மெய்ஞான அருள்வாக்கி அல்லாபிச்சை ராவுத்தர் அப்துல் காதிர் புலவர் 1918.09.23 ஆம் திகதி கண்டியில் இறப்பெய்தினார். இறப்பெய்தி நூற்றாண்டுகள் கடந்தாலும் அவரது இலக்கிய சேவை இலக்கியம் உள்ளவரை வாழும் எனும் அளவிற்கு அவர் ஆற்றிய பணிகள் ஏராளம் கொட்டிக் கிடக்கின்றன.


**ஏ.ஜே. காஷிபா பர்வின்**
B.A (Hons) in History,
பேராதனை பல்கலைக்கழகம்.


## மழை வெள்ளம்; பாக். பொருளாதார நிலையை மேலும் சீர்குலைந்துள்ளது

### 30 பில்லியன் அமெ. டொலர் சேத மதிப்பீடு



சீர்கேடு அடைந்திருக்கும் பாகிஸ்தான் பொருளாதாரத்தை மீளவும் கட்டி எழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியமும் நட்பு நாடுகளும் எடுத்துவரும் முயற்சிகளுக்கு சமீபத்திய கடும் மழை, வெள்ளம் மோசமான பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக ஆசியன் லைட் இன்டர்நெஷனல் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு நிதி உதவி வழங்குவதற்கு முன்வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியம் 1.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது. மேலும் கட்டார், சீனா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு குடியரசு மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் பாகிஸ்தானுக்கு இந்நிதியாண்டில் நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாகிஸ்தான் மத்திய வங்கியில் சவூதி அரேபியா பெருமளவில் பண வைப்புகளை மேற்கொள்ளும் என எதிர்பார்ப்பதாக அந்நாட்டின் நிதியமைச்சர் மிப்டாஸ்மாயில் கூறியுள்ளார்.

இவை பாக். நிதி நிலைமைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பில் சமீபத்திய மழையும் வெள்ளமும் பெரும் பின்னடைவை உருவாக்கியிருப்பதாக இச்செய்திச் சேவை கூறியுள்ளது.

சமீபத்திய மழை வெள்ளம் பாகிஸ்தானின் 80 மாவட்டங்களில் மிகக் கடுமையான சேதங்களை ஏற்படுத்தியிருப்பதாகவும் மொத்தம் 118 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் 33 மில்லியன் பாகிஸ்தானியர் அகதிகளாக இடம்பெயர்ந்திருப்பதாகவும் தெரிவித்திருக்கும் இச் செய்திச் சேவை, 30 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என சேதம மதிப்பிடப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறது.

## இந்தியாவின் மூன்றாவது செமிகண்டக்டர் பன்நாட்டு நிறுவனம் குஜராத்தில்




இந்தியாவின் வேதாந்தா நிறுவனமும் தாய்வானைச் சேர்ந்த பொக்ஸ் கொன் நிறுவனமும் இணைந்து குஜராத் மாநிலத்தில் 19.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் செமி கண்டக்டர் தயாரிப்பு நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்துக்கு செல்லவிருந்த இத் தொழிற்சாலையை கடும் முயற்சியின் பின்னர் தமது மாநிலத்துக்கு கொண்டு வந்ததாக தெரிவித்திருக்கும் குஜராத் மாநில முதல்வர் பூபேந்திரபாய் பட்டேல், இத்திட்டம் ஒரு இலட்சம் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் தமது அரசு இத்திட்டம் பூர்த்தியாவதற்கு தேவையான சகல ஒத்துழைப்புகளையும் வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

உலக செமி கண்டக்டர் சந்தையில் முதலிடத்தை பெற்றுக் கொள்வதற்கு அமெரிக்கா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் முயற்சித்து வருகின்றன.

இந்தியாவும் தமது சுயதேவையை பூர்த்தி செய்யவும் ஏற்றுமதியில் ஈடுபடவும் முயற்சித்து வருகிறது. இதன் பொருட்டு செமிகண்டக்டர் உற்பத்தியல் ஈடுபடவிரும்பும் நிறுவனங்களுக்கு பத்து பில்லியன் டொலர் பெறுமதியான ஊக்குவிப்புக்களை வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

## அவுஸ்திரேலிய யுத்தப் பயிற்சியில் இந்தியா பங்கேற்பு



அவுஸ்திரேலியாவில் இரண்டு வாரகாலத்துக்கு நடைபெறும் கடற்படை யுத்தப் பயிற்சியில் கலந்து கொள்வதற்காக ஐ.என்.எஸ். சத்புரா என்ற கடற்படை போர்க்கப்பலும் கடல் ரோந்து விமானமும் கடந்த 12ம் திகதி அவுஸ்திரேலிய டார்வின் கடற்படைத் தளத்தை சென்றடைந்ததாக இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இருபது நாடுகளைச் சேர்ந்த கடற்படை வீரர்கள் கலந்து கொள்ளும் இப்பயிற்சி டார்வின் துறைமுகத்திலும் கடலிலும் நடைபெற்று வருகிறது. கக்காடு – 2022 எனப் பெயரிடப்பட்டுள்ள இப்பயிற்சியில் இந்திய போர்க்கப்பல்கள் உட்பட 15 போர்க்கப்பல்கள், 30 போர் விமானங்கள் மற்றும் மூவாயிரம் படைவீரர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இதே சமயம் டார்வினில் பிரமாண்டமாக நடைபெற்று முடிந்த எக்சர்சைஸ் பிட்ச் பிளெக் 22 என்ற கடல், ஆகாய யுத்தப் பயிற்சியில் இந்தியாவும் கலந்து கொண்டிருந்தது. 17 நாடுகள் கலந்து கொண்ட இப்பயிற்சியில் 2,500 வீரர்கள் பங்கெடுத்துக் கொண்டனர்.

நூறு விமானங்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன. இப்பயிற்சியில் இந்திய விமானங்களும் கப்பல்களும் பங்கேற்றிருந்தன.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 23 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்



**தொழுகை நேரம்**

23 முதல் 26 வரை

சுபஹ் - 04.44
லுஹர் - 12.03
அஸர் - 03.16
மஃரிப் - 06.07
இஷா - 07.17

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் புரட்டாசி 6

ராகுகாலம் : பகல் : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை

யோகம்: மரணசித்த யோகம்

திதி: திரையோதசி

**இராசி பலன்கள்**

மேஷம் - சுகம்
ரிஷபம் - நிறைவு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - செலவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - பாராட்டு

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)





ஜனாதிபதி நேற்று (22) பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்று வரும் 23 ஆவது கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியை பார்வையிடுவதற்காக சென்றிருந்தார். இதன்போது கண்காட்சி வளாகத்துக்கு வருகை தந்திருந்த பொது மக்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

# மலேஷியாவில் 10,000 வேலைவாய்ப்பு ஒப்பந்தம் ஒக்டோபர் மாதம் கைச்சாத்து

### சம்பளம், ஒப்பந்த காலஎல்லை, விதிமுறைகள் குறித்தும் தீர்மானிக்கப்படும்

மலேஷியாவில் இலங்கையருக்கு 10,000 வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கைச்சாத்திடப்படவுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இதற்கென மலேசிய மனித வள அமைச்சர் எம்.சரவணன் மற்றும் மலேசிய தொழிலாளர் நடவடிக்கைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட ராஜதந்திரிகள் ஒக்டோபர் மாதத்தில் இலங்கைக்கு வருகை தரவுள்ளதோடு, பத்தாயிரம் வேலை வாய்ப்புகளுக்கான துறைகள், ஒப்பந்த காலஎல்லை, சம்பளம் உள்ளிட்ட விதிமுறைகள் குறித்தும் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களை இலங்கையர்களுக்கு பெற்றுக்கொடுப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, நாட்டிலுள்ள மலேசிய உயர்ஸ்தானிகர் டான் யேங் தாய்யுடன் கடந்த 22 ஆம் திகதி



தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் நடைபெற்ற சந்திப்பில் நீண்ட நேரம் கலந்துரையாடினார். அமைச்சர் மலேசிய அரசிடம் கடந்த ஜூன் மாதம் 23ஆம் தேதி

06

# வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு: ஜனவரி மாதம் முதல் ஆரம்பம்

### 5 மாதங்களுக்கு சேவைகள் நிறுத்தம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தியாவின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படுமென ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஜனவரி மாதம் முதல் ஐந்து மாதங்களுக்கு வடக்குக்கான ரயில் சேவைகள் நிறுத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மக்களுக்கு சிறந்த ரயில் சேவையை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று தமிழ் பத்திரிகைகளின் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரயில் சேவைகள் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

அரச ஊழியர்களின் நலன் கருதி காங்கேசன்துறைக்கும் கிளிநொச்சிக்குமிடையில் விசேட ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு அது சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதே வேளை வடக்குக்கான இரவு சொகுசு ரயில் சேவைகளும் நடைமுறையில் உள்ளன என்றும் அவர்

06

# வெளி ஆட்களின் குரல் பதிவுகளை சபையில் ஒலிக்கச் செய்வது தவறு

### சபாநாயகர் சபையில் வலியுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த வேறு எவரும் பாராளுமன்றத்தில் உரையாற்ற முடியாது. வெளியாட்களின் குரல் பதிவுகளை சபையில் ஒலிவாங்கியில் ஒலிக்கவிடுவதும் தவறானதென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு அறிவுறுத்தினார்.

பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து சுயாதீனமாக செயற்பட தீர்மானித்து எதிர்க்கட்சியிலமர்ந்து செயற்படும் கே,பி.எஸ். குமாரசிறி சபையில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையில், பொலன்னறுவை விலச்சிய கல்வி வலயத்தில் பாடசாலை மாணவர்கள் உணவு உட்கொள்ளாமல் மயங்கி விழுந்துள்ளனர். அதேபோன்று கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொடை கல்வி வலயத்தில் மாணவர் ஒருவர் தேங்காய்

06

# கதிர்காமத்தில் மத ஆசீர்வாத பூஜைகள்

எதிர்வரும் 73 வது இராணுவ ஆண்டு நிறைவு மற்றும் இராணுவ தினத்தை முன்னிட்டு (ஒக்டோபர் 10) அனைத்து மத ஆசீர்வாத நிகழ்வுகள் புனித கதிர்காமம் கிரிவெஹர மற்றும் முருகன் ஆலய வளாகத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்றது.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே கலந்து கொண்டதுடன், அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களும் கலந்து கொண்டனர்.



முருகன் ஆலய ஆசீர்வாதத்திற்காக இராணுவ கொடிகளை தளபதி வழங்கினார்.

06

# 03 அமைச்சு செயலாளர்கள், ஜப்பானுக்கான தூதுவருக்கு உயர்பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி

மூன்று அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் தூதுவர் ஒருவரின் நியமனங்களுக்கு பாராளுமன்ற உயர்பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி (20) வழங்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய, ஜப்பானுக்கான புதிய தூதுவராக ரொட்னி மனோரஞ்சன் பெரேராவின் நியமனத்துக்கு உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளராக

06

# சர்வ மத வழிபாட்டு தலங்களுக்கும் சூரிய சக்தி மின்சாரக் கட்டமைப்பு

### அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவிப்பு

**தெஹிவளை, கல்கிஸ்ச விசேட நிருபர்**

சகல மத வழிபாட்டுத் தலங்களிலுமுள்ள மேல் தளங்களில் சூரிய சக்தி மின்சாரத்துக்கான இணைப்பை வழங்குவதற்கான மாற்றுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார்.

அனைத்து மத வழிபாட்டுத் தலங்களான பௌத்த விசாரைகள் , இந்து ஆலயங்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ ஆலயங்களில் மின்சார கட்டணப் பட்டியல் இம்மாதத்திலிருந்து மும்மடங்காக அல்லது கடந்த பட்டியலைவிட 90 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவை சம்பந்தமாக சர்வமதத் தலைவர்கள் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர மற்றும்



இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்தவுடனும் (21) அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அமைச்சரை சந்தித்த சர்வமதத் தலைவர்களும் அமைச்சரிடம் தெரிவிக்கையில், அதிகரிக்கப்படும் மின் கட்டண பட்டியலை செலுத்த முடியாதுள்ளதாகவும் மதவழிபாடுட்டுத்தலங்கள் எவ்வித வருமானம் இல்லாத கட்டடங்களென்றும் இங்கு மதக் கடமைகளுக்காகவே மின்சாரம் உபயோகப்படுத்துவதாகவும். கடந்த காலங்களில் ஓர் சிறிய தொகையை வாடகையாக செலுத்தி வந்தோமென்றும் தெரிவித்துள்ளனர். இதற்கு மாற்றுத் திட்டமாகவே சகல மத வழிபாட்டுத் தலங்களிலும் சூரிய சக்தி மின்சாரத்துக்கான இணைப்பை வழங்குவதாக அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார்.

# யாழில் பண்டிதர் க.வீரகத்தி நூற்றாண்டுப் புலமைப் பகிர்வு

பண்டிதர் க.வீரகத்தி நூற்றாண்டுப் புலமைப் பகிர்வு நிகழ்வு ஒக்டோபர் 02ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் யாழ்ப்பாண, ஆனைப்பந்தி குருகுல மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.



"பண்டிதர் க.வீரகத்தி நூற்றாண்டுப் புலமைப்பகிர்வு" என்னும் தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, பேராசிரியர் செ.யோகராசா, கவிஞர் சோ.பத்மநாதன், முனைவர் க.இரகுபரன், தெ.மதுசூதனன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்கள். நன்றி உரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச்செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்தவுள்ளார் என தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

# நேத்ரா டிவி சாளரம் நிகழ்ச்சியில் இளநெஞ்சன் முர்ஷிதீன்



நேத்ரா தொலைக்காட்சில் நாளை சனிக்கிழமை (24) காலை 8.30 க்கு ஒளிபரப்பாகவுள்ள "சாளரம்" நிகழ்ச்சியில் பிரபல கவிஞரும் வலம்புரி கவிதா வட்ட செயலாளருமான மாளிகாவத்தை இளநெஞ்சன் முர்ஷிதீன் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது .

சிரேஷ்ட ஊடகவியலாளராகவும் விளங்கும் முர்ஷிதீன் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு பல சர்வதேச ஊடக மாநாடுகளிலும் பங்கேற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

திகதி 21.09.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4885
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,926,280.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 2 4 1 9 1 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,647,129.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 194
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,037,860.00
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 47 54 59 62
விசேட இலக்கினம் ரிஷபம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,908,678.40

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3127
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,582,760.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 02 18 25 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,006,161.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1340
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,757,860.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 5 2 0 7 8 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,897,364.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 915
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,499,880.00
வெற்றி இலக்கினம் R வெற்றி இலக்கங்கள் 15 60 63 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 126,477,931.20

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1233
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,380,020.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 271,735,790.00
ஆங்கில எழுத்து M சுப்பர் நம்பர் 22 வெற்றி எண்கள் 05 32 41 71
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321
சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 26

### குறள் தரும் சிந்தனை

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல்

அவை நடுவில் பேசப் பயப்படுகிறவன், என்னதான் அரிய நூல்களைப் படித்திருந்தாலும் அந்த நூல்கள் அனைத்தும் போர்க்களத்தில் ஒரு பேடியின் கையில் உள்ள கூர்மையான வாளைப் போலவே பயனற்றவைகளாகி விடும்.

# மக்களை ஏமாற்றும் வியாபாரத் தந்திரம்!

இலங்கையில் உணவுப் பொருட்களின் விலைகள் பல மடங்காக உயர்ந்து விட்டன. அரிசி உட்பட்ட தானியங்கள், உபஉணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள் போன்ற அனைத்து உணவுப் பொருட்களுக்குமே விலைகள் கடுமையாக அதிகரித்து விட்டன. உணவுப் பொருட்களின் விலையேற்றத்தைச் சமாளிக்க முடியாமல் மக்கள் சிரமப்படுகின்றனரென்பதை மறுப்பதற்கில்லை.

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியே இதற்கான காரணமாகும். அதேவேளை பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதற்கான காரணிகளும் பலவாகும். இலங்கையில் வருடக்கணக்கில் கொவிட் தொற்று தாக்கம் நிலவியது. கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கும், அத்தொற்றினால் பீடிக்கப்பட்ட மக்களைக் குணப்படுத்துவதற்குமென அரசாங்கம் பெருந்தொகை நிதியைச் செலவிட்டது.

அவ்வேளையில் கொவிட் தடுப்பு நடவடிக்கைக்கான செலவினங்கள் பற்றி அரசாங்கம் பொருட்படுத்தியதில்லை. மக்களின் பாதுகாப்பு மட்டுமே பிரதானம் என்ற உறுதிப்பாட்டிலேயே அரசாங்கம் கொவிட் தடுப்பு நடவடிக்கைக்காக பெருந்தொகை நிதியைச் செலவிட்டது. நீண்ட கால முடக்கத்தினால் வருமானம் இழந்திருந்த மக்களுக்கு பணஉதவி வழங்குவதற்காக அரசு செலவிட்ட நிதி ஏராளம். அத்துடன் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த குடும்பங்களுக்கு உணவு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையும் அரசினால் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி உருவாகுவதற்கான பிரதான காரணி இதுவேயாகும். அத்துடன் கொவிட் தொற்று காரணமாக சுற்றுலாத்துறையும் முடங்கிக் கொண்டதனால் நாட்டுக்கான அந்நிய செலாவணி வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தது. அதே சமயம் கடந்த அரசாங்க காலத்தில் தவறான பொருளாதாரக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டதும் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணமென்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுப் பொருட்களின் விலை மாத்திரமன்றி அன்றாட பாவனைப் பொருட்கள் அனைத்தினதும் விலையும் உயர்ந்து விட்டது. பொருட்களின் விலையேற்றத்துக்கு நியாயமான காரணங்கள் ஒருபுறம் இருந்தாலும், வியாபாரிகளில் பலர் கொள்ளை இலாபம் கருதி தங்களது சுயவிருப்பத்தின்படி பொருட்களின் விலைகளை அதிகரித்து வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறி உட்பட பல்வேறு பொருட்களின் விலையேற்றத்துக்கு வியாபாரிகளே காரணமெனக் கூறப்படுகின்றது. மலையகப் பகுதியிலுள்ள தோட்டங்களில் விளைகின்ற மரக்கறிகளை செய்கையாளர்களிடமிருந்து மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்கின்ற வியாபாரிகள், அம்மரக்கறி வகைகளை கொழும்பு மற்றும் நகர்ப்பகுதிகளுக்குக் கொண்டு வந்து அதிக விலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

இதன் காரணமாக செய்கையாளர்களுக்கு மிகக் குறைவான வருமானமே கிடைக்கின்றது. அவர்கள் வறுமையிலேயே வாழ்கின்றனர். ஆனால் மரக்கறிகளை கொள்வனவு செய்து விற்பனை செய்கின்ற வியாபாரிகளோ அதிக இலாபமீட்டி வருகின்றனர். அதிக விலை கொடுத்து மரக்கறி வகைகளை வாங்குகின்ற மக்களும் இதனால் பாதிக்கப்படுகின்றனர். மரக்கறி வகைகளின் விலைகளை சரிவு நிலைக்குக் கொண்டு வருவதற்கு இத்தகைய வியாபாரிகள் ஒருபோதுமே இடமளிப்பதில்லை என்பதுதான் உண்மையாகும்.

மரக்கறி வகைகளுக்கு மாத்திரமன்றி பல்வேறான உணவுப் பொருட்களின் விலையேற்றத்துக்கு வியாபாரிகளே காரணமாக உள்ளதாக தெரியவருகின்றது. அதாவது வியாபாரிகளில் பலர் தாங்கள் நினைத்தவாறு பொருட்களின் விலைகளை நிர்ணயிப்பவர்களாக உள்ளனர். நுகர்வோருக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளையிட்டு வியாபாரிகளில் பலர் ஒருபோதுமே அக்கறை கொள்வதில்லை. பொருளாதார நெருக்கடி வேளையைப் பயன்படுத்தி அதிக இலாபமீட்டுவதிலேயே வியாபாரிகளில் பலர் கண்ணுங்கருத்துமாக உள்ளனர்.

உணவுப் பொருட்களின் விலையுயர்வுக்கு பொருளாதார நெருக்கடி மாத்திரம் காரணமல்ல, வியாபாரிகள் பலரின் சுயநலன்மிக்க செயற்பாடுகளுமே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. இவ்வாறான முறைகேடுகளுக்கு தொடர்ந்தும் இடமளிப்பது முறையல்ல. அவ்வாறு இடமளித்தால் உணவுப் பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது முடியாத காரியமாகி விடலாம். இவ்விடயத்தில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமென்றே மக்கள் கருதுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியை காரணமாகக் கூறியவாறு நாம் எந்நாளும் அலட்சியமாக இருந்துவிட முடியாது. பொருளாதார நெருக்கடியைச் சாதகமாகப் பயன்படுத்தியபடி கொள்ளை இலாபமீட்டுகின்ற வியாபாரிகள் விடயத்தில் மிகவும் அவதானமாக இருப்பது அவசியமாகும். உணவுத் தயாரிப்புக்கான பொருட்களுக்கு விலைகள் அதிகரிக்கின்ற போது உற்பத்திப் பொருட்களின் விலைகளை வியாபாரிகள் அதிகரிக்கின்றனர். ஆனால் உணவுத் தயாரிப்புக்கான பொருட்களின் விலைகள் குறைவடைகின்ற போது உணவு உற்பத்திப் பொருட்களின் விலைகளை அவர்கள் குறைப்பதில்லை.

இவ்வாறான விடயங்கள் குறித்து அரசாங்கம் தீவிர கவனம் செலுத்துவது அவசியம். பொதுமக்கள் பாதிக்கப்படாத விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

editor.tkn@lakehouse.lk

# உலக பொருளாதாரம், பாதுகாப்பை SCO மாநாட்டில் முன்னிலைப்படுத்திய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி

ஷங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் (Shanghai Cooperation Organisation_ SCO) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றிருந்தார். உஸ்பெக்கிஸ்தானில் கடந்த15ஆம், 16ஆம் திகதிகளில் இம்மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ள உஸ்பெகிஸ்தான் சென்றிருந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு அங்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தது.

உஸ்பெகிஸ்தானில் உள்ள சமர்கண்ட் நகரத்தில் இந்த மாநாடு நடைபெற்றது. ரஷ்ய_ உக்ரைன் போருக்குப் பின்னர் பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோர் கலந்து கொண்ட முக்கியமான முதல் மாநாடு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஷங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு என்பதுதான் உலகிலேயே மிகப்பெரிய கூட்டமைப்பு ஆகும். ஐரோப்பா, ஆசியாவைச் சேர்ந்த பல்வேறு நாடுகளை உள்ளடக்கிய கூட்டமைப்பு இதுவாகும். மக்கள் தொகை அடிப்படையில் இதுதான் உலகிலேயே பெரிய கூட்டமைப்பாகக் கருதப்படுகிறது. உலகின் 60 சதவீத மக்கள் தொகையினர் இந்த கூட்டமைப்பின் கீழ் வருகிறார்கள். அதேபோல் உலகின் 60 சதவீத நிலப்பரப்பு இந்த கூட்டமைப்பின் கீழ் வருகிறது. உலகின் 30 சதவீத ஜி.டி.பி இந்த கூட்டமைப்பின் கீழேயே வருகிறது.

இந்த அமைப்பில் இந்தியா முக்கியமான உறுப்பு நாடு ஆகும். சீனா, இந்தியா, ரஷ்யா, பாகிஸ்தான், ஈரான் ஆகியவை இந்த கூட்டமைப்பில் இருக்கும் முக்கியமான உறுப்பு நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2020_ 2021 காலகட்டத்தில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே கடும் எல்லைப் பிரச்சினை நிலவியது. அப்போது இந்த SCO மாநாடு பிரச்சினையின் தீவிரத்தைத் தணிப்பதில் முக்கிய காரணமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. பிரதமர் மோடி இந்த மாநாட்டில் உரையாற்றினார். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை பிரதமர் மோடி தனியாக சந்தித்தும் பேச்சு நடத்தியுள்ளார்.



கடந்த 2001 ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு தொடங்கப்பட்டது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், சீன ஜனாதிபதி ஜி ஜிங்பிங், மற்றும் பாகிஸ்தான் தாக்கு தாக்குதல் சம்பவத்திற்குப் பிறகு, முதன் முறையாக சீன ஜனாதிபதியை நேரில் சந்தித்து பேசியுள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. அதே போல உக்ரைன்_ ரஷ்யா இராணுவ நடவடிக்கைகளுக்குப் பிறகு ரஷ்ய ஜனாதிபதியை பிரதமர் மோடி நேரில் சந்தித்து பேசியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 2020 கல்வான் பள்ளத்தாக்கு தாக்குதல் நிகழ்வுக்கு பின்பு, முதல் முறையாக சீன ஜனாதிபதியுடன் ஒரே மேடையில் பிரதமர் மோடி பங்கேற்றுள்ளார்.

கொரோனா காலத்தில் இந்த மாநாடு ஒன்லைனில் மட்டுமே நடந்து வந்தது. முதன்முறையாக கொரோனாவிற்கு பின்பாக இந்த மாநாடு நேரடியாக நடந்துள்ளது. பொருளாதாரம், பாதுகாப்பு, காலநிலை மாற்றம் பற்றி பிரதமர் மோடி உரையாற்றியுள்ளார். சர்வதேச தீவிரவாதம், எல்லை தாண்டிய தீவிரவாதம் பற்றியும் அவர் பிரஸ்தாபித்துள்ளார். நேரடியாகவும், மறைமுகமாகவும் தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக பிரதமர் மோடி தனது உரையில் குறிப்பிட்டுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.



## உஸ்பெக்கிஸ்தானின் சமர்கண்ட் நகரில் சிறப்பாக நடந்தேறிய ஷங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாடு (Shanghai Cooperation Organisation–(SCO)



பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ஆகியோரும் இம்மாநாட்டில் நேரில் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி "உலகம் கொவிட் 19 தொற்றை முறியடித்து வருகிறது. கொரோனா தொற்று மற்றும் உக்ரைன்_ ரஷ்யா இடையேயான போரால் உலகளாவிய விநியோகச் சங்கிலியில் நெருக்கடி ஏற்பட்டது. பொருட்கள் உற்பத்தியின் மையமாக இந்தியா மாற விரும்புகிறது. ஒவ்வொரு துறையிலும் புதுமைகளை நாங்கள் ஆதரிக்கிறோம். இன்று இந்திய நாட்டில் 70,000 இற்கும் மேற்பட்ட ஸ்டார்ட் அப்கள் மற்றும் 100 யூனிகார்ன்கள் உள்ளன" என்று குறிப்பிட்டார்.

2020 இடம்பெற்ற கல்வான் பள்ளத்

இது இவ்விதமிருக்க இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். உலகம் ஆற்றல் மற்றும் உணவு நெருக்கடியை எதிர்கொள்வதாக இதன் போது அவர் எடுத்துரைத்துள்ளார்.

பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் உஸ்பெகிஸ்தான் ஜனாதிபதியால் உருவாக்கப்பட்ட வர்த்தக இணைப்பு மற்றும் கலாசாரம் என்பன முக்கியமானவை என ஜெய்சங்கர் குறிப்பிட்டார். பிராந்திய ஒத்துழைப்பு மூலம் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் குறித்தும் அவர் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

மேலும் ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை ஜெய்சங்கர் இதன் போது மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

# தேர்தல்மைய அரசியலில் இருந்து விடுபட்டு தேசமைய அரசியலை உருவாக்க வேண்டும்

தேர்தல்மைய அரசியலில் இருந்து விடுபட்டு தேசமைய அரசியலை உருவாக்க சகல கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். தேர்தல் மைய அரசியல் நாட்டில் நல்ல பல திட்டங்கள் வருவதற்கு தடையாக இருக்கின்றது என்பதை எல்லோரும் புரிந்தாக வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எம். எம். முஷாரப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசிய சபை அமைத்தல் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுமாக இருந்தால் அதில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற போது முன்மாதிரியான சட்டங்கள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதனூடாக முன்மாதிரியான பொருளாதார திட்டங்கள் ஏற்பட்டு நாடு நல்லதொரு நிலைக்கு செல்லும் என்ற ஒரு எதிர்பார்ப்பு எம்மிடம் இருந்தது.

ஆனால் சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கப்படுவதற்கான பேச்சுவார்த்தைகள் பலவும் இடம் பெற்ற போதிலும் கூட தேர்தலை மையப்படுத்தியதான போக்கு காரணமாக சர்வ கட்சி அரசாங்கம் என்ற மிகப் பெரும் வாய்ப்பினை இந்தப் பாராளுமன்றம் இழந்து நிற்கின்றது.

தேசிய சபை என்ற சொல்லாடல் போலவே சர்வ கட்சி அரசாங்கம்,புதிய தொரு தேர்தல் என்ற மூன்று சொல்லாடல்களும் சமகாலத்தில் அதிகமாக பாவிக்கப்படுகின்றன.

ஒரு தேர்தலை நோக்கிய நகர்வானது வெறுமனே அரசியல் ஆதாயத்திற்கான முயற்சியாக இருக்குமே அல்லாமல் நாட்டின் மீது நேசம் கொண்ட சிந்தனையாக இருக்காது. இலங்கையின் மிகப்பெரும் அபத்தங்களில் ஒன்று தேர்தல்மைய அரசியலாகும். இங்கு தேசமைய அரசியல் இல்லாமையாகும்.

இந்தியா மற்றும் தாய்லாந்து நாடுகளில் தேசிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது இவ்வாறானதொரு தேசிய சபையை



## சகல கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்கிறார் முஷாரப் எம்.பி

பாராளுமன்றத்தில் உருவாக்கி அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பங்கேற்புடன் நாட்டைக் கட்டியெழுப்பியமைக்கு இந்த இரண்டு நாடுகளையும் உதாரணமாகச் சொல்வேன்.

அதே போன்று பிஜியில் ஏற்படுத்தப்பட்ட சபையும் ஒரு பொருளாதார தேசிய சபையாக உருவாக்கப்பட்டு அதனூடாக அந்த நாட்டை நல்லதொரு நிலைக்குக் கொண்டு வந்ததையும் நான் இங்கு நினைவு கூருகின்றேன். எனவே இந்த தேசிய சபையினூடாக ஒரு இடர்பாடு மிகுந்திருக்கின்ற நிலையில் ஒரு தீர்வை நோக்கி நகர்கின்ற முயற்சி பாராட்டத்தக்கது.

வளர்ச்சி அடைந்த நாடுகளிலே மிகப் பெரிய பின்னடைவை சந்தித்த பின்னர் தான் பெரும் பாய்ச்சலுடன் அந்த நாடுகள் முன்னேறி இருக்கின்றன. ஜப்பானின் ஹிரோஷிமா நாகசாகி நகரங்கள் தாக்கப்பட்டபோது அடுத்த தலைமுறையும் பாதிக்கப்படும் ஆபத்து வேறு எந்த நாடுகளுக்கும் ஏற்படவில்லை. ஹிரோஷிமா, நாகசாகி போன்ற நகரங்களில் போடப்பட்ட குண்டுகள் அம்மக்களை மட்டும் அல்ல அடுத்து வரும் இரண்டு மூன்று தலைமுறைகளையும் பாதிக்கின்ற நிலைமை இருந்த போதும் தமது தவறுகளை ஒத்துக் கொண்டு,நமக்கு அநியாயம் செய்தவர்களை பழிதீர்ப்பதை விடுத்து நாம் எப்படி இந்த நிலையிலிருந்து முன்னேறலாம் என்பது பற்றி சிந்தித்தார்கள். அதனால்தான் மிக முன்னேறிய நாடாக அவர்கள் மாறி இருக்கின்றார்கள்.

இடர்பாடு நமக்கு இன்று மிக முக்கியமான ஒரு பிரச்சினையாகும்.நாம் சில ஆபத்தான இடர்பாடுகளையும் சந்தித்திருக்கின்றோம். அவற்றினை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று நமக்கு ஏற்பட்டிருக்கின்ற இவ்வாறான ஒரு இடர்பாட்டு நிலைக்கு சுதந்திரத்திற்கு பின்னரான பலரும் காரணம் என்று சொல்லப்படுகின்ற நிலையில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது.நிச்சயமாக அவர்களது பிழையான தீர்மானங்கள் நாட்டுக்கு நெருக்கடியை கொடுத்திருக்கின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

மக்கள் அவதிப்படுகிறார்கள் உண்மை. நாங்கள் ஒரு விடயத்தை புரிந்தாக வேண்டும். கடந்த வாரம் செக் குடியரசு தலைநகரத்தில் சுமார் எழுபதாயிரம் பேர் கூடி எரிசக்தியின் விலை அதிகரிப்புக்கு எதிராக போராடியிருக்கின்றார்கள்.

இன்றைய உலகத்தை நாம் உற்று நோக்க வேண்டும். உக்ரயனுடைய யுத்தத்துக்குப் பின்னர் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

சீன நாடு எதைச் செய்த போதும் முன்னேறிக்கொண்டிருந்த நாடு என்பது எல்லோருக்கும் தெரியும். பொருளாதார ரீதியில் முன்னொரு போதும் இல்லாத வகையில் சீனா பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது என்பதை புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

அதேபோன்று ஐரோப்பிய யூனியனுக்கு கொடுக்கின்ற எரிசக்தியை நிறுத்தப் போவதான எச்சரிக்கையை ரஷ்யா விடுத்துக் கொண்டிருக்கின்றது.

எனவே உலகத்தில் பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கும்,பொருட்களின் விலைகள் அதிகரிப்பதற்கும் இப்போது காலம் வந்துள்ளது.

உலகம் மிகப்பெரும் ஆபத்தை சந்திக்கவுள்ளது.குறிப்பாக இலங்கையும் சந்திக்க உள்ளது.இந்த ஆபத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதற்கு, இந்தத் துயரத்தில் இருந்து மீட்சி பெறுவதற்கு வழி என்ன என்று சிந்திக்கின்றபோது இந்தத் தேசிய சபை ஒன்றே நமக்கு முன்னால் உள்ள தீர்வாகும்.

இந்தத் தேசிய சபையூடாக எத்தகைய பங்களிப்புகளை இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வழங்க வேண்டும்,கட்சித் தலைமைகள் எவ்வாறு பொறுப்புத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற தெளிவு இருக்க வேண்டும்.

தேர்தல் முறையில் நல்லதொரு முடிவுக்கு வாருங்கள்,கட்சிகள் சேர்ந்து ஒரு நல்ல முடிவுக்கு வர முடியாவிட்டால் சர்வஜன வாக்கெடுப்புக்கு போவோம் என்று ஜனாதிபதி சொல்லியிருக்கின்றார். எனவே அது நல்ல விடயம்.

மாகாணங்ளுக்கென்று இருந்த ஒரே அதிகாரம் மாகாண சபையாகும், சமஷ்டி வரை கேட்டுக் கொண்டிருந்த மக்களுக்கு ஒரு ஆறுதல்தான் மாகாண சபை ஆகும். மகாண சபை திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக கையை உயர்த்திவிட்டு இப்போது புதிய தேர்தல் சட்டத்தை எதிர்ப்போம் என்பதான இந்தப் பொய் கோஷங்களைப் பேசாமல் நாட்டுக்கு நல்லதைச் செய்ய வாருங்கள்.

எல்லோரும் தவறிழைத்திருக்கிறோம். இனிமேலாவது அந்தத் தவறிவிருந்து விடுபடுங்கள்.

நாம் எடுத்த தீர்மானங்கள் பிழையாக இருக்கலாம். அந்தத் தவறுகளை ஒத்துக் கொண்டு தேசிய சபையினூடாக நல்ல பல சட்டங்களைக் கொண்டு வாருங்கள். பொருளாதாரத் திட்டங்களைக் கொண்டு வாருங்கள்.

எஸ்.எம்.அறூஸ்...





# அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீனின்...

## 35 வருட கால சேவை நலன் பாராட்டு விழா



அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீனின் கடந்த 35 வருட கால சேவையைப் பாராட்டி கண்டியில் நடத்தப்படும் மாபெரும் சேவை நலன் பாராட்டு விழா கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலில் 25.09.2022 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அஸர் தொழுகையுடன் இடம்பெறவுள்ளது.

அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியின் நிர்வாகம், ஆசிரியர் குழு, கல்லூரியின் பழைய மாணவர் குழு மற்றும் அதிபர், கண்டி சிட்டி ஜம்மிய்யதுல் உலமா, கண்டி சிட்டி மஸ்ஜித் சம்மேளனம், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம், கண்டி ஜனாஸா நலன்புரிச் சங்கம், கண்டி மலே பள்ளிவாசல் ஆகிய அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அஷ்ஷெய்க் ஏ. சி. எம். ஜிப்ரி ஹஸ்ரத், கௌரவ அதிதியாக பாகிஸ்தான் நாட்டின் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்காரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவராகவும் அதன் பிரசாரப் பணியாளராகவும் பணிபுரிந்து செயலாற்றி வரும் இவர் நாட்டின் ஏனைய மதங்களையும் கௌரவப்படுத்திச் செயற்படும் ஓர் இஸ்லாமிய மார்க்கப் போதகராவார். மத நல்லிணக்கம், மற்றும் இனங்களுக்கிடையே சகவாழ்வை மதித்துச் செயற்படும் இவர் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையினால் வழங்கப்படும் சகல பொறுப்புக்களையும் செவ்வனே திறன்பட நிறைவேற்றுவதிலும் அதன் வளர்ச்சிக்கும் தனது முழுப்பங்களிப்பையும் வழங்கியுள்ளார். அவை மட்டுமல்ல கண்டி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவராகவும், கண்டி 'ஜவா' ஜும்ஆ பள்ளிவாசல் பிரதான இமாமாகவும், கண்டி கட்டுக்கலை அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியின் அதிபராகவும் பணிப்பாளராகவும் இருந்து கண்டி மண்ணுக்கு அரும்பெரும் சமயப் பணியாற்றியுள்ளார்.

அவரது சொந்த ஊரான பண்டாகொஸ்வத்தை சுலைமானிய்யா அரபுக் கல்லூரி மற்றும் பண்டாரகொஸ்வத்தை மடிகே மிதியாலை என்ற இடத்தில் அமைந்துள்ள பாத்திமத்துஸ் ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரி ஆகியவற்றின் ஸ்தாபக அதிபராக இருந்து இரவு, பகல் பாராமல் மார்க்கக் கல்வியின் மேம்பாட்டுக்காக அவர் ஓர் ஆரவாரமில்லாமல் பரந்துபட்ட நோக்கோடு தான் பிறந்த மண்ணையும் மறவாமல் சகலரையும் அரவணைத்துக் கொண்டு செயற்படும் விதம் போற்றத் தக்கதாகும். இத்தகைய சிறப்புக்களையும் ஆளுமைகளையும் கொண்ட அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீனின் கடந்த 35 வருட கால சேவையைப் பாராட்டி கண்டியில் நடத்தப்படும் மாபெரும் சேவை நலன் பாராட்டு விழாவை முன்னிட்டு தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

கலந்துரையாடியவர்: **இக்பால் அலி**

**கேள்வி:** ***நீங்கள் ஒரு மார்க்கப் பிரசாரப் பணியாளராக இருந்த போதிலும் இந்நாட்டில் பன்முக ஆளுமைகளைக் கொண்ட ஒருவராக மதிக்கப்பட்டு வருகின்றீர்கள். எனினும் அந்த வகையில் உங்களுடைய ஆரம்ப கல்வி வாழ்க்கை பற்றிக் கூறுவீர்களா?***

**பதில்:** குருநாகல் மாவட்டத்தில் பண்டாரகொஸ்வத்தை மடிகே மிதியாலை மத்திய கல்லூரியில் ஆரம்ப முதல் இடைநிலைக் கல்வி வரையிலும் கற்றேன். என்னுடைய முழுப்பெயர் லொகுவிதானலாகே ஹால்தீன் உமர்தீன். 1978 இல் க. பொ. த சாதாரணப் பரீட்சை எழுதினேன். 1981 இல் க. பொ. த உயர் தரப் பரீட்சைக்கும் தோற்றி சித்தியடைந்தேன். இஸ்லாமிய நாகரீகம், பொருளியல், புவியல் விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களில் பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டேன். ஆனாலும் நான் 1978 இல் ரவ்லத்துல் உலமா என்ற அரபுக் கல்லூரியில் பகுதிநேர வகுப்புகளுக்குச் சென்று மார்க்கக் கல்வியை படித்துக் கொண்டிருந்தேன். ஆதலால் அரைவாசிக் காலம் அரபுக் கல்லூரியில் பாடங்களைப் பயின்று கொண்டிருப்பதால் அதனை முடித்து விட்டு பல்கலைக்கழகம் செல்லலாம் என்று இருந்தேன். எனினும் வீட்டில் நிலவிய பொருளாதார சூழ்நிலை அதற்கு இடம்கொடுக்க வில்லை.

பின்பு 1983 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அக்குறணை ஜாமிய்யா ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியில் தொடர்ந்து கற்பதற்காக இணைந்து கொண்டேன். அங்கு மார்க்கக் கல்வியைத் தொடர்ந்து கற்று 1987 இல் கல்வியை நிறைவு செய்து கொண்டு வெளியேறினேன்.

**கேள்வி:** ***உங்களுடைய குடும்பம் தொடர்பில்,...***

**பதில்:** தந்தையின் பெயர் லொகுவிதானலாகே ஹால்தீன். அவர் வியாபாரத்திலும் விவசாய நடவடிக்கைகளிலும் அதிக ஈடுபாடு கொண்டவர். எங்கள் குடும்பத்தில் ஆண் பிள்ளைகள் மூன்று பேர். பெண்கள் நான்கு பேர். நான் தான் வீட்டில் மூத்தவன். வீட்டில் பல பொருளாதார நெருக்கடிகள் நிலவின. ஆதலால் குடும்பச் சுமையையும் சுமக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1987 இல் அக்குறணை அரபுக் கல்லூரியில் இருந்து வெளியானதுடன் கண்டி பேராதனை வீதியில் அமைந்துள்ள கண்டி 'ஜவா ஜும்ஆ' பள்ளிவாசலில் முழு நேரம் சமயக் கடமை புரிவதற்காக இணைந்து கொண்டேன். அங்கு இருந்து கொண்டுதான் தொடர்ந்து இற்றவரையிலும் மார்க்கப் பணிகளை பேரார்வத்துடன் செய்து வருகின்றேன்.

**கேள்வி:** ***மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு பல மகத்தான சமயப் பணிகளை ஆற்றி வருகின்றீர்கள். அவை பற்றி கூற முடியுமா?***

**பதில்:** நான் 1988 இல் கண்டி 'ஜாவா' ஜும்ஆ பள்ளிவாசலில் பகுதி நேர அரபு மத்ரஸாவொன்றை ஆரம்பித்தேன். அங்கு குர்ஆன் மனனப் பிரிவான ஹிப்லு பகுதியையும் மற்றும் கிதாபு பகுதியையும் சேர்த்து ஆரம்பித்தேன். இது வரைக்கும் இந்த ஜும்ஆப் பள்ளிவாசலில் தான் பிரதான இமாமாக கடமையாற்றி வருகிறேன். ஆனால் இப்பள்ளியில் தற்போது எந்தவிதமான சம்பளமுமின்றி கடமையாற்றி வருகின்றேன்.

1990 இல் முதலாவது ஹஜ் பயணம் மேற்கொண்டேன். அங்கு இருந்து இலங்கை வந்த சமயத்தில் கண்டி கட்டுக்கலையிலுள்ள அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியில் அதிபர் ஒருவர் இல்லாத வெற்றிடம் ஒன்று நிலவியது. இந்த அரபுக் கல்லூரி கட்டுக்கலை வை. எம். எம். ஏ. கிளையின் மூலம் 1989 இல் ஆரம்பிக்கப்பட்டது. இங்குள்ள சகல நிர்வாகிகளுடைய வேண்டுகோளுக்கு இணங்க 1990 இல் இந்த மத்ரஸாவைப் பொறுப்பேற்றேன். இம்மத்ரஸாவின் ஆரம்ப அதிபராக நாவலப்பிட்டி மர்ஹூம் புர்ஹானுதீன் (தேவபந்தி) ஹஸ்ரத் இருந்தார்கள். 1990 இல் இருந்து சுமார் மூன்று தசாப்த காலம் இந்த அரபுக் கல்லூரியின் அதிபராக கடமையாற்றியுள்ளேன். குறிப்பிட்ட சில வருடங்களுக்கு முன்னர்தான் அதிபர் பதவியில் இருந்து விலகி தற்போது பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன். இந்த மத்ரஸாவில் இருந்து 200 க்கும் மேற்பட்ட மௌலவிமார்களும் 300 க்கும் மேற்பட்ட ஹாபிழ்களும் வெளியாகி இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் ஆரம்ப காலத்தில் இருந்து அரசாங்கத்தினால் நடத்தப்படும் பொதுப் பரீட்சைகளான க. பொ. த சாதாரண தரம் மற்றும் க.பொ. த உயர் தரப் பரீட்சைகளுக்கு தோற்றி சித்தியடைந்து, அவர்கள் உள்நாட்டு வெளிநாட்டுப் பலக்லைக்கழகங்களில் கல்வி பயின்று வருகிறார்கள். சவூதி அரேபியா மதினாப் பல்லைக்கழகத்திலும் எகிப்து அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்திலும் எனப் பல்வேறு நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வியைப் பெற்று வருகிறார்கள்.

அவை மட்டுமல்ல அரச நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள் போன்ற இடங்களில் உயர் தொழில் பதவிகளை ஆற்றி வருகின்றார்கள்.

அதே போன்று தான் பிறந்த ஊரில் உள்ள மடிகே மிதியாலை 2004 இல் பாத்திமத்துஸ் ஸஹ்ரா என்று அரபுக் கல்லூரியின் ஸ்தாபக தலைவராக கடமைபுரிகிறேன். இதில் 300க்கும் மேற்பட்ட மாணவிகள் பட்டங்கள் பெற்று வெளியேறியுள்ளார்கள். இம்மத்ரஸாவில் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள பிள்ளைகள் கல்வி பயிலுகின்றனர். குருநாகல் மாவட்டத்தில் பண்டாரகொஸ்வத்தை சுலைமானிய்யா அரபுக் கல்லூரியின் ஸ்தாபகத்தலைவராக கடமை புரிகின்றேன். இதில் இருந்து 100 க்கு மேற்பட்ட உலமாக்கள் வெளியாகியுள்ளார்கள். மொத்தமாக இங்கு 500 க்கும் மேற்பட்ட உலமாக்கள், மௌலவியாக்கள் என பட்டங்கள் பெற்று வெளியாவதற்கு ஓர் உந்து சக்தியாகவும் ஒரு வழிகாட்டியாகவும் இருந்துள்ளேன்.

**கேள்வி:** ***அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் முக்கிய பதவிகளிலும் பணிகளிலும் பொறுப்பு வாய்ந்த ஒருவராக கடமையாற்றி வருகின்றீர்கள். நீங்கள் முன்னின்று சமூகத்தின் மேலெழுச்சிக்காக ஆற்றிய பங்களிப்பு பற்றி கூறுவீர்களா?***

**பதில்:** அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையில் நான் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகப் பிரசாரப் பணியின் பொறுப்பு அதிகாரியாக நியமனம் பெற்று கடமையாற்றி வருகின்றேன். அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் அனைத்து விடயங்களையும் சமூகத்திற்கு கொண்டு செல்வதற்கான பகுதியாக பிரசாரப் பணி அமைந்துள்ளது. எனவே இதில் நீண்டகாலமாக பணிபுரிந்துள்ளேன். இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியான காலகட்டம் மற்றும் கொரோனா தொற்று அசாதாரண சூழ்நிலையிலும் கூட நாடளாவிய ரீதியில் மூன்று வருடத்திற்கும் மேல் முழு நாட்டையும் சுற்றி வந்துள்ளேன். எல்லாக் கிளைகளையும் சந்தித்துள்ளோம். பள்ளி நிர்வாகிகள், உலமாக்கள், பல்துறை சார்ந்தவர்கள் என பெரியார்களைச் சந்தித்து பல கூட்டங்களை ஏற்பாடு செய்து இந்நாட்டில் நடக்கும் நிலைமை குறித்தும் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். ஏனைய சமயத்தவர்களுடன் மிகவும் நெருக்கமாக அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

எங்களுடைய தூய்மையான எண்ணங்களையும் பண்பாடுகளையும் காட்ட வேண்டும் என அறிவுரை கூறினோம். சகவாழ்வு, புரிந்துணர்வு இன நல்லிணக்க மேம்பாட்டை கட்டி எழுப்புவதற்காக பல நூற்றுக்கும் மேற்பட்ட விஹாரைகளுக்கு சென்றுள்ளோம். கிறிஸ்தவ தேவாலயங்கள், இந்துக் கோயில்கள் முதலியவற்றுக்குச் சென்று தெளிவுகளை ஏற்படுத்தியுள்ளோம்.

இந்த நாட்டில் பெரும்பான்மையின சகோதரர்களோடு முடியுமான விடயங்களில் சேர்ந்து பயணிக்க வேண்டும். நாங்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும். இலங்கை ஒரு பல்லின சமூக கட்டமைப்பை கொண்ட நாடாகும். பல்லின சமூகத்தில் இனங்களுக்கிடையே கருத்தொற்றுமையினை ஏற்படுத்துதல், தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம், ஐக்கியம், சகவாழ்வு, புரிந்துணர்வு என்பவற்றை ஏற்படுத்துவதற்காக நாங்கள் நிறைய நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளோம். இன நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவதற்காக கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளேன். மிகநெருக்கடியான சூழ்நிலையிலும் சரி அத்தோடு கொரோனா தொற்றுக் காலத்திலும் சரி அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை என்னையே இதற்கு பொறுப்பாக நியமனம் செய்திருந்தார்கள்.

கொரோனா தொற்றினால் நல்லடக்கம் செய்யப்பட்ட ஓட்டமாவடியில் அமைந்துள்ள தேசிய மையவாடிக்கும் பல முறை பயணம் செய்துள்ளேன். அது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டங்கள் , நல்லடக்கம் செய்வது தொடர்பான கலந்துரையாடல்கள் போன்றவற்றில் நிறையக் கலந்து கொண்டேன்.கொரோனா காலத்தில் நிறைய இடங்களுக்குச் சென்று பொது மக்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் அறிவுறுத்தல் ஆலோசனைகள் வழங்கி வந்தேன். நாட்டின் எல்லாப் பாகங்களுக்கும் செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தை அரசு எனக்கு வழங்கியிருந்தது. அதனால் எனக்கு எல்லா இடங்களுக்கு செல்லக் கூடிய வாய்ப்பு கிடைத்தது என்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.

**கேள்வி:** ***தூர நோக்கும் எதிர்காலப் பார்வையும் பிறரை வழிநடத்தும் ஆற்றலுமிக்க நீங்கள் எழுத்துத் துறையிலும் கால் பதித்துள்ளீர்கள்.அந்த வகையில் உங்கள் நூல் ஒன்றுக்கு தமிழ் மொழித்துறைப் பேராசிரியர் எம். ஏ. நுஹ்மான் மனமுவந்து அணிந்துரை வழங்கி இருப்பது என்பது உங்கள் எழுத்தாற்றலுக்கு பெரும் வலிமை சேர்க்கிறது. எனவே நீங்கள் முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வழிகோலிய எத்தகைய நூல்களை எழுதியுள்ளீர்கள்? அவை பற்றி கூறுவீர்களா?***

**பதில்:** கொரோனா காலத்தில் வீட்டில் முடங்கி இருந்தமையால் அந்த ஓய்வைப் பயன்படுத்தி கைநூல்களை எழுதுவதை ஆரம்பித்தேன். இதற்கு மக்கள் மத்தியில் இருந்து பலத்த ஆதரவு கிடைத்தது. விசேடமாக வக்பு சபைத் தலைவர் கூட என்னை ஆர்வப்படுத்தி எனக்கு ஆசியுரை தந்துள்ளார். அதேபோன்று அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்மி முப்தி, பிரதித் தலைவர் அஷ்ஷெய்க் அகார் முஹமட் போன்ற முக்கிய பிரமுகர்கள் என் எழுத்துப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தார்கள். பேராதனை பல்கலைக்கழக தமிழ் மொழித்துறைப் பேராசிரியர் எம். ஏ. நுஹ்மான் போன்றவர்கள் என் எழுத்து முயற்சிகளுக்கு உற்சாகமும் ஒத்துழைப்பும் தந்துள்ளார்.

இதுவரையிலும் மும் மொழிகளிலும் 11 புத்தகங்கள் வெளியிட்டுள்ளேன். மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கை, மாநபியின் மருத்துவ வழிகாட்டல்கள், அருள் மிகு ரமழானும் அதன் சட்ட திட்டங்களும், பள்ளிவாசல்கள் ஊடாக சமூகத்தை வலுவூட்டுவோம், மாற்று மதத்தவர்களை மதித்து வாழ வழிகாட்டும் மார்க்கம் இஸ்லாம் ஆகிய கைநூல்களை எழுதியுள்ளேன். ஆங்கிலத்தில் ஹெப்பி மெரேச், த பெரப்பெட்க் மெடிசின் ஆகிய இரு நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. சிங்களத்தில் பிரித்திமத்யுக திவியக் கரா. மஸ்ஜித் முஸ்லிம் தேவஸ்தான மகின் சமாஜய சவிபலகன்வமு, நபித்துமாகே வைத்திய மக பென்வீம, சகோதர ஆகமியன்ட கருகரமின் ஜீவத்வீமட்ட மகபென்வன தஹம இஸ்லாம் ஆகிய நூல்களை எழுதியுள்ளேன்.

**கேள்வி:** ***நீங்கள் எதிர்காலச் சந்ததியினருக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?***

**பதில்:** பொதுவாக எங்களுடைய நேர காலத்தை எந்தளவு சமூகத்தின் தேவைக்காக பயன்படுத்த முடியுமோ அந்தளவுக்கு எமது சமூகம் மேலெழுச்சி பெறும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. எங்களது நபி நாயகம் (ஸல்) அவர்கள் தனக்காக வாழ வில்லை. பிறருக்காகத்தான் வாழ்ந்தார்கள். உங்களில் சிறந்த மனிதர் யார் என்றால் உங்களுடைய செயல்பாடுகள் பிறருக்கு பிரயோசனமாக அமைந்திருத்தல் வேண்டும். அறிவு, ஆற்றல், பண்பு, அன்பு ஆகியவற்றை பிறருக்காகப் பிரயோசனப் படுத்துதல் அவசியம். அவை எங்களுக்கு மறுமை வாழ்க்கையில் சிறப்பானதாக அமையும். ஆதலால் இன்றுள்ள சந்ததியினர்களுக்கு சொல்ல வேண்டிய ஒன்று. படிப்பின் பக்கம் நன்கு கவனம் செலுத்த வேண்டும். துறைசார்ந்த எந்தக் கல்வி என்றாலும் சரி ஆலிமாகலாம். ஹாபிழாகலாம் ஏனைய துறை சார்ந்த கல்வியிலும் கவனம் செலுத்துங்கள்.

அடுத்து அல்லாவின் தொடர்பு விடயத்திலும் சீராக நடந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வுடைய தொடர்பு சீராக வேண்டும். விசேடமாக உலமாக்கள் எமது கால நேரத்தைப் பிரயோசனப்படுத்த வேண்டும்.

சிங்களம், ஆங்கில மொழி கட்டாயம் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். எழுத்துத் துறையிலும் வாசிப்புத் துறையிலும் அதிக ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். பொதுவாக சமூகத்திற்கு வரக் கூடிய எல்லா விடயங்களுக்கும் நாங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஊரோடும் குடும்பத்தோடும் சேர்ந்து ஒற்றுமையாக அன்பாக நடந்தால் எதிர்காலம் உங்களுக்கு மிகச் சிறப்பாக இருக்கும்.

**கேள்வி:** ***இத்தகைய பணிகளுக்காக தங்களுக்கு கிடைக்கப் பெற்ற பாராட்டுக்களும் விருதுகள் பல. எனினும் அவை பற்றி சுருக்கமாக***

**பதில்:** இமாம் சாதியி கலாபீடத்தின் விருது. 2020 இல் நிவ்ராஸ் இன்பாஸ் மாணவர்களின் விசேட விருது, தாரு ஆயிஷா அரபுக் கல்லூரியின் விருது, கண்டி கட்டுக்கலை வை. எம். எம். ஏ. இன் விருது, 2012 இல் பண்டாரகொஸ்வத்தை சுலைமானிய்யா அரபுக் கல்லூரியின் விருது, 2017 இல் கம்பளை ஜம்மிய்யதுல் உலமாக் கிளையின் விசேட விருது, 2022 இல் த கார்டியன் பவுண்டேசனின் விருது, 2012 இல் அந்நூர் சமூக நல நிதி நிறுவனத்தின் விருது, 2016 கண்டி சிட்டி ஜம்மிய்யதுல் உலமா சபையின் விருது, 2014 காலித் பவுண்டேசன் விருது, 2020 இல் ரவாஹிய்யா அரபுக் கல்லூரியின் விருது, 2016 கண்டி கட்டுக்கலை அல் புர்க்கானிய்யாவின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா விருது, 2020 இல் கௌரவ கலாநிதி விருது உள்ளிட்ட பல அமைப்புக்களின் மூலம் பல பாராட்டுக்களும் விருதுகளும் கிடைத்துள்ளன.















## IMF உடன் கலந்துரையாட...

கொள்ளவுள்ளனர். டொலர் நெருக்கடி காரணமாக பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள இலங்கைக்கு, 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நீண்டகால கடன் வசதிக்கான பணிக்குழாம் மட்ட உடன்பாடு அண்மையில் எட்டப்பட்டது.

இந்த தொகையானது 4 வருட காலப்பகுதியில் எட்டு தவணைகளாக இலங்கைக்கு வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள வெளிநாட்டுக் கடனை செலுத்துவது தொடர்பான மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் உடன்படிக்கைகள் மற்றும் முன்னேற்றம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

அதன்படி, கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை இன்று முன்வைக்க நிதியமைச்சு திட்டமிட்டுள்ளது.

## சகல இன மக்கள்...

வரும் இக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் பிரகாரம் சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுகிறது. இன சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்ப அரசாங்கம் முனைப்பு காட்டி வருகிறது. இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கான பேச்சுவார்த்தைகள் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மத குரோத செயற்பாடுகளை மேற்கொள்வோருக்கு எதிராக எவ்வித நெகிழ்வுத் தன்மையும் காட்டப்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 600 மெ.தொன் அரிசியை...

மேலும் அரிசி, பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் என்பனவும் விரைவில் அவுஸ்திரேலியாவினால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது. இருநாடுகளும் பல தசாப்தகால நட்பைப் பகிர்ந்து கொள்கின்றன. இந்த பங்களிப்பு பாரிய நெருக்கடியின் போது எங்களின் நல்லெண்ணத்தின் விரிவாக்கமாகும்" என்று இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் கூறினார்.

## இலங்கைக்கு உதவுவதாக வெளிநாட்டு...

இந்த உறுதியை வழங்கினர்.

கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெறுவது தொடர்பில் ஜனாதிபதி வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளித்தார். இச்சந்திப்பின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறுவதற்கும், கடன் மறுசீரமைப்பிற்கும் தமது ஒத்துழைப்பை வழங்குவதாக வெளிநாட்டுத் தூதுவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர். பரிஸ் க்ளப் (Paris Club) மற்றும் பரிஸ் க்ளப்பில் அங்கத்துவம் அல்லாத 23 நாடுகளின் தூதுவர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் இலங்கை நிச்சயம் இப்பிரச்சினையிலிருந்து மீண்டெழும் என்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் இதன்போது நம்பிக்கை வெளியிட்டனர். கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்களை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் அதற்கு தேவையான அனைத்து அர்ப்பணிப்புக்களை செய்து வருவதாகவும் ஜனாதிபதி இதன்போது வெளிநாட்டு தூதுவர்களிடம் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான முன்னேற்றம் குறித்து நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் இதன்போது விளக்கமளித்தனர். இதனையடுத்து, வெளிவிவகார தூதுவர்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, எதிர்கால சந்ததியினருக்காக தற்போதைய நெருக்கடியை , வெற்றி கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இதற்காக அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடனும், சமத்துவத்துடனும் பணியாற்றும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தாரக்க பாலசூரிய, ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் தலைவருமான சாகல ரத்நாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயவர்தன உள்ளிட்ட பல அரசாங்க அதிகாரிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## புதிய Gas சிலிண்டர்கள்...

அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக இவ்வாறு எரிவாயு கொள்கலன் விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளதாக லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது. நாட்டில் அந்நிய செலாவணி கையிருப்பில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, மக்கள் எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்த விரும்புவதால் சமையல் எரிவாயுவின் தேவை குறைந்துள்ளதாக லிற்றோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## பேராதனை பல்கலைக்கழக...

கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அம் மாணவன் காணாமல்போயிருந்தார். மாணவனால் 16 ஆம் திகதியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதம் மாணவனின் விடுதி அறையில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தது. மாணவனின் மரணம் தொடர்பில் பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கு கிழக்கு எம்பிமாருக்கு...

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் இணக்கத்துடன், 33/1 என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்டது. அதில், சர்வதேச நாடுகளில் நீதிபதிகளால் விசாரிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், பின்னர் இலங்கையின் கோரிக்கைக்கு அமைய அது பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளின் நீதிபதிகள் என்றவாறு மாற்றப்பட்டிருந்தது.

இம்முறை வெளிவிவகார அமைச்சருடன் அப்போதைய மற்றும் தற்போதைய நீதியமைச்சராக விஜேதாச ராஜபக்ஷவும் ஜெனீவா சென்றிருந்தார். அமர்வின்போது அரசாங்கத்தின் நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளியக பொறிமுறை அரசியலமைப்புக்கு முரணானது என்று குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக 2015 ஆம் ஆண்டு அரசியமைப்புக்கு உட்பட்டிருந்த இந்த விடயம், தற்போது அரசியலமைப்பு முரணானது எப்படி என்று சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியது.

இதற்கு பதிலளித்த நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் கொண்டிருக்கும் அக்கறையை தாமும் கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

எனினும், மாறிவந்த அரசாங்கங்கள் காரணமாக இதில் மாற்றங்கள் ஏற்பட்டமை யாவரும் அறிந்ததே.

இந்நிலையில், இந்த பிரச்சினை குறித்து எதிர்வரும் வாரங்களில் வடக்கு, கிழக்கில் நிலையான சமாதானத்தை பேணும் வகையில் வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## இறுதி உடன்படிக்கை...

எடுப்பதாக ஜனாதிபதி தனக்கு தெரிவித்ததாக சபாநாயகர் நேற்று (22) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

IMF உடன்படிக்கை குறித்து நேற்றுப் பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம் தொடர்பில் அறிவிப்பொன்றை விடுத்து சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அமைச்சரவையும் இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை என்றும், அனைத்து தகவல்களும் கிடைத்த பின்னர் விரைவாக அமைச்சரவைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தனக்குத் தெரிவித்ததாக சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேபோன்று, இது தொடர்பில் எதிர்க்கட்சி உள்ளிட்ட உரிய அனைத்துத் தரப்பினருக்கும் அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தனக்கு தெரிவித்ததாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

## அவசர மருந்து மற்றும்...

பொருட்கள் வழங்கப்படுவதோடு இது இலங்கை ரூபாவில் 279 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியாகும். இந்த மருந்து மற்றும் மருத்துவ பொருட்களை கையளிப்பதற்கான நிகழ்வு அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகத்தில் இடம்பெற்றுள்ளது.

## அரச உத்தியோகத்தர்களுக்கு...

அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன இதனை தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பிலான சுற்று நிருபத்தினை தயாரிப்பதற்குரிய ஆலோசனை உரிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்கள் அலுவலகங்களுக்கு கடமைக்காக வருகை தரும்போது, பெண்கள் சேலையும், கர்ப்பிணி பெண்கள் அவர்களுக்கு பொருத்தமான உடையையும், அணிய வேண்டும் என சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஆண்களுக்கு வெள்ளை நிற மேற்சட்டையும், கருப்பு நிற காற்சட்டையையும் அலுவலக ஆடையாக பரிந்துரைக்கவும், சப்பாத்து அணிவதனை கட்டயாமாக்குவதற்கும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் நிரப்பு நிலையங்கள்...

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களைின் கட்டுப்பாட்டினை பெற்றுக்கொள்ளும் தனியார் நிறுவனங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கும், எரிபொருளை விநியோகிப்பதற்கும், எரிபொருளை விற்பனை செய்வதற்கும் அதிகாரங்களை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபத்தின் எரிபொருள் நிலையங்களை தனியாருக்கு விற்பனை செய்யும் திட்டத்திற்கு அமைய இதுவரை 24 நிறுவனங்களிடமிருந்து கேள்வி பத்திரத்துக்கான இணக்க மனு கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

## விசேட சர்வதேச புத்தகக்...

ஏற்பாடு செய்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி நேற்று (22) பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்று வரும் 23 ஆவது கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியை பார்வையிடுவதற்காக சென்றிருந்தார். இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்படவுள்ள புத்தகக் கண்காட்சிக்கு இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் ஒத்துழைப்பை பெற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த வருட புத்தகக் கண்காட்சியில் 400 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புத்தக வெளியீட்டாளர்களின் விற்பனைக் கூடங்கள் இடம்பெற்றுள்ளன.

## அருள்வாக்கி அப்துல் காதிர்...

அரும்பணிகள் பற்றி இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லும் நோக்கில் இந்த வருடமும் நினைவுப் பேருரையொன்றை நடாத்த தெல்தோட்டை ஊடக மன்றம் திட்டமிட்டுள்ளது.

இந்த வருடத்திற்கான நினைவுப் பேருரை "தெல்தோட்டை – புதியதோர் மாற்றத்தை நோக்கி" என்ற கருப்பொருளில் நாளை 24ம் திகதி (சனிக்கிழமை) மு.ப. 9.30 மணி முதல், தெல்தோட்டை, புலவர் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள, க/எனசல்கொல்ல மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நினைவுப் பேருரையினை கலாநிதி ரவூப் ஸெய்ன் (நளீமி) நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வின் மற்றுமொரு முக்கிய அம்சமாக அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரை ஜனரஞ்சகப்படுத்தும் நோக்கில் 1965இல் புலவர் பிறந்த நூற்றாண்டு விழாவின் போது புலவர் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியீட்டமைக்காக தினகரன் தேசிய நாளிதழிற்கும், புலவர் இயற்கையெய்திய நூற்றாண்டினை அனுஷ்டிக்கும் வகையில் 2018ம் ஆண்டு ஜூன் மாதம் ஞானம் சஞ்சிகையின் 217ஆவது இதழை புலவர் பற்றிய சிறப்பிதழாக வெளியிட்ட ஞானம் சஞ்சிகையின் இணை ஆசிரியர் வைத்தியர் ஞானம் ஞானசேகரனுக்கும், புலவர் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியிட்ட தென்னிந்தியாவின் இளம்பிறை எம். ஏ. ரகுமானுக்கும் தெல்தோட்டை ஊடக மன்றமானது, 'அருள்வாக்கி நேசன்' விருது வழங்கி பாராட்டி கௌரவிக்க உள்ளது.

## 'திரிபோஷ' பிரச்சினையை...

முடியாதென சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் திரிபோஷ தட்டுப்பாடு மற்றும் அப்லோடொக்ஷின் பிரச்சினை உள்ளதென்பதை மறுக்க முடியாதென சுட்டிக்காட்டிய அமைச்சர் போஷாக்கின்மை மற்றும் திரிபோஷ விவகாரம் தொடர்பில் சபைக்கு அறிவியல் பூர்வமான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஹேஷா விதானகே எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நச்சுத்தன்மை கொண்ட திரிபோஷ பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் ஹேஷா விதானகே எம்.பி இதன்போது கேள்வி எழுப்பினார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

சுகாதாரத்துறைக் கட்டமைப்பில் சில பிரச்சினைகள் உள்ளன என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். நச்சுத்தன்மை கொண்ட திரிபோஷ, பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது. அப்லோடொக்ஷின் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்ட நபர் அது தொடர்பில் விரிவாக தெளிவுபடுத்துமாறு சுகாதார அமைச்சு உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளது. எனினும் அவர் தனது சட்டத்தரணியின் ஆலோசனையைப் பெற்றுக்கொண்டு விளக்கமளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அப்லோடொக்ஷின் தொடர்பில் கடந்த ஒன்றரை மாதத்துக்கு முன்னர் இருந்த தரவுகளை வைத்துக்கொண்டே தற்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஹம்பாந்தோட்டை மாவாட்டத்தில் மந்தபோசணை பாதிப்பு 85 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக வெளியாகும் அறிக்கை அடிப்படையற்றதாகும்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 5 சதவீதத்துக்கும் குறைவான மந்தபோசணை பாதிப்பு காணப்படுவதாகவே மாவட்ட சுகாதார அதிகாரிகள் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

அந்த வகையில் மந்தபோசணை மற்றும் திரிபோஷ விவகாரம் தொடர்பில் சபைக்கு அறிவியல் பூர்வமான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படாத...

ஒருபோதும் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதை அரசாங்கம் நிறுத்தாதென தெரிவித்த அமைச்சர் வேறு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பெற்றே தற்போது சம்பளம் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

வருமானத்தை விட செலவு அதிகமானால் எந்த நிறுவனமோ வீடோ கடன் பெறுவதை தவிர்க்க முடியாதென்பதை குறிப்பிட்ட அமைச்சர், சர்வதேச நாணய நிதியத்திடம் 16 முறை அரசாங்கங்கள் கடன் பெற்றுள்ளதாகவும் கடந்த அரசாங்கமும் 1.6 பில்லியன் டொலரைக் கடனாக பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபன திருத்தச் சட்டம் மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

அரசாங்கத்தின் வரி வருமானம் 1268 பில்லியனாக உள்ளபோது அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு 1115 பில்லியன் செலவிடப்படுகிறது. இந்த மீதி பணத்தை வைத்துக்கொண்டு எவ்வாறு கடன் செலுத்துவது, எவ்வாறு எரிபொருளை பெற்றுக் கொள்வது, எவ்வாறு நாட்டுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

நாம் புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது இந்த நிலையில் சர்வ கட்சி வேலைத்திட்டம் தற்போது அவசியமாகிறது. அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கடன் பற்றுப் பத்திரம் விநியோகிக்க வேண்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் சாத்தியமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் எமது வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரிக்க வேண்டியுள்ளது.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தைப் பொருத்தவரையில் மிகவும் கஷ்டப்பட்டு அதனை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

நான் பதவியேற்ற நாள் முதல் இதுவரை எவரையும் அங்கு எந்தப் பதவிக்கும் நியமிக்கவில்லை.

## மீனவர்களுக்கு குறைவின்றி...

தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கடற்றொழில் அலுவல்கள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், நன்னீர் மீன்பிடியை மேம்படுத்தும் நோக்கில் இவ்வருட இறுதிக்குள் அடையாளம் காணப்பட்ட 4,000 குளங்களில் மீன் குஞ்சுகளை இடுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்துக் கவனம் செலுத்தியிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், கடற்றொழில் துறைசார் பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் நலன்புரியை மேம்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டமொன்று எதிர்வரும் ஒக்டோபர் 01ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கும் சிறுவர் தினத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கவிருப்பதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

இதனைவிடவும், 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் மூன்று ஒழுங்குவிதிகளுக்கும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

## உணவு பாதுகாப்பை...

கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி அலுவலகம், இது தொடர்பான தகவல்களைத் திரட்டியதுடன் அந்த செய்தியில் உண்மையில்லையென்றும் உறுதிப்படுத்தியுள்ளது. இச் செய்தி தொடர்பில் தகவல்களைப் பெற ஜனாதிபதி அலுவலகம் நடவடிக்கை எடுத்தது. இதன்படி, மினுவாங்கொடை பிராந்திய பணிப்பாளர் வஜிர ரணராஜா, கம்பஹா மாவட்ட செயலாளர் டபிள்யூ. சத்தியானந்த, திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர், மினுவாங்கொடை கல்வி வலய திவுலப்பிட்டி கல்விப் பிரிவின் பணிப்பாளர், கொங்கொடமுல்ல புனித அந்தோனியார் கனிஷ்ட கல்லூரியின் அதிபர் ஆகியோரிடமிருந்து தகவல்கள் பெற்றப்பட்டன.

அத்துடன், மாணவி வாழும் பிரதேச கிராம உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரிடமிருந்தும் தகவல்கள் பெறப்பட்டன. எனினும், இந்தத் தகவல்களின்படி அவ்வாறானதொரு சம்பவம் எதுவும் அப்பகுதியில் பதிவாகவில்லையென்று உறுதியாகியுள்ளது.

எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக உணவு நெருக்கடி ஏற்பட்டால் இதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி எந்தவொரு குழந்தையோ, நபரோ அல்லது குடும்பமோ உணவு நெருக்கடிக்கு உள்ளானால் இதற்குத் தீர்வு காண விசேட வேலைத்திட்டமொன்று பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் மட்டத்தில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் உதவி பெறத் தகுதியான அளவுகோல்களைக் கொண்ட தரப்பினராக 05க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சமுர்த்தி பயனாளிகளது குடும்பங்கள், ஊனமுற்றோர் மற்றும் நாட்பட்ட நோயாளர்களைக் கொண்ட குடும்பங்கள், 05 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட வறுமையான குடும்பங்கள், கணவன் அல்லது மனைவி இல்லாத குடும்பங்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களைக் கொண்ட குடும்பங்கள், ஆரம்பக் கல்வி கூட பெறாத ஏழைக் குடும்பங்கள், கடுமையான உணவுப் பற்றாக்குறையுள்ள குடும்பங்கள் மற்றும் கடுமையான உணவுப் பஞ்சத்தில் இருக்கும் குடும்பங்கள் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவ்வாறான குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாதாந்தம் 15,000 ரூபாவை கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களூடாக வழங்க முடியும். அதற்கமைய முதல் 03 மாதங்களுக்கு பணம் வழங்கப்படுவதுடன் மேலும் 06 மாதங்களுக்கு உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதுதவிர மாதந்தோறும் 10,000 ரூபா வீதம் 06 மாதங்கள் வரை கொடுப்பனவு வழங்க அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் உள்ளடங்காத மற்றும் தற்சமயம் உணவு கிடைக்காமல் தவிக்கும் குடும்பங்கள் இருப்பின் அவர்களுக்கு குறுகிய காலத்தில் உணவு வழங்க வாய்ப்பு உள்ளது. கிராம அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள் ஊடாக ஜனாதிபதி செயலகத்தின் உணவு பாதுகாப்பு திட்டப் பிரிவுக்கு கோரிக்கை முன்வைக்க வேண்டும். மேலும், ஊட்டச்சத்து குறைபாடுள்ள மாணவர்களைக் கொண்ட குடும்பங்கள் இருந்தால், அது தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்பட்டு, அத்தகைய குடும்பங்களுக்கு அரசாங்கம் செயல்படுத்தி வரும் பெற்றோர் பாதுகாவலர் திட்டங்கள் மூலம் உணவு உதவித் திட்டங்கள் வழங்கப்படும்.

மேலும், உணவின்றி தவிக்கும் குடும்பங்கள் பற்றிய தகவல்களை பாடசாலை ஆசிரியர்களும் சேகரித்து, ஜனாதிபதி அலுவலகத்திற்கு அனுப்ப முடியும். அத்தகைய குடும்பங்களுக்கு உதவ விரும்புபவர்களும் இதில் இணைந்து உதவி வழங்க முடியும்.

அதுமட்டுமின்றி கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஜனாதிபதி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இந்த வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்ய முடியுமென்றும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

## மலேஷியாவில் 10,000... (03ஆம் பக்கத் தொடர்)

விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் முகமாகவே பத்தாயிரம் வேலை வாய்ப்புகளை இலங்கையர்களுக்கு பெற்றுக் கொடுப்பதாக உயர்ஸ்தானிகர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இவ்வளவு காலமும் மலேசிய நாட்டின் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் பங்களாதேஷ், இந்தியா போன்ற நாடுகளுக்கே கிடைத்து வந்திருந்தாலும் நான் கடந்த ஜூன் 23ஆம் திகதி Datuk Seri M.Saravanan க்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்ததற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்ததற்கு உயர்ஸ்தானிகருக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என அமைச்சர் கூறினார்.

மலேசிய வேலைவாய்ப்பு தொடர்பாக உத்தியோகபூர்வமாக இருதரப்பு ஒப்பந்தத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

2018 ஆம் ஆண்டு அமைச்சர் மனுஷ நாணயக்கார வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சராக இருந்த வேளையில் தொழில் பயிற்சிக்காக மலேசியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தார்.

## வடக்குக்கான ரயில் பாதை ... (03ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

ரயில்வே ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு மாத்திரம் மில்லியன் கணக்கான ரூபா செலவிடப்படுகிறது. அத்துடன் மேலதிக நேர கொடுப்பனவாக 2.3 மில்லியன் செலவிடப்படுகிறது. அதனை ஈடு செய்யும் வகையிலேயே ரயில் கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் ரயில் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ரயில் நிலைய அதிபர்கள் பிரவேசச் சீட்டு வழங்குவதை தவிர்த்து வந்தனர். வரவுக்கு மிஞ்சிய செலவு ஏற்பட்டால் அந்த நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்வதில் ஏற்படும் கஷ்டங்கள் தொடர்பில் அனைவரும் தெளிவு பெற வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வெளி ஆட்களின்... (03ஆம் பக்கத் தொடர்)

துண்டுகளை பகல் உணவுக்காக கொண்டுவந்திருப்பதாக பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் மாணவர்களின் உணவு தொடர்பில் அரசாங்கம் முறையான வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

அதற்கு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பதிலளிக்கையில், மினுவாங்கொடை கல்வி வலயத்தில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பான செய்தி வெளிவந்ததுடன் அதுதொடர்பில் அந்த பாடசாலை அதிபருடன் தொடர்புகொண்டு தான் கலந்துரையாடியதாக தெரிவித்தார். அந்த பாடசாலை மிகவும் சிறிய பாடசாலை 15 ஆசிரியர்களே அங்கு பணிபுரிகின்றனர்.

பாடசாலை அதிபர் அது தொடர்பில் தெரிவிக்கையில், இந்த செய்தியை கேள்விப்பட்டவுடன் பாடசாலை அபிவிருத்திக் குழு கூடி, அதுதொடர்பில் கலந்துரையாடியதாகவும், பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும் அழைத்து அதுதொடர்பாக விசாரித்தபோதும் அது தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கவில்லையென்றே தெரிவித்ததாகவும் அதிபர் தெரிவித்தாரென குறிப்பிட்ட அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல அதிபர் தெரிவித்த தொலைபேசி குரல் பதிவை ஒலிவாங்கியில் ஒலிக்கச்செய்தார்.

இதன்போது சபாநாயகர்,அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு அறிவுறுத்தல் ஒன்றை வழங்கினார். பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே உரையாற்ற முடியும்.

வெளியாட்களுக்கு உரையாற்ற முடியாது. அதனால் வெளியாட்களின் தொலைபேசி குரல் பதிவை ஒலிவாங்கியில் ஒலிக்கச்செய்வது தவறான செயல் என்றும் சுட்டிக்காட்டினார்.

## கதிர்காமத்தில் மத... (03ஆம் பக்கத் தொடர்)

புனித இடத்தின் அபிவிருத்திக்கான மற்றுமொரு நிதி நன்கொடையும் இராணுவத் தளபதியினால் கதிர்காமம் முருகன் ஆலய பஸ்நாயக்க நிலமேயிடம் கையளிக்கப்பட்டது.

## 03 அமைச்சு செயலாளர்கள்... (03ஆம் பக்கத் தொடர்)

பீ.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளராக பி.எச்.சி. ரத்நாயக்க மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக எஸ். ஹெட்டியாரச்சி ஆகியோரின் நியமனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் தலைவராக எல்.எச். ரஞ்சித் சேபாலவின் நியமனத்துக்கும் இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் (LECO) தலைவராக அதுல பிரியதர்ஷன டி. சில்வாவின் நியமனத்துக்கும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவராக நிஷாந்த ரணதுங்கவின் நியமனத்துக்கும் குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# சமூக நல சேவையில் இளம் தலைமைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்

## அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் கண்டி மாவட்டப் பணிப்பாளர் இஹ்திசான் ஹுஸைன்தீன்




**அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் கண்டி மாவட்டப் பணிப்பாளர் இஹ்திசான் ஹுஸைன் தீன். இவர் இம்முறை நடைபெற்ற அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 72 தேசிய மாநாட்டில் சிறந்த மாவட்டப் பணிப்பாளருக்கான விருதைப் பெற்றுக் கொண்டவர். எக்லட் யுனைட்ஸ் ஸ்ரீலாங்கா அமைப்பின் இயக்குனர். இவ்வமைப்பின் மூலம் பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றிவரும் இளம் துடிப்புமிக்க சமூகச் செயற்பாட்டாளர். அவரின் சமூக சேவைகள் தொடர்பான கலந்துரையாடல்,..**

நேர்காணல் ஜீவராஜ்

### ? நீங்கள் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் கண்டி மாவட்டப் பணிப்பாளராக எவ்வாறு தெரிவு செய்யப்பட்டீர்கள்.?

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மியின் அறிமுகம் அவருடைய முகப்புத்தகத்தின் வாயிலாக ஏற்பட்டது. அதன் பின்பு அவரைத் தொடர்பு கொண்ட





போது 1966 இல் கம்பளையைச் சேர்ந்த ஐசாயில் ஹாஜியார் என்பவர் வை. எம். எம். ஏ இன் தேசியத் தலைவராக இருந்திருக்கிறார். அதே போன்று அவர் கம்பளையின் ஆரம்பத்தில் கம்பளைக் கிளையின் தலைவராகவும் இருந்துள்ளார். வை. எம். எம். ஏ. கொழும்பு அலுவலகத்திற்கு குர்ஆன் வைப்பதற்கான ஒரு பொருள் ஒன்று கம்பளையில் இருந்துதான் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அது இன்னும் கொழும்பு தலைமையகத்தில் இருக்கிறது.

அக்கால கட்டத்தில் மூன்று அமைப்புக்கள் கம்பளையில்



இயங்கி வந்துள்ளன. ஆண்டியாகடவத்தை, கஹட்டப்பிட்டிய, இல்லவத்துர ஆகிய கிளைகள் இயங்கி வந்துள்ளன. பிற்காலத்தில் அக்கிளைகளின் செயற்பாடு மறைந்து விட்டது. ஐந்து தசாப்தம் காலமாக கம்பளையில் வை. எம். எம். ஏ. இன் செயற்பாடு காண்பதற்கில்லை. போட்டித் தன்மையினால் அவற்றின் செயற்பாடு இல்லாமற் போய் இருக்கலாம்.

ஆனாலும் மடவளை, அக்குறணை, கண்டி ஆகிய வை. எம். எம். ஏ. கிளைகள் எல்லாம் வை. எம். எம். ஏ. பேரவை உருவான காலத்தில் இருந்து செயற்பட்டவையாகும். அந்தப் பேரவையின் உருவாக்கத்தில் கம்பளை வை. எம். எம். ஏ இன் வரலாறும் பதிவாகியுள்ளது.

இவ்வாறு இந்த விடயங்களைப் பற்றி முன்னாள் வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி வை. எம். எம். ஏ. பற்றி ஒரு தெளிவான விளக்கம் ஒன்றைத் எனக்குத் தந்தார். அதன் பின்பு வை. எம். எம். ஏ. இன் கண்டி மாவட்டப் பணிப்பாளர் பௌஸ் ஏ. காதர் மற்றும் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி ஆகிய இருவரும் என்னுடைய வீட்டுக்கு வருகை தந்தார்கள்.

அவர்கள் வருகை தந்த தினத்தில் கம்பளையிலுள்ள இளம் வாலிபர்களை வரவழைத்து கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தேன். அவர்கள் அக்கூட்டத்தில் கம்பளை வை. எம். எம். ஏ. பேரவையின் கிளையினை மீளவும் அங்குரார்ப்பணம் செய்து செயற்படுங்கள் என்று கோரிக்கை விடுத்தார்கள். 'எட்லட் யுனைட்டட் ஸ்ரீலங்கா' என்ற என்னுடைய அமைப்பின் அங்கத்தவர்களையும் ஒன்றிணைத்து வை. எம். எம். ஏ. ஊடாகச் செய்வதற்கு முன்வந்தேன். அப்பொழுது அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் உப தலைவராக சஹீட். எம். ரிஸ்மி இருந்தார். அதன் பின் பதில் தலைவராகவும் அவர் இருந்தார். பின்பு தலைவராக இருந்தார். அவருடன் இணைந்து தொடர்ச்சியாக செயற்பட்டு வந்தேன்.

### ? நீங்கள் எவ்வாறான பணிகளில் ஈடுபட்டு வந்தீர்கள்?

ரமழான் காலம் வந்தால் நோன்பு கால விசேட உலருணவுப் பொதிகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை கம்பளைப் பிரதேசத்தில் முன்னெடுத்தோம். கம்பளை மட்டுமல்ல வெளிப்பகுதியிலும் செய்தோம். புசல்லாவை, வெளிகல்ல, ஹந்தானை, மஹிய்யாவப் பள்ளி போன்ற பரந்து பட்ட பகுதிகளிலும் எமது பணிகளை முன்னெடுத்துச் சென்றோம்.

இரண்டு வருடம் கம்பளை வை. எம். எம். ஏ கிளையினை செய்து கொண்டு சென்றேன். இளம் வாலிபர்களை உருவாக்கினேன். கம்பளையில் க. பொ. த சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் 300 மாணவ, மாணவிகளுக்கு பரீட்சை வழிகாட்டல் நிகழ்வை கம்பளை பெரிய பள்ளிவாசல் மண்டபத்தில் நடத்தினோம்.

சர்வதேச காதலர் தினத்தை பொது மக்கள் வேறு கோணத்தில் பார்ப்பார்கள். ஆனால் நாங்கள் அன்பை எப்படிப் பகிர்ந்து கொள்வோம் என்ற அடிப்படையில் வயது முதிர்ந்தோர் நிலையத்திற்கு விஜயம் செய்வோம். அங்கு அவர்களுடன் இருந்து உணவுகளைப் பகிர்ந்துண்டு அன்பினைப் பரிமாறிக் கொள்வோம். அப்படி ஒரு புதிய வேலைத் திட்டத்தை செய்து வருகிறோம். இரண்டு வருடங்கள் மிகத் திறன்பட சமூகப் பணிகளை செய்து வருகின்றோம்.

இரண்டு வருடத்தில் புதிய தலைமைத்துவத்திடம் கம்பளை வை. எம். எம். ஏ. கிளையை ஒப்படைத்தேன். ஆனால் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி என்னை கைவிடவில்லை. கண்டி மாவட்டத்தின் பணிப்பாளராக கடமையாற்றக் கூடிய பௌஸ் ஏ. காதர் வெளிநாட்டில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் அவர் மாத்தளை மாவட்டத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு 2021 இல் டிசம்பர் மாதம் கண்டி மாவட்டத்திற்குப் பணிப்பாளராக என்னை நியமனம் செய்தார்கள்.

அதன் பின்பு கண்டியில் பல வை. எம். எம். ஏ. கிளைகள் பின்தங்கிய நிலையில் இருந்தது. பெரியளவில் செயற்பாடுகள் இருக்க வில்லை. ஆவணங்கள் இல்லை. அந்த நேரத்தில் அவர்களை அடிக்கடி சந்தித்து அவர்களுக்கான வழிகாட்டல்களைச் செய்து கூடுதலான வேலைத் திட்டங்களை முன்னெடுத்தோம்.

முதலாவது வேலைத் திட்டமாக கம்பளையிலுள்ள வர்த்தகப் பிரமுகர்கள் அரசியல், பிரமுகர்கள் அம்ஜத் ஹாஜியார். வஷீர் முக்தார், பஸ்லான் பாரூக், வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, பொருளாளர் பாசில் உள்ளிட்டவர்களுக்கான விசேட விருது வழங்கி கௌரவித்தோம். இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கம்பளை பிரதேச செயலாளர் கலந்து கொண்டார்.

கல்ஹின்னையில் கல்வித் துறையை மேம்படுத்தினோம். மஹிய்யாவையில் விளையாட்டுத் துறையை ஊக்குவித்தோம். அக்குறணைக் கிளையை மீள புனர்நிர்மாணம் செய்தோம். வத்தேகெதர, உடத்தலவின்னை, மடவளை போன்ற இடங்களில் புதிய நிர்வாக தெரிவுகளை நடத்தினோம். கண்டி வை. எம். எம். ஏ. கிளை உயிர்ப்பித்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டோம். இத்தகைய நடவடிக்கையின் மூலம் கண்டி மாவட்டத்தில் வை. எம். எம். ஏ. கிளைகள் துரிதமாக செயற்படத் தொடங்கின.

அந்த வகையில் இம்முறை அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 72 வது தேசிய மாநாடு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. சிறந்த மாவட்டப் பணிப்பாளருக்கான விருது எனக்கு கிடைக்கப்பெற்றது. மடவளை, மஹிய்யாவ, கல்ஹின்னை, கட்டுக்கலை ஆகிய ஐந்து கிளைகளுக்கும் எட்டு விருதுகள் இம் மகாநாட்டின் போது கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### ? இவ்வமைப்பின் ஊடாக நீங்கள் முன்னெடுக்கவுள்ள செயற் திட்டங்கள் யாவை?

வை. எம். எம். ஏ. என்பது ஒரு தேசிய அமைப்பு. இளைஞர்கள் மத்தியில் மக்கள் மயப்படுத்தலுக்கான செயலமர்வுகள், பயிற்சிக் கருத்தரங்குகள் கிளைகளின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டம் இருக்கிறது. கிளை மட்டத்தில் வயதானவர்கள். இரண்டாவது தலைமுறையினர்,மூன்றாவது தலைமுறையினர் என இருக்கிறார்கள.இதில் விசேடமாக இளம் தலைமுறையினர்களை உள்வாங்குதல் வேண்டும். அவ்வாறு உள்வாங்கி அவர்களுக்கு உகந்த முறையில் வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல் வேண்டும்.

### ? உங்களுக்கு வேறு அமைப்புக்களோடு தொடர்புகள் உள்ளதா?

ஜே. ஜே. பவுண்டேசனுடைய வழிகாட்டலும் ஆதரவும் எனக்கு இருக்கிறது என்று சொல்லலாம். இவ்வமைப்பு அறிமுகம் எப்படிக் கிடைத்தது என்றால், இலங்கையின் சுதந்திர தின விழா இடம்பெறவிருந்தது.அப்போது கம்பளை கல்வி வலயத் திணைக்களத்தின் பணிப்பாளரிடமிருந்து 500 மரக்கன்றுகள் பெற்றுத் தருமாறு எம்மிடம் கோரிக்கை விடுத்தார். ஜே. ஜே. பவுண்டேசன் அமைப்பின் தலைவர் ஹனீப் மரக் கன்றுகள் பகிர்ந்தளிப்பதாக நாம் அறிந்தோம். அவரிடம் கோரிக்கை விடுத்த போது பெரிய லொறி ஒன்றில் 500 மரக்கன்றுகளை அவர் அனுப்பி வைத்திருந்தார்.



எங்களுடைய வேலைத் திட்டங்கள் யாவும் அரச நிறுவனங்களோடு இணைந்துதான் மேற்கொண்டுள்ளோம். பிரதேச செயலகம், கல்வித் திணைக்களம், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை, சுகாதார வைத்திய அலுவலகம் ஊடாகத்தான் இந்த வேலைத் திட்டங்களை நாங்கள் முன்னெடுப்போம். அல்லது பள்ளிவாசல்களின் நிர்வாகிகளின் ஊடாகத் தான் நாங்கள் நிறையப் பணிகள் செய்துள்ளோம். தனிப்பட்ட முறையில் செய்வதில்லை.

### ? அப்படியாயின் உங்கள் கல்வி வாழ்க்கை பற்றி

நான் 1997 இல் பிறந்தேன். 2002 இல் என்னுடைய ஆரம்பக் கல்வி முதல் க. பொ. த சாதாரண தரம் வரையிலும் கம்பளை சாஹிராக் கல்லூரியில் கற்றேன். க. பொ. த உயர் தரக் கல்வியை நுவரெலியா சென்சேவியஸ் கல்லூரியில் கற்றேன். அதன் பின்பு கெகுணுகொல்ல அஸ்டா கல்வி நிலையத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்றேன்.

### ? உங்களுக்கு சமூகப் பணிகளில் தூண்டுதலாக இருந்தவர்கள் பற்றி

என் தந்தை பள்ளிவாசல்களில் இமாமாக கடமையாற்றி வருபவர். அவர் சமூகத்தோடு ஈடுபாடு உடையவர். அவர் பெயர் உஸைன்தீன் மௌலவி. அப்பாவும் ஒரு சமூக சேவையாளர்.அவர் ஊரின் தலைவராக செயற்பட்டவர். சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து மக்களுக்கும் ஊர் தலைவராக இருந்து செயற்பட்டவர்.என் தந்தை இரத்தினபுரி, நாவலப்பிட்டி, உடத்தலவின்னை



போன்ற பல பள்ளிகளில் கடமை யாற்றியவர்.

தந்தை சமூகப் பணிகளில் ஈடுபடும் போது என்னையும் அழைத்துச் செல்வார். பொலிஸ் நிலையத்தில் சில அழைப்புக்கள் தந்தைக்கு வரும். அங்கு தந்தை சென்று பொதுக்காரியங்களில் ஈடுபடுவதை அவதானித்து வந்தேன். அது மட்டுமல்ல சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்காக தந்தையிடத்தில் வருவார்கள். அவர் அதனை நிதானமாக சமநிலையோடு பிணக்குகளைத் தீர்த்து வைப்பார்.

க. பொ. த உயர் தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போதே சமூகப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. நான் பாடசாலை செல்லும் போது சில பாடங்களுக்கு உரித்தான ஆசிரியர்கள் இல்லை. அந்த ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கான ஆளாக நான் இருத்தல் வேண்டும் என்ற ஆதங்கம் எனக்குள் அக்கால கட்டத்தில் இருந்தது.



2017 இல் கஹட்டபிட்டியவிலுள்ள அல் மினா என்ற பாடசாலையில் உள்ள அதிபரைச் சந்தித்தேன். அப்பாடசாலையின் அதிபர் நான் ஐந்தாம் ஆண்டு கல்வி பயிலும் போது அப்பாடத்திற்கு ஆசிரியையாக இருந்தவர். இங்குள்ள பிள்ளைகளை கல்வியின் பால் ஆற்றுப்படுத்தி வலுவூட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பம் ஒன்றைத் தருவீர்களா என அனுமதி கேட்டேன். அதற்கு அதிபரும் இணக்கம் தெரிவித்தார்.

அப்போது கம்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் என்னோடு நன்கு பழக்கம். அவர் தந்தையோடு மிக நெருக்கமான உறவைப் பேணி வந்தார். ஆதலால் அவரைச் சந்தித்து மாணவர்களுக்கு போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வூட்டல் சம்பந்தமாக உரையாற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்தேன். அவர் அதற்கு சம்மதம் தெரிவித்தார்.

65 க. பொ. த சாதாரண தரப் பிள்ளைகளுடன் 65 தாய்மார்களுக்கான விழிப்புணர்வூட்டல் செயலமர்வை அப்பாடசாலையில் இலவசமாக நடத்தினேன்.அப்போது கையில் பெருமளவு பணம் இல்லை. எப்படியும் இதையும் செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டேன். இதில் நான் பிள்ளைகள் எவ்வாறு பெற்றோர்களுடன் நடந்து கொள்ள வேணடும். பெற்றோர்கள் எவ்வாறு பிள்ளைகளுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற தலைப்பில் உரையாற்றினேன். அதில் விசேடம் என்னவென்றால் பிள்ளைகளும் பெற்றோர்களும் என்னை ஆரத்தழுவி என்னை வியந்து பாராட்டினார்கள். இந்த செயற்திட்டத்தை தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும் என்று அப்பொழுதுதான் நான் ஒரு தீர்மானத்தை எடுத்தேன். எந்தவொரு அறவீடும் இல்லாமல் இந்த வேலைத் திட்டத்தை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டேன். என்னுடைய கன்னி முயற்சி வெற்றியளித்தது.

2018 இல் இருந்து எங்கள் இல்லத்தில் 20 வருடங்களாக அரபுக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. அதில் கல்வி பயிலும் பிள்ளைகளின் பெற்றோர்களை வரவழைத்து சமூகச் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பிலான கூட்டம் ஒன்றை நடத்தினேன். அதில் எவ்வாறு அன்பளிப்புக்களை பெற்றுக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் பண சேகரிப்புத் திட்டத்தையும் அறிமுகம் செய்தேன். அந்த வகையில் முதன் முதலாக ரூபாய் ஐம்பதாயிரம் நிதி சேகரிக்கப்பட்டது. அந்தப் பணத்தை கொண்டு எங்களுடைய அரபுக் கல்லூரி மாணவர்களை அழைத்துக் கொண்டு மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குச் சென்றோம்.



புற்று நோய் வைத்தியசாலையில் உள்ள பிள்ளைகளுக்கு அரபுக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த பிள்ளைகளின் கரத்தினால் உணவுப் பொருட்கள் அன்பளிப்புச் செய்தோம். இதில் ஒரு சமூக நல்லிணக்கமும் காணக் கூடியதாக இருந்தது எனலாம். அடுத்து திஹாரியிலுள்ள அங்கவீனர் நிலையத்திற்கும் சென்று நாங்கள் உணவுப் பொருட்கள் பகிர்ந்தளித்தோம்.

இப்படி கடந்த ஐந்து வருடங்களில் சுமார் 150 வேலைத் திட்டங்களை செய்துள்ளேன். இந்த வேலைத் திட்டங்களை பிரித்துச் செயற்படுத்தி வருகின்றேன். க.பொ. த சாதாரண தரம், உயர் தரப் பரீட்சைக்கு தோற்றும் பிள்ளைகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள். போதை ஒழிப்பு வேலைத் திட்டம். மரம் நடுகை வேலைத் திட்டம், அனாதை இல்லம், முதியோர் இல்லம், வலது குறைந்தோர் நிலையம் போன்ற இடங்களுக்குச் சென்று அவர்களுடன் சேர்ந்து கலந்துரையாடல்கள் நடத்துதல், சிரமதானங்கள் செய்தல், அவர்களுக்கு தேவையான உடைகள் சாப்பாடுகள் பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

உலருணவுப் பொதிகள் வழங்குதல், விதவைத் தாய்மார்களுக்கு உதவி செய்தல், அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், உலப்பனையில் ஒரு வீடொன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ளோம்.

முதலில் ஹக்கீமிய்யா அரபுக் கல்லூரி பிள்ளைகளின் பெற்றோர்கள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட சமூகப் பணி அது பரந்து விரிந்து பட்ட நோக்கில் சென்று பின்பு எக்லட் யுனைட்ஸ் ஸ்ரீலாங்கா என்ற பெயரில் இயங்கி வருகின்றது. இந்த அமைப்பில் 250 பேர் அளவில் அங்கத்தவர்கள் இருக்கின்றனர். இதில் எல்லா சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளும் இணைந்து கொண்டுள்ளனர். இதன் உதவிப் பணிப்பாளராக சொஸ்டிக்கா என்ற பிள்ளை செயற்பட்டு வருகின்றார். இந்த அமைப்பு உருவாக்குவதற்கு முன்னர் நான் பல சமூகத் தொண்டு நிறுவனத்தில் சேர்ந்து இயங்கியுள்ளேன்.



குறிப்பாக இந்த நிதியை எங்களுடைய அங்கத்தவர்களிடத்தில் இருந்து தான் பெற்று செய்து வருகின்றோம்.

சுற்று வட்டாரத்திலுள்ள தனவந்தர்கள், நன்கொடையாளர்கள் ஆகியோர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி செய்து வருகிறோம். எங்களுடைய அனைத்துப் பணிகளும் தொண்டு அடிப்படையில் தான் செய்து வருகிறோம்.

# ரப்பில் ஆலமீன்

## புரிந்து கொள்ள வேண்டிய உண்மை

அருள் மறையாம் அல் குர்ஆனின் ஆரம்ப அத்தியாயமே அல் பாத்திஹா ஆகும். இது மக்காவில் அருளப்பட்ட ஏழு வசனங்களைப் கொண்டதோர் சூரா. இந்த அத்தியாயத்தின் இரண்டாவது வசனமாக 'அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்' (எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே. (அவன் தான்) அகிலத்தார் அனைவரையும் படைத்து வளர்த்துப் பக்குவப்படுத்துபவன்' (01:02) என்ற வசனம் இடம்பெற்றுள்ளது. இவ்வசனம் இரண்டு பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது. அதன் ஆரம்பப் பகுதி ஓதப்பட்டதும் அல்லாஹ் புரிந்துள்ள அருள்களை இறைநம்பிக்கையாளனின் நினைவுக்குக் கொண்டு வரக்கூடிய வகையில் அமைந்துள்ளது. அதன் ஊடாக அல்லாஹ்வை மனிதன் சுயமாகவே புகழ்ந்து துதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதனால் இறைநம்பிக்கையாளன் இயல்பாகவே 'அல் ஹம்துல்லில்லாஹ்' என்று (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரிதாகட்டும்) குறிப்பிடுவான்.

அல்லாஹ்வின் அருள்களை மனிதன் இயல்பாகவே புரிந்து கொள்ளும் போது இவ்வார்த்தை தன்னியல்பாகவே வெளிப்பட வேண்டும். அதுவே அல்லாஹ்வின் ஏற்பாடாகும்.

இவ்வசனத்தின் இரண்டாம் பகுதி 'ரப்பில் ஆலமீன்' (அனைத்து உலகங்களையும் படைத்து, பராமரித்து, கண்காணித்து, பாதுகாத்து நிர்வகிப்பவன் அகிலங்களின் இறைவன்) என்கிறது.

இங்கு ஆலம் என்றால் உலகம். ஆலமூன் என்றால் பல உலகங்களைக் குறிப்பிடும். இது பன்மைச் சொல். இங்கு உலகங்கள் என்பது மனிதர்கள் உலகம், விலங்குகள் உலகம், தாவரங்கள் உலகம் உள்ளிட்ட எல்லா படைப்பினங்களதும் உலகங்களைக் குறிப்பதாக சில இஸ்லாமிய அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி படைப்பினங்கள் அனைத்தையும் படைத்தவனாகவும் அவற்றை பராமரித்து, கண்காணித்து, பாதுகாத்து நிர்வகிப்பவனாகவும் அல்லாஹ் இருக்கின்றான். அத்தோடு அவன் படைப்புக்களை சீர்திருத்தக் கூடியனவனாகவும் பண்படுத்தக்கூடியவனாகவும் உள்ளான். படைப்புக்களைப் படைத்ததோடு தன் பணிகளை அவன் நிறுத்திக் கொள்ளவில்லை. ஒவ்வொரு படைப்புக்கும் தேவையான அனைத்தையும் அவன் வழங்கிக் கொண்டிருப்பவனாகவும் இருந்து கொண்டிருக்கின்றான்.

அதேநேரம் அல்லாஹ்வுக்கும் அவனது படைப்புகளுக்கும் இடையில் ஒரு வினாடியும் அறுபடாததும் தொடரானதுமான தொடர்பு இருந்து கொண்டே இருக்கின்றது. அல்லாஹ்வின் நாட்டம் அனுமதி இன்றி படைப்புகளால் எதுவொன்றையும் ஆற்ற முடியாது. இந்த உலகில் இடம்பெறக்கூடிய எதுவொன்றும் அவனது கட்டளை, அனுமதியுடன் தான் நிகழுகின்றது. இது இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். அல்லாஹ் படைப்பாளன் என்பதை எல்லா மனிதர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனாலும் அவனால் அனைத்து படைப்புகளும் பராமரிக்கப்படுவதையும் நிர்வகிக்கப்படுவதையும் கண்காணிக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்ளப் பின்நிற்கின்றனர். அவனால் எல்லாவற்றையும் எவ்வாறு செய்ய முடியும் என எண்ணுகின்றனர். இது அவனது ஆற்றல்களையும் வல்லமையையும் உரிய ஒழுங்கில் அறிந்து தெரிந்து கொள்ளாததன் வெளிப்பாடே அன்றி வேறில்லை. அதன் விளைவாகவே நம்பிக்கை தொடர்பில் பலவீனங்களும் குறைபாடுகளும் ஏற்படுகின்றன.

கிரேக்க தத்துவஞானி அரிஸ்டோட்டிலின் ஆரம்பக் கொள்கையும் இவ்வாறு தான் இருந்தது. இறைவன் படைப்பாளன் தான். அத்தோடு அவனது பணி முடிந்து விட்டது. இந்த உலகில் நடந்து கொண்டிருக்கும் அனைத்து நிகழ்வுகளும் அவற்றின் இயல்பிலேயே இடம்பெறுகின்றன என்று அவர் கருதினார். இப்படியான பார்வை ஆரம்பம் முதல் இன்று வரையும் நீடிக்கவே செய்கிறது.

ஆனால் மனிதனின் இப்பார்வையை நிராகரிக்கும் வகையில் தான் ரப்பில் ஆலமீன் என்ற பதம் அமைந்திருக்கின்றது. அல்லாஹ் படைப்புகளை படைப்பதோடு மாத்திரம் நின்று விடாது அவற்றை நிர்வகித்து, பரிபாலித்து, கண்காணித்துக் கொண்டிருப்பவனாகவும் இருக்கின்றான். தேவையான மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் அவன் செய்து கொண்டிருக்கின்றான் என்பதை இது தெளிவாக எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன. அல்லாஹ்வுக்கும் படைப்புகளுக்கும் இடையிலான தொடர்பானது அன்பின் அடிப்படையிலானதும் அருளின் அடிப்படையிலானதும், கருணையின் அடிப்படையிலானதும், இரக்கத்தின் அடிப்படையிலானதும் ஆகும். அந்த வகையில் படைப்புகளின் இருப்பே அல்லாஹ்வின் எல்லையில்லாத அருளின் வெளிப்பாடு தான்.

அதனால் 'அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்' என்ற வசனத்தை அதற்கேயுரிய கண்ணோட்டத்தில் நோக்கும் போது இந்த உண்மைகளைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

பொதுவாக ஒரு மனிதன் தன்னைப் பற்றி சிந்தித்துப் பார்த்தால், தம் உறுப்புகள் தாம் விரும்பாவிட்டாலும் கூட இயங்கிக் கொண்டிருப்பதை அவனால் அவதானிக்க முடியும். தமக்கு சொந்தமான அவயவங்கள் தமது அனுமதி இன்றி இயங்குகின்றன. இது எவ்வாறு சாத்தியமாகிறது.



மர்லின் மரிக்கார் ...

உறுப்புக்களின் சொந்தக்காரன் இருக்கும் போது அவனது கட்டளை, அனுமதி இன்றி அவற்றால் எவ்வாறு தொழிற்பட முடிகிறது. அவை சீராகவும் ஒழுங்குமுறையாகவும் செயற்படுவதற்கான கட்டளையை அவை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றன. இவை குறித்து ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு தான் ஒவ்வொரு படைப்பும் இயங்கி தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை விரும்பியோ விரும்பாமலோ அல்லாஹ்வின் கட்டளை, நிர்ணயப்படி செயற்படுகின்றன. **(அல் குர்ஆன்)**

அல்லாஹ்வின் கட்டளை, கண்காணிப்பு, நிர்வகிப்பு இல்லாவிட்டால் ஒவ்வொரு படைப்பும் தம்மிஷ்டப்படி செயற்படும் நிலை தோற்றம் பெறும். அது முரண்பாடுகளுக்கும் மோதல்களுக்கும் வழிவகுக்கும். அதன் விளைவாக சீரழிவுகளும் பேரழிவுகளும் தான் ஏற்படும். அது இந்த பிரபஞ்சத்தினதும் உலகத்தினதும் இருப்பையே கோள்விக்கு உள்ளாக்கி விடும்.

உதாரணமாக சூரிய குடும்பத்தில் பூமி உள்ளிட்ட ஏனைய கோள்கள் சூரியனை வலம் வந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கோள்கள் நீள்வட்டப் பாதையில் அவற்றுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பாதையில் சீராக இயங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வேற்பாட்டுக்கு அமைய எந்தவொரு கோளும் தமக்கு நிர்ணயிக்கப்பட்ட பாதையில் இருந்து சிறிதளவேனும் வெளியேறி விலகி செல்ல முடியாது. அதற்கு இடமளிக்கப்படவும் இல்லை. இவ்வேற்பாடு இல்லாவிட்டால் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை சிந்தித்துப் பார்ப்பது அவசியம். அந்த ஏற்பாட்டை செய்தவன் தான் சர்வ வல்லமை படைத்த அல்லாஹ். அவனைத் தவிர வேறு எவராலும் அதனைச் செய்யவே முடியாது.

அதேபோன்று மனிதனை விடவும் பலமான படைப்புகள் கடலிலும் தரையிலும் காணப்படுகின்றன. அவை மனிதனுக்கு பணி புரிகின்றன. அவனுக்காக உழைக்கின்றன. ஒரு சில படைப்புக்கள் தம்மைத் தியாகம் செய்து அவனுக்கு உணவாக அமைகின்றன. இன்னும் சில படைப்புகள் மனிதனின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்படுவதோடு அவனது இருப்பிடத்திற்கு தேவையான கட்டிலாக, தடியாக, கதவாக, இருக்கையாக என்றபடி மாறிக் கொள்கின்றன. மனிதனை விடவும் பல மடங்கு பலம் கொண்ட மலைகளும் கூட மனிதனின் விருப்புக்கு இணங்கிச் செயற்படுகின்றன. இவ்வாறு இப்படைப்புகள் செயற்படுவதற்கான ஏற்பாடுகளை செய்தவன் யார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்? அதனால் தான் அல்லாஹ் தன் அருள் மறையில் '(மனிதர்களே) வானங்களிலும் பூமியிலும் உள்ளவைகளை நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கின்றான்' **(அல் குர்ஆன் 31:20)** என்று குறிப்பிட்டுள்ளான்.

அவ்வாறானதொரு ஏற்பாடு இல்லாவிட்டால் மனிதனுக்கும் ஏனைய படைப்புகளுக்கும் இடையில் மோதல்களும் முரண்பாடுகளும் நிச்சயம் ஏற்படும். மனிதனுக்கு படைப்புகள் கட்டுப்படாத நிலை உருவாகும். அதன் விளைவாக அவனது இருப்பே கேள்விக் குறியாகிவிடும். குறிப்பாக மனிதன் உணவுக்கு கூட திண்டாடும் நிலைக்கு கூட முகம் கொடுக்க நேரிடும். அதுவும் மனித வர்க்கம் உள்ளிட்ட முழு பிரபஞ்சமும் அழிந்து போகவே வழிவகுக்கும்.

இவ்வாறு மிகவும் நுணுக்கமான ஒழுங்கையும் சமநிலையையும் கனகச்சிதமாக ஏற்பாடு செய்து வைத்திருப்பவன் தான் அல்லாஹ்.

இதனை சரியான கண்கொண்டு நோக்கும் எந்தவொரு மனிதனும் 'அல்ஹம்து லில்லாஹ் ரப்பில் ஆலமீன்' என்று அல்லாஹ்வை இயல்பாகவே புகழ்ந்து துதிப்பான்.

இதன்படி 'ரப்பில் ஆலமீன்' என்ற பதத்தின் ஊடாக இஸ்லாத்தின் அடிப்படையும் அதன் சீரான தன்மையும் தெளிவாக எடுத்தியம்பப்படுகிறது. இந்த ஏற்பாடுகளை அறிந்து தெரிந்து செயற்படுவது அவசியம். அதற்கான ஏற்பாட்டையும் ஊக்குவிப்பையும் அல்லாஹ்வே செய்து வைத்திருக்கின்றான். அதில் தினமும் 17 தடவைகள் இந்த அத்தியாயத்தை ஓதுவது அவசியம். அதாவது ஐவேளைத் தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் இதனை ஓத வேண்டும். இல்லாவிடில் தொழுகை நிறைவேறாது என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

ஆகவே இவ்வசனத்தின் ஊடாக அல்லாஹ் எவ்வளவு மாபெரும் உண்மையை எடுத்தியம்பியுள்ளான் என்பதை மனிதன் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ப அவனை புகழ்ந்து நினைவுகூர்ந்தபடி தம் ஒவ்வொரு செயலையும் அமைத்துக்கொள்ள வேண்டும். அது அவனுக்கு இறையருளாகவும் பெரும்பாக்கியமாகவும் நிச்சயம் அமையப்பெறும்.

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# சமாதானத்திற்கு முக்கியமளிக்கும் இறைவழிகாட்டல்

இஸ்லாம் என்ற வார்த்தை 'ஸலாம்' எனும் மூலச் சொல்லிலிருந்து பிறந்தது. அது அமைதி, சமாதானம், இணங்கிச் செல்லல், சாதுவாக நடந்து கொள்ளல், பாதுகாப்பு போன்ற பல்வேறு அர்த்தங்களைத் தரக்கூடியதாக உள்ளது.

அந்தவகையில் அமைதியை விரும்பி, நேசித்து, அதற்காகப் பிரார்த்தனை செய்தலே இஸ்லாம் என்பதன் பொருளாகும். இதனால் தான் அமைதியை ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்விலும் ஒவ்வொரு நாளும் பறைசாற்றும் வகையில் இஸ்லாம் மனிதர்களுக்கிடையிலான உறவுகளையும் தொடர்புகளையும் வடிவமைக்கிறது.

மன அமைதி, குடும்ப வாழ்வில் அமைதி, சமூக அமைதி, சர்வதேச அமைதி என்றவாறு இஸ்லாம் அமைதியை அடித்தளமாகக் கொண்டுள்ளது. இவ்வகையில் அமைதியைப் பூமியில் நிலைநாட்டுவதே இஸ்லாத்தின் முதன்மையான குறிக்கோளாகும். இது தொடர்பில் அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

*'இறைவனை நினைவுகூர்வதன் மூலம் உள்ளங்கள் அமைதியடைகின்றன.'*

***(ஸூறா ரஃத்: 28)***

*'நீங்கள் மன நிம்மதி பெறவேண்டும் என்பதற்காகவே உங்களிலிருந்தே அவன் உங்களுக்கான துணையைப் படைத்தான்.'*

***(ஸூறா ரூம்: 21)***

*'அவர்கள் சமாதானத்தின்பால் திரும்பிவிட்டால் நீங்களும் அதன் பக்கம் திரும்பிவிடுங்கள்.' (ஸூறா அன்பால்: 61)*

அதேபோன்று இரு பிரிவினர் தங்களுக்கிடையே சண்டையிட்டுக் கொண்டால் அவர்களிடையே சமாதானம் செய்து வைக்குமாறு அல்குர்ஆன் கட்டளையிடுகிறது.

***(ஸூறா ஹுஜுராத்: 9)***

இவ்வாறு சமாதானத்தையும் அமைதியையும் இஸ்லாம் தனது போதனைகளின் அடிநாதமாகக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு தொழுகையின் முடிவிலும் இரு புயங்களிலுமுள்ள வானதூதர்களை (மலக்குமார்களை) நோக்கி 'அஸ்ஸலாமு அலைக்கும்' (உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்) என்று ஒரு முஸ்லிம் பிரார்த்தனை புரிகின்றான்.

நேரடி சந்திப்புகள், சந்தித்துப் பிரிகின்ற தருணங்கள், தொலைபேசி அழைப்புகள், கடிதங்கள், குறுஞ்செய்திகள் என மனிதர்களுடனான அத்தனை உறவாடல்களின் ஆரம்பத்திலும் இறுதியிலும் 'உங்கள் மீது அமைதியும் சாந்தியும் உண்டாகட்டும்' எனும் வார்த்தையை நாம் பயன்படுத்துகிறோம். இதுவே ஒரு முஸ்லிமின் வாழ்த்து முறையாகும். முகமன்களில் தலை சிறந்ததுமாகும்.

தாம் வாழும் சமூக சூழலில் அமைதியை நிலைநாட்டுவதும் அதனை பரவச் செய்வதும் மார்க்கத்தில் மிகச் சிறந்த செயல்களாகும். 'இஸ்லாத்தில் எது சிறந்தது எனக் கேட்கப்பட்ட ஒரு சமயத்தில், பசித்தோருக்கு உணவளிப்பதும் அறிமுகமானவர்களுக்கும் அறிமுகமாகாதவர்களுக்கும் ஸலாம் சொல்வதுமாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முத்தபக்குன் அலைஹி)

இப்ராஹீம் நபியவர்கள் தமது தாய் நாட்டுக்காக இவ்வாறு பிரார்த்தனை செய்தார்கள். 'யா அல்லாஹ்! மக்காவாகிய இந்நகரத்தை அமைதியளிக்கக்கூடியதாக ஆக்குவாயாக.' (ஸூறா பகரா: 126) அதேபோன்று எமது தாய் நாட்டின் அமைதிக்காக நாமும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய கடமைப்பட்டுள்ளோம்.

அமைதியான குடும்ப மற்றும் சமூக சூழலைக் கட்டியெழுப்புவதனூடாக நாட்டில் நிம்மதியான, மன மகிழ்ச்சியுடன் கூடிய வாழ்க்கையை சாத்தியப்படுத்துவோம். மோதல், யுத்தம், வன்முறை, பகைமை, காழ்ப்புணர்ச்சி என்பன இல்லாத அழகியதொரு தேசத்தை உருவாக்குவோம்.

நிறம், இனம், பால், மொழி, குலம், கோத்திரம், தேசம், நாடு, நகரம்; என்ற வேறுபாடுகளைத் தாண்டி மனித சமத்துவமும் சகோதரத்துவமும் சமூக நீதியும் கோலோச்சுகின்ற வாழ்வியலை வேண்டி அல்லாஹ்விடம் இரு கரம் ஏந்துவோம்.

அல்லாஹுத்தஆலா எம் அனைவரது தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமூக வாழ்க்கையில் அமைதியையும் சுபீட்சத்தையும் நிம்மதியையும் நிலைத்திருக்க அருள்புரிட்டும்.

**அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித்**
**பொதுச் செயலாளர்**
**அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா**

# பிரச்சினையை சவாலாக கருதினால்...

உலகில் ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒரு தீர்வு இருக்கத்தான் செய்கிறது. ஒவ்வொரு தொல்லையில் இருந்தும் மீள ஒரு உபாயமும் இருந்து கொண்டு தான் இருக்கிறது.

இது தொடர்பில் அல் குர்ஆன், ஆகவே, நிச்சயமாக கஷ்டத்துடன் எளிது இருக்கிறது. **(அல் குர்ஆன் 94:5,6)** என்று குறிப்பிட்டுள்ளது.

நீங்கள் வீதியில் சென்று கொண்டிருக்கின்றீர்கள். வீதியின் ஓரத்தில் முட்செடியொன்று காணப்படுகிறது. அதிலுள்ள முட்களில் உங்கள் ஆடைகள் மாட்டிக் கொள்கின்றன. அதனால் உங்களால் அங்கிருந்து மேலும் நகர முடியாத நிலை ஏற்படுகிறது. அதிலிருந்து நீங்கிச் செல்வதற்கான உபாயங்களையே நீங்கள் முதலில் கையாளுவீர்களே அன்றி அது குறித்து எவரிடமும் முறையிட்டுக் கொண்டிருக்கவோ, அந்த முட்செடிக்கு எதிராக ஒப்பாரி வைக்கவோ மாட்டீர்கள். அதற்கு பதிலாக எவ்வாறு நடந்து கொண்டால் இதிலிருந்து விடுபட முடியும் என்று தான் நீங்கள் சிந்திப்பீர்கள்.

அந்த வகையில் மக்களுடைய விவகாரங்களிலும் இத்தகைய நடத்தையே சரியானது என்ற உண்மையை அறிவுள்ள மனிதன் அறிந்து கொள்வான். பலவிதமான நடத்தைகள், பண்புகள் கொண்ட மக்கள் மத்தியில் வாழும் போது சிலருடன் மோதல் நிலை ஏற்பட்டு விடலாம். சிலரிடமிருந்து துயரமும் தொல்லையும் வரலாம். தனக்குரிய உரிமையை சரிவரத் தரவில்லை என்ற உள்ளுணர்வு ஒருவரில் எழலாம்.

இத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கூச்சல்கள், எதிர்ப்புகள், கோஷங்கள் போட்டுக் கொண்டு முறையீடுகள் சமர்ப்பித்து கொண்டு இருப்பதற்கு பதிலாக அப்பிரச்சினையை தீர்க்கக்கூடிய உபாயம் என்ன என்று சிந்திக்க வேண்டும். வாழ்வின் ஒவ்வொரு பிரச்சினையையும் நாம் சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையை பிறர் உங்களுக்கு புரிந்த அக்கிரமம் என்றும் அதீத செயல் என்றும் நீங்கள் கருத முற்பட்டால் அதன் விளைவாக முறையீடுகள், எதிர்க்கூச்சல்கள் இடும் மனோபாவம் தான் உங்களுக்குள் எழும். இறுதியில் இது உங்களை நிராசையின் பக்கம் இட்டுச் செல்லும். இப்போதைய சூழ்நிலையில் என்னால் ஒன்றுமே செய்ய இயலாது என்ற முடிவுக்குத் தான் வருவீர்கள். முறையீடு செய்யும் மனப்பான்மை உங்களை நிராசை நிலைக்கு இட்டுச் செல்லலாம். அதனால் இதற்கு நேர்மாறாக ஒவ்வொரு பிரச்சினையையும் நமக்கு விடப்பட்ட சவாலாக நீங்கள் கருதினீர்களேயானால் உங்களுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் ஆற்றல்கள் மலரத் தொடங்கும். நிலைமையை சமாளிக்கக்கூடிய தீரமும் உங்களுக்குள் ஏற்படும்.

முந்தைய நிலையில் உங்களுடைய உள்ளம் எதிர்மறையான திசையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இப்போது உடன்பாடான, ஆக்கபூர்வமான வகையில் நடைபோடத் துவங்கும். இதுதான் இன்றைய உலகில் ஒவ்வொருவருடைய வெற்றிக்கும் தோல்விக்குமுரிய இரகசியமாகும்.

இவ்வுலகில் ஒருவருக்கு ஏற்படும் பிரச்சினையிலிருந்து விடுபட அவர் முறையிடும் மனோநிலையை அடைகிறார் எனில் வீணாய்ப்போவது அத்தகையவரின் விதியாகும். இதற்கு நேர்மாறாக தனக்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கும் உபாயங்களை தேடிப்பிடிக்கும் மனோபாவத்தை ஒருவர் தனக்குள் வளர்த்துக்கொண்டால் நிச்சயம் அவர் வெற்றியடைந்தே தீருவார்.

**தொகுப்பு:**
**ஜத்து முஹம்மத் ஹம்ஸா ...**

# பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்திய மார்க்கம்

இஸ்லாம் பெண்களை குடும்பத்திலும் சமூகத்திலும் முழுமையான அங்கமாக கருதுகிறது. மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் வழிவகுப்பவர்களாக அவர்கள் விளங்குகின்றனர்.

இது தொடர்பில் அல்லாஹ்த ஆலா தன் அருள்மறையில், 'அவன் (அல்லாஹ்) உங்கள் இனத்திலிருந்து துணைவரை படைத்தவன். அவர்கள் மூலம் நீங்கள் அமைதிபெற வேண்டும் என்பதற்காக உங்களுக்கிடையில் அன்பையும் அருளையும் தோற்றுவித்தான். இது அவனுடைய சான்றுகளில் உள்ளவையாகும். சிந்திக்கும் மக்களுக்கு இதில் நிச்சயமாக நிறைய சான்றுகள் உள்ளன'. **(அல் குர்ஆன் 30:21)**

அதேநேரம் பெண்கள் முதுமை அடைந்துள்ளவர்களாக இருப்பினும் இள வயதினராக இருப்பினும் அவர்களது நலன்களில் அக்கறை காட்டுவதை இஸ்லாம் பெரிதும் போற்றியுள்ளது. அத்தோடு பெண், தாய் அல்லது மனைவி அல்லது சகோதரி அல்லது மகள் என்ற எந்த ஸ்தானத்தில் இருந்த போதிலும் அவர்களுடன் நீதியாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்தியும் இருக்கின்றது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'அவன் இழந்தவனாகட்டும்' என்றார்கள். இதனை செவியுற்ற நபரொருவர், 'அவர் யார் அல்லாஹ்வின் தூதரே? என வினவினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'வயது முதிர்ந்த பெற்றோர் இருவரும் அல்லது அவர்களில் ஒருவர் தம்மோடு இருந்தும் சுவர்க்கத்தை அடையாதவர்' என்று குறிப்பிட்டார்கள். **(ஆதாரம்: முஸ்லிம்)**

மற்றொரு சந்தர்ப்பத்தில், 'இரக்க சிந்தை இல்லாதவர் நன்மையே அற்றுப்போனவர் ஆவார்' என்றும், 'இரண்டு பெண் மக்களை வளர்த்து பராமரிப்பவரும் நானும் நீதித் தீர்ப்பு நாளில் அடுத்தடுத்து இருப்போம்' என்றும் நபி (ஸல்) அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள். **(ஆதாரம்: முஸ்லிம்)**

இந்த நபிமொழி பெண்களை இஸ்லாம் எவ்வளவு தூரம் கௌரவப்படுத்தி பெருமைப்படுத்தி இருக்கின்றது என்பதைத் தெளிபடுத்துகின்றது.

உண்மையில் பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி அவர்களைக் கௌரப்படுத்தியுள்ள மார்க்கமாக இஸ்லாம் விளங்குகிறது என்றால் அது மிகையாகாது.

**ஏ.எம். முகம்மத் ஸவ்வான் ...**
**சீனன்கோட்டை, பேருவளை**



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான



திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. கீழே கொடுக்கப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்குக.**

விஞ்ஞான கண்டுபிடிப்புக்களில் கணினி முக்கிய இடத்தை வகிக்கின்றது. இது கட்புல செவிப்புல ஊடகமாகும். கணினி மிகச்சிறந்த தொலைத் தொடர்பு சாதனமாக விளங்குகிறது. இதன்மூலம் உலக விடயங்களை வீட்டில் இருந்தபடியே அறிந்துகொள்ள முடிவதோடு இது கல்விக்கு பெருமளவு உதவி புரிகின்றது. அது மட்டுமல்லாமல் சிறந்ததொரு பொழுதுபோக்கு சாதனமாகவும் திகழ்கிறது.

1. கணினி எத்தகைய ஊடகமாகும்?

……………………………………………………………………………………….

2. கணினியின் பயன் ஒன்று எழுதுக.

……………………………………………………………………………………….

3. இப்பந்தியில் இடம்பெற்றுள்ள இரண்டு இடப்பெயர்களையும் எழுதுக.

……………………………………………………………………………………….

4. அஃறினை ஒன்றன்பால் ஒருமை பெயர்ச்சொல் ஒன்றினை பந்தியிலிருந்து தெரிக.

……………………………………………………………………………………..

5. இங்கு பெருமளவு எனும் பதம் விளக்கும் கருத்து யாது?

……………………………………………………………………………………..

6. ஒத்த கருத்து தருக.
i. உலகம் - ………………………….. ii. உதவி - ………………….......

**II. பின்வருவனவற்றுள் மிகப்பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க.**

7. பனை வடலி போல வேம்பு ……………………………..……… (குட்டி / கன்று)

8. ஆடு மந்தை போல மான் ……………………………….…… (கூட்டம் / கும்பல்)

9. உணவு உண்ட பின்பு சிறிது நேரம் ……………………………… (உலவுதல் / உழவுதல்) நன்று

10. அக்கால மன்னர்கள் ……………………………… (மறம் / மரம்) மிக்கவர்கள்.

**III.**

11. முகம் மலர்தல் எனும் மரபுத் தொடரின் கருத்து யாது?

……………………………………………………………………………….......................

12. விசாரணை முடிவில் வழங்கப்படுவது ……………………………………………

**13. பொருத்தமான பயனிலை சொல்லைத் தெரிக.**

i. அம்மாவும் மகளும் சந்தைக்குச் …………………… (சென்றனர் / சென்றார்)

ii. தாவரத்தின் மீது சூரிய ஒளி ……………………..……… (பட்டது / பட்டன)

iii. குருவிகள் வானில் ………………………………….. (பறந்தன / பறந்தது)

**14. பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துக.**

i. மின்னுவதெல்லாம் - ……………………………………………….………….

ii. ஆறிலும் சாவு - ………………………………………………………….…..

IV. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**(சிறுவர்கள், நாங்கள், கூவியது, போவார்கள், விளையாடின)**

15. தன்மை, பன்மை, பெயர்ச்சொல் …………………………………………..

16. அஃறினை, பன்மை, வினைமுற்று ………………………………………….

17. உயர்தினை, பன்மை, பெயர்ச்சொல் ……………………………………….

**V. சரியான முறையில் எழுதப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

18. வெற்றிலை / வெத்திலை

19. போயிலை / புகையிலை

**VI.**

20. உருவில் தரப்பட்டவற்றின் ஆங்கில பெயர்களை எழுதுக.





i. ……………..…………… ii. ……………………………

iii. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.
Please sit down

…………………………………………………………………………….


21. பின்வரும் சொற்களின் சிங்கள கருத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i. காய்கறிகள் - …………………… ii. கணினி - …………………………

iii. தண்ணீர் - ………………………..

**VII.**

22.




மேலே வரைபடத்தில் மூன்று பிள்ளைகள் பயணித்த பாதை காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய கீழே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடைதருக.

i. மூவரில் அதிக தூரம் பிரயாணம் செய்த பிள்ளை யார்?

………………………………………………………………………..

ii. நுகனை விட கஸான் எத்தனை தடவை அதிகமாக வலதுபக்கம் திரும்பியிருப்பான்?

………………………………………………………………………..


iii. சிரோனி இடப்பக்கம் திரும்பியது எத்தனை தடவை?

………………………………………………………………………..

23. | 7 0 4 / 3 5 | கூட்டினுள் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகப்பெரிய எண் எது?

……………………………………………………………..

24.




i. பிரதான திசைகளில் உள்ள எண்களின் கூட்டுத்தொகை யாது?

……………………………………………………………………………


ii. எந்த எதிர் எதிர்த் திசைகளின் கூட்டுத்தொகை இரண்டும் சமனானது?

……………………………………………………………………………

25. 25 தேங்காய்களில் 3/5 பங்கு விற்கப்பட்டது. மிகுதி இருக்கும் தேங்காய்களின் இரண்டு மடங்கு யாது?

……………………………………………………………………………

26.




இங்குள்ள எண் சட்டம் காட்டும் எண்ணுக்கு அடுத்து வரும் எண் யாது?

…………………………………………………………


27. செர்வின் ரூபாய் 1200.00க்கு 5 புத்தகங்கள் வாங்கினான். ஒரு புத்தகத்தின் விலை என்ன?

……………………………………………………………………………

28. 10830 இவ்வெண்ணை சொற்களில் எழுதுக.

……………………………………………………………………………

29.



இங்குள்ள சிறிய முக்கோணத்தின் ஒருபக்க நீளம் 2cm எனில் பெரிய முக்கோணத்தின் மூன்று பக்க மொத்த நீளம் எவ்வளவு?

…………………………………………………………

**VIII. சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

30. இலங்கையின் கரையோர மாகாணங்கள் அல்லாதது
i. தென் மாகாணம், வட மாகாணம்
ii. கிழக்கு மாகாணம், மேல் மாகாணம்
iii. மத்திய மாகாணம், ஊவா மாகாணம்

31. நாக மரத்திலுள்ள பூக்களின் இதழ்களின் எண்ணிக்கை
i. 4 ii. 5 iii. 6

32. தேசியக்கொடி அரைக்கம்பத்தில் ஏற்றப்படும் சந்தர்ப்பம்
i. துக்க தினம் ii. சுதந்திர தினம் iii. தேசிய துக்க தினம்

33. வறண்ட பிரதேசத்தில் வளரும் தாவர வகையானது
i. நாகதாளி ii. தேயிலை iii. பலா

34. முலையூட்டி இனத்தை சார்ந்த கடல்வாழ் உயிரினம்
i. மீன் ii. திமிங்கலம் iii. வௌவால்

35. இலைக்கஞ்சி தயாரிக்க பொருத்தமான தாவர இலைகள்
i. சாத்தாவாரி, முடக்கொத்தான் ii. ஆமணக்கு, எருக்கலை
iii. மரவள்ளி, சாத்தாவாரி

(10ஆம் பக்கம் பார்க்க)

(09 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

36. பின்வருவனவற்றுள் இலத்திரனியல் ஊடகம் அல்லாதது
i. வானொலி ii. பத்திரிகை iii. தொலைக்காட்சி

37. ஒலிம்பிக் கொடியில் காணக்கிடைக்கும் வட்டங்களின் எண்ணிக்கை
i. 4 ii. 5 iii. 6

38. இலங்கையில் அடிக்கடி ஏற்படக் கூடிய இயற்கை அனர்த்தம் அல்லாதது
i. மின்னல்தாக்கம் ii. மண்சரிவு iii. நிலநடுக்கம்

39. எண்ணெய் பெறப்படும் தாவரங்கள்
i. நெல், பயறு ii. கற்றாளை, வேம்பு iii. வேம்பு, ஆமணக்கு

40. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அறிவிக்க வேண்டிய அவசர தொலைபேசி இலக்கம்
i. 1929 ii. 1939 iii. 1969

41. எதிரிகளிடமிருந்து தப்புவதற்கு உடலைப் பந்துபோல் சுருட்டிக் கொள்ளும் பிராணி
i. ஆமை ii. ஆமடில்லா iii. நத்தை

42. கடலுணவுகளிலிருந்து உடலுக்கு கிடைக்கும் சத்துப்பொருள்
i. விற்றமின் A ii. அயடின் iii. இரும்பு

43. புவி சூரியனைச் சுற்றி ஒரு தடவை பயணிக்க எடுக்கும் கால அளவானது?
i. 1 நாள் ii. 1 மாதம் iii. 1 வருடம்

44. இலங்கையில் அமைந்துள்ள உலக மரபுரிமைக்குரியவை
i. சிங்கராஜவனம் ii. தாமரைக்கோபுரம் iii. தலதா மாளிகை

45. எலகரக் கால்வாயை கட்டுவித்த அரசன்
i. தாதுசேனன் ii. பண்டுகாபயன் iii. வசப மன்னன்

46. பயிருக்கு சாதகமான பிரணியாக அமையாதது
i. மண்புழு ii. நத்தை iii. தேனீ

47. சேனைப்பயிர்ச்செய்கை செய்யும் போது முதன்முதலாக செய்ய வேண்டிய வேலையானது.
i. பிராணிகளை அப்புறப்படுத்தல் ii. நிலத்தை எரியூட்டல்
iii. விதைத்தல்

48. தற்காலப் போக்குவரத்தின் முக்கிய அனுகூலமானது
i. செலவு குறைவு ii. விரைவாக பயணம் செய்யலாம்
iii. பாதுகாப்பின்மை

49. 

இக்குறியீடு உணர்த்துவது,
i. வாகனம் நிறுத்துமிடம்
ii. வாகனம் செல்லுமிடம்
iii. வாகனம் நிறுத்தத் தடை

50. யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்
i. தெஹிவலை ii. பின்னவலை iii. கண்டி

51. தகரம் ஒன்றினை வெட்ட பயன்படும் உபகரணமானது
i. வாள் ii. குறடு iii. கத்தி

52. மிக விரைவில் உக்கக்கூடியது
i. பிளாஸ்டிக் ii. இரும்பு iii. காய்ந்த இலைகள்

53. தச்சுத் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் உபகரணம்


i.


ii.


iii.

54. காற்றில் பரவ முடியாத வித்து
i. எருக்கலை ii. பருத்தி iii. தேக்கு

55. நாய் தனது வியர்வையை வெளியேற்றும் உறுப்பானது
i. தோல் ii. மூக்கு iii. நாக்கு

56. இலங்கைக்கு மேற்கு திசையில் அமைந்துள்ள நாடு
i. ஆபிரிக்க நாடுகள் ii. இந்தியா iii. சீனா

57. மாலையில் மலரும் பூ
i. செவ்வந்தி ii. அந்திமந்தாரை iii. கடுபுல்

58. நீரின் எவ்வியல்பு காரணமாக நிறச்சாயங்கள் தயாரிக்கப்படுகின்றன.
i. கரைக்கும் இயல்பு ii. மிதக்கும் இயல்பு iii. பரவும் இயல்பு

59. விரல் போன்று பிளவுபட்டு காணப்படும் இலைகளைக் கொண்ட தாவரமானது
i. ஆமணக்கு ii. பலா iii. தென்னை

**கடந்த வார (16.09.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்**

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 05 | 1 | 09 | 1 | 13 | 1 | 17 | 2 | 21 | 2 | 25 | 2 | 29 | 1 | 33 | 3 | 37 | 3 |
| 02 | 2 | 06 | 2 | 10 | 3 | 14 | 2 | 18 | 1 | 22 | 1 | 26 | 1 | 30 | 1 | 34 | 3 | 38 | 2 |
| 03 | 1 | 07 | 3 | 11 | 2 | 15 | 1 | 19 | 1 | 23 | 3 | 27 | 3 | 31 | 3 | 35 | 1 | 39 | 1 |
| 04 | 3 | 08 | 2 | 12 | 3 | 16 | 3 | 20 | 2 | 24 | 1 | 28 | 2 | 32 | 2 | 36 | 2 | 40 | 3 |

# இலவச கல்வியின் தந்தை கலாநிதி கன்னங்கர மறைந்து இன்றுடன் 53 ஆண்டுகள் நிறைவு

முதலாமாண்டு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலங்கை வாழ் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி வரத்தை பெற்றுக் கொடுத்த இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர் கலாநிதி சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர இவ்வுலகை விட்டுப் பிரிந்து இன்றுடன் 53 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

தென்னிலங்கையின் பலப்பிட்டிய ரன்தொம்பே கிராமத்தில் 1884 ஆம் ஆண்டு ஒக்டோபர் 13 ஆம் திகதி சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கர பிறந்தார். அவர் ஆரம்பக் கல்வியை காலியில் உள்ள ரன்தொம்பே வெஸ்லி கல்லூரியில் கற்கும் வேளையில் கிடைத்த புலமைப் பரிசில் மூலம் காலி ரிச்மன்ட் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

அங்கு கணிதப் பிரிவில் இலங்கையிலேயே முதலாவது மாணவனாக சித்தியடைந்தார். பாடசாலைக் கல்வியின் பின்னர் ரிச்மன்ட் கல்லூரியின் ஆசிரியராக கடமை புரிந்தார்.

பின்னர் சட்டம் பயின்று சட்டத்தரணியாக காலி நீதிமன்றத்தில் பணி புரிந்தார்.

1917 ஆம் ஆண்டு 'காலி தேசிய சங்கம்' என்னும் அரசியல் அமைப்பை தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவின் பாட்டனரான பத்தேகமையில் வசித்த சீ.எல்.விக்கிரமசிங்க உள்ளிட்ட காலி பிரதேசத்தின் மக்கள் தலைவர்களுடன் ஆரம்பித்து கன்னங்கர அச்சங்கத்தின் செயலாளரானார்.

பின்னர் இலங்கை தேசிய சங்கத்தில்



இணைந்த கன்னங்கர ஒரு சந்தர்ப்பத்தில் அதன் தலைவராகவும் தெரிவானார்.

1923 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சபையின் தென்மாகாண உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அவர், பின்னர் காலியின் உறுப்பினராக அரசியலமைப்பு சபையையும் பிரதிநிதித்துவம் செய்தார். 1931 ஆம் ஆண்டு சட்டவாக்க சபையின் காலி உறுப்பினராக தெரிவானார். 1936 ஆம் ஆண்டு மத்துகம தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

சட்டவாக்கசபை காலத்தில் இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சரானார். அவர் இலவச கல்வி சட்டத்தை தயாரித்து அரச சபையில் முன்வைத்து அதற்கு அங்கீகாரம் பெற்றார். அதன் மூலம் இலங்கையில் உள்ள மாணவர்கள் அனைவருக்கும் இலவசக் கல்வியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தார்.

அதனால்' இலவசக் கல்வியின் தந்தை' என இன்றும் நாட்டு மக்கள் அனைவரும் அன்புடன் கொண்டாடுகிறார்கள்.

1946 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அமைப்பதற்கு முன்னின்று உழைத்த தலைவர்களிடையே அமரர் கன்னங்கரவும் ஒருவராவார். 1952 ஆம் ஆண்டு கன்னங்கர ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

அமைச்சராக இருந்த வேளையில் ஒருபோதும் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ளாத அவர், நேர்மையான அரசியல்வாதியாக நாட்டு மக்கள் அனைவரினதும் கௌரவத்துக்கு உரியவராகத் திகழ்ந்தார்.

20 வருட காலம் அமைச்சராக பதவி வகித்த அவர் தனது வாழ்க்கையின் இறுதி காலத்தை நடுத்தர வர்க்க குடிமகனாகவே வாழ்ந்தார். அதனால் அவருக்கு 1965ஆம் ஆண்டு மாதத்திற்கு 500 ரூபா பணத்தை வழங்க அரசு தீர்மானித்தது.

83 வருட காலம் இவ்வுலகில் வாழ்ந்த கலாநிதி சி. டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி அதாவது இற்றைக்கு 53 ஆண்டுகளுக்கு முன்னர் மண்ணுலகை விட்டுப் பிரிந்தார். இந்நாட்டிலுள்ள நன்றியுள்ள மக்கள் இன்றைய தினம் கௌரவத்துடன் அவர் நாமத்தை நினைவு கூருவார்கள்.

(தமிழில்: **வீ.ஆர்.வயலட்**)

# மாத்தளை சோமுவின் 100 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு விரைவில் வெளியீடு

மனித நேயத்தையும், மனித உரிமையையும், சமூகத்தில் அடக்கப்பட்ட மக்களின் உள்ளக் குமுறல்களையும், புலம்பெயர்ந்த தமிழர்களின் முகவரி தமிழ் என்பதையும் தனது படைப்புகளில் வெளிப்படுத்தி வருபவர் இலங்கையில் மாத்தளையில் பிறந்த மாத்தளை சோமு.

புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியா சிட்னி நகரில் வாழும் இவர் வீரகேசரி, தினபதி, தினகரன், சிந்தாமணி, சிரித்திரன், ஈழநாடு, மாணிக்கம், கொழுந்து ஆகிய இதழ்களிலும், ஆனந்தவிகடன், கல்கி, குமுதம், புதிய பார்வை, தாமரை, காமதேனு, கணையாழி, சுபமங்களா, குங்குமம், இந்தியா டுடே தமிழ், தீபம், தினமணி கதிர், தீராநதி ஆகிய இதழ்களிலும் மக்கள் ஓசை, மலேசிய நண்பன், தமிழ் மலர் ஆகிய மலேசிய இதழ்களிலும், புதினம், ஈழகேசரி ஆகிய பிரிட்டன் இதழ்களிலும் எழுதியுள்ளார்.

பிரபல எழுத்தாளர் அமரர் ஜெயகாந்தன் 'நமக்கென்றொரு பூமி' என்ற இவரின் சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில், 'எனக்குப் பிடித்ததை பிடித்தது என்பேன்; பிடிக்காததை பிடிக்காதது என்பேன். இதுவே ஒரு படைப்பாளி என்கிற முறையில் எனது நிலையும் ஆகும். மாத்தளை சோமுவின் கதைகள் எனக்குப் பிடித்திருக்கின்றன. வாழ்க்கையில் எழுதுபவனுக்கு இருக்கும் பிடிப்பும் கடமையுணர்வுடன் கூடிய அவனது கண்ணோட்டமும் இந்தக் கதைகளை ஈழத்து முற்போக்கு இலக்கியப் படைப்புகளின் வரிசையில் நிச்சயம் ஏற்றி



வைக்கும்' என்றார். உலகத்தமிழ்ச் சங்கம் வெளியிட்ட பன்முக நோக்கில் அயலகத் தமிழ்ப் படைப்புகள் என்ற தொகுப்பில் மு.கிறிஸ்டோபர், 'புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களில் இலங்கை மலையகத்திலிருந்து அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த எழுத்தாளர் மாத்தளை சோமுவின் புனைகதைகள் மலையகத் தமிழர் மற்றும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் பிரச்னைகளைப் பேசுகின்றன. சமூக யதார்த்தத்தை பதிவு செய்யும் எழுத்தாளராக விளங்குகிறார். தமிழின் யதார்த்த எழுத்தாளர்களில் இவருக்குத் தனி இடமுண்டு என்கிறார்.

இவர் ஆறு நாவல்களையும், ஒரு குறுநாவல் தொகுதியையும் நான்கு பயணக்கதை தொகுப்பையும், ஐந்து தமிழ் இலக்கிய மற்றும் ஆய்வு கட்டுரைத் தொகுதியையும், இரண்டு குட்டிக் கதைத் தொகுப்பையும் இரண்டு மொழிபெயர்ப்பு நூலையும் வெளியிட்டுள்ளார். அந்த உலகத்தில் இந்த மனிதர்கள் என்ற இவரின் நாவலுக்கு இலங்கை (1991) சாகித்திய விருதையும் எல்லை தாண்டா அகதிகள் மூலஸ் (1991) தானம் (1998) ஆகிய நூல்களுக்கு இலங்கை சுதந்திர இலக்கிய அமைப்பின் சிறந்த நாவல் விருதுகள் வழங்கப்பட்டன. அவர்களின் தேசம் என்ற சிறுகதைத் தொகுதிக்கு தமிழ் நாடு லில்லி தேவசிகாமணி விருது (1994) கொடுக்கப்பட்டது. பாலி முதல் மியான்மார் வரை என்ற பயண நூலுக்கு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை விருதும் 'கண்டிச்சீமை' நாவலுக்கு (தமிழக அரசின்) உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நாவல் விருதும் கிடைத்தது. வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் நூலுக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் (2005) சிறந்த நூலுக்கான விருதும், தமிழக எழுத்தாளர் சங்க விருதும் கொடுக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் புலம்பெயர்ந்த தமிழ் இலக்கியத்திலும் தமிழ் எழுத்தாளர்களிலும் முக்கிய இடத்தை வகிக்கும் மாத்தளை சோமுவின் 100 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு விரைவில் வெளிவர விருக்கிறது.

இத்தொகுப்பு தமிழ் சிறுகதை உலகில் புதிய தாக்கத்தைக் கொடுக்கும் என நம்பலாம்.'



மாத்தளை செல்வா ...

# கிழக்கின் இலக்கியவாதி கலாபூஷணம் இரா.கிருஷ்ணபிள்ளை காலமானார்



இலக்கிய உலகில் 'இராகி' எனும் புனைபெயரால் அழைக்கப்படும் கிழக்கு மாகாணத்தின் மூத்த இலக்கிய ஆளுமை கலாபூஷணம் வித்தகர் இரா.கிருஷ்ணபிள்ளை கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை காரைதீவில் காலமானார். 84வயதான பிரபல எழுத்தாளர் இராகியின் பூதவுடல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 10 மணியளவில் காரைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. காரைதீவைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் இரா.கிருற்ணபிள்ளை சிறந்த ஆசிரியராக, அதிபராக சேவையாற்றி ஓய்வு பெற்றவராவார்.

இலக்கிய உலகில் கவிதை,சிறுகதை நாவல், நாடகம், கட்டுரை,வில்லுப்பாட்டு என இலக்கிய துறையில் 60 ஆண்டு கால ஈடுபாடு உடையவர். 12 இற்கும் மேற்பட்ட நூல்களை அச்சிட்டு வெளியிட்டவர்.

1939. 09. 15ஆம் தேதி பாண்டிருப்பில் பிறந்த இராமக்குட்டி கிருஷ்ணபிள்ளை காரைதீவில் திருமணம் செய்தார். 1979இல் 'வில்லிசையில் விபுலானந்தர்' என்ற முதல் வில்லுப்பாட்டை தயாரித்தார்.

பாண்டியூர் இராகி. இராகி என புனைபெயரில் எழுதி வந்தார். நாட்டின் பல பகுதிகளில் ஆசிரியப் பணியாற்றி இறுதியில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் பிரதி அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். கல்முனை கல்வி மாவட்ட ஆசிரியர் தின போட்டியில் முதலிடம் பெற்ற பல நாடகங்களை எழுதி இருக்கின்றார். ஆன்மிக இலக்கிய சிறந்த பேச்சாளர். அம்பாறை மாவட்டத்தில் 2008 களில் 'திகாமடுல்ல அபிமானி', தேசிய மட்டத்தில் 'கலாபூஷணம்'போன்ற விருதுகளை பெற்றவர். கிழக்கின் உன்னத வித்தகர் விருதையும் பெற்றுள்ளார். இவர் ஒரு சமூக சேவையாளருமாவார்.

காரைதீவு கிராமத்தில் கிராம அபிவிருத்தி சங்க தலைவராக, சிக்கனக்கடன் கூட்டுறவு சங்க பொருளாளராக, சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றத்தின் முக்கிய உறுப்பினராக, காரைதீவு பிரதேச செயலக கலாசார பேரவை ஆலோசகராக, இந்து சமய விருத்தி சங்க ஆலோசகராக, கம்பன் கலைக் கழக ஸ்தாபகராக பணியாற்றி வந்திருந்தார். அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டு பேரவையின் ஆலோசகராகவும் செயற்பட்டார்.

(காரைதீவு குறூப் நிருபர்)

# சிலாபத்தில் தனது கதவுகளைத் திறந்துள்ள மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட்

இலங்கையின் முதன்மையான நிதிச் சேவை வழங்குனர்களில் ஒன்றான மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸ், நாடளாவிய ரீதியில் விரிவடைந்துவரும் தனது கிளை வலையமைப்பில் மற்றுமொரு புதிய கிளையை அண்மையில் சிலாபத்தில் திறந்து வைத்துள்ளது. இலக்கம் 22, ஷேர்லி கொரியா மாவத்தை, சிலாபம் என்ற முகவரியில் அமைந்துள்ள இப்புதிய கிளை, வாடிக்கையாளர்களுக்கு நிறுவனத்தின் இலட்சியங்களைப் பிரதிபலிக்கும் வகையில் நவீன மற்றும் நன்கு வடிவமைக்கப்பட்ட இடவசதியை வழங்குகிறது.

இப்பிரதேசத்தில் உள்ள வாடிக்கையாளர்கள் இப்போது மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸின் விரிவான நிதித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் வரிசையை சௌகரியமாகவும், மிகவும் வசதியாகவும் பெற்றுக் கொள்ள முடியும். நிலையான வைப்புக்கள், தங்கக் கடன்கள் மற்றும் குத்தகை வசதிகள் ஆகியவையும் இதில் அடங்கும்.



**மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட்டின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளுடன் புதிதாக திறக்கப்பட்ட சிலாபம் கிளையின் ஊழியர்கள் காணப்படுகின்றனர்.**

மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸின் சிரேஷ்ட முகாமைத்துவ அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிரேஷ்ட அதிகாரிகள், மதிப்புமிக்க வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் நடைபெற்ற விசேட திறப்பு விழா நிகழ்வின் மத்தியில் புதிய கிளை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.






வனஜீவராசிகள் திணைக்களத்தினால்

# கையகப்படுத்தப்பட்ட காணிகளை மீள் கையளிப்பதற்கு இணக்கம்

அடர்ந்த காடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களினால் அடையாளப்படுத்தப்பட்ட காணிகளில் விவசாயம் மற்றும் நீர்வேளாண்மை உற்பத்திகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவார காலத்தில் அவை தொடர்பான நடவடிக்கைகளை பூர்த்தி செய்யுமாறும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் தலைமையில் நேற்று (22.09.2022) நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்திலேயே இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த திணைக்களங்களினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகள் மற்றும் யுத்தத்திற்கு முன்னர் மக்கள் பயன்படுத்திய காணிகள் போன்றவை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு உரியவர்களிடம் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் வனப்பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களினால் பாதுகாக்கப்பட வேண்டிய இடங்களாக அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களுள், விவசாயம் மற்றும் நீர்வேளாண்மை எனப்படும் நீரியல் உயிரின வளர்ப்பு உற்பத்திகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான இடங்களை விடுவித்து, உற்பத்திகளை மேற்கொள்வதற்கு பிரதேச மக்களிடம் கையளிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோன்று, மன்னார் சுவாமித் தோட்டம் கிராமத்தில் கடந்த பல நூற்றாண்டுகளாக தேவாலயத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த தேசிய பூங்கா அமைக்கும் திட்டத்திற்கு அமைய, அண்மையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை மீள் அளிப்பதற்கும் திணைக்களம் சம்மதித்துள்ளது.



அண்மையில் மன்னாருக்கான விஜயத்தினை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த சம்மந்தப்பட்ட தேவாலயத் தரப்பினர், மக்கள் நலத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்ட காணிகளை மீட்டுத் தருமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில், சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் இடம்பெற்ற நேற்றைய சந்திப்பின்போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், சுவாமித் தோட்டக் காணிகளை மீள் அளிப்பதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில், துறைசார் அமைச்சுக்களின் அதிகாரிகளும், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டு தங்களின் கருத்துக்களை தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானும் கலந்து கொண்டிருந்தார்.

குருந்தூர் மலை விவகாரம்

# ரவிகரன்,மயூரன் சரீர பிணையில் விடுவிப்பு

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

குருந்தூர் மலை அபகரிப்பு, நீதிமன்ற உத்தரவை மீறி விகாரை அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் குமுழமுனை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவரும் காணி அபகரிப்புக்கு எதிரான போராட்ட குழுவின் தலைவருமான இரத்தினராசா மயூரன் ஆகியோர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றினால் நேற்று (22) பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி .சரவணராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது முல்லைத்தீவு பொலிஸார் இவர்கள் இருவருக்கு எதிராகவும் தண்டனை சட்டக்கோவையின் பிரிவு 140, பிரிவு 146 பிரிவு 147 மற்றும் பிரிவு 344 கீழ் பி (B)அறிக்கையொன்றினை நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர். பொலிஸார் இந்த வழக்கில் இன்னும் பலரை கைது செய்யவேண்டியுள்ளதாகவும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதன் காரணத்தினாலேயே இவர்களை கைது செய்ததாகவும் மன்றில் தெரிவித்தனர்.



இந்நிலையில் சட்டத்தரணிகளின் வாதங்களை அடுத்து இரண்டுபேரையும் தலா இரண்டு இலட்சம் ரூபா ஆட் பிணையில் செல்ல அனுமதித்ததோடு அடுத்த வழக்கானது 2023 பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதிக்கு தவணையிடப்படுள்ளது.

# ரவிகரன் மற்றும் மயூரன் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லையில் ஆர்ப்பாட்டப்பேரணி



குருந்தூர்மலை ஆக்கிரமிப்பிற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் இரத்தினராசா மயூரன் ஆகியோர் நேற்று முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவு நகரப்பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பலநோக்குக்கூட்டுறவு சங்க விற்பனை நிலையத்திற்கு முன்பாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணியானது, முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் வரை சென்றது. இதில் ஈடுபட்டவர்கள் 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'ரவிகரனையும் மயூரனையும் விடுதலைசெய்', 'வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்' உள்ளிட்ட பல கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்கள், பலநோக்கு கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலக சமாதான தினம் அனுஷ்டிப்பு




யாழ். விசேட நிருபர்

உலக சமாதான தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் அமைதிப் பேரணி யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்தில் ஆரம்பித்து நெடுந்தூர பஸ் நிலையத்தில் நிறைவடைந்தது. இதன்போது பெண்கள் அமைப்பினர், பெண் பிரதிநிதிகள் மகளிர் அபிவிருத்தி குழுக்களின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாட்டில் சாந்தி சமாதானத்தை நிலைநிறுத்துவதோடு நாடு அமைதியாக செயற்பட அனைவரும் நல்லிணக்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் இன ஒற்றுமையும் வலியுறுத்திய பதாதைகளைத் தாங்கியவாறு பெண்கள் யாழ்ப்பாண வீதியின் ஊடாக அமைதிப்பேரணியாக வலம் வந்தனர்.

# குருந்தூர்மலை விவகாரம்; யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

பருத்தித்துறை விசேட, கோப்பாய் குறூப், யாழ் நிருபர்கள்

குருந்தூர்மலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டமைக்கு நீதிகோரி யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றைய தினம் பேரணி ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.



யாழ்.பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று நண்பகல் 12 மணியளவில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக மாணவர்கள் அங்கிருந்து கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக இராமநாதன் வீதி ஊடாக பரமேஸ்வராச் சந்தியை அடைந்து அங்கிருந்து சிறிது நேரம் வீதியை முடக்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்பின்னர் பேரணியாக பல்கலைக்கழகத்தை வந்தடைந்தனர்.

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632 ஏக்கர் பூர்வீக காணிகளை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும், நீதிமன்ற கட்டளையைப் புறந்தள்ளி மதவழிபாட்டுத் தளம் அமைத்தல் என்பவற்றைக் கண்டித்து நேற்றுமுன்தினம்(21) குருந்தூர்மலையில் அப்பகுதி மக்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள், சிவில்சமூகப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்புடன் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் இ.மயூரன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனை கண்டித்தே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 'ரவிகரன் மற்றும் மயூரனை விடுதலை செய்', 'எமது காணி எமக்கு வேண்டும்', 'எமது மலை எமக்கு வேண்டும்', 'குருந்தூர் மலையை ஆக்கிரமிக்காதே' போன்ற கோஷங்கள் பல்கலைக்கழக மாணவர்களால் எழுப்பப்பட்டன. ரவிகரன் மற்றும் மயூரன் விடுதலை செய்யப்படாவிட்டால் வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுமென யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் எச்சரிக்கை விடுத்தனர்.

# குருந்தூர் மலையில் நீதிமன்றக்கட்டளையை மீறி கட்டுமானப்பணிகள் தொடர்கின்றன

## தடுப்புக்காவலில் இருந்தபடி ரவிகரன், மயூரன் முறைப்பாடு

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி அங்கு தொடர்ந்து மதவழிபாட்டுத்தளத்துக்கான கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படுவதாக முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் இரத்தினராசா மயூரன் ஆகியோர் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறிப்பாக முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா நேற்று குருந்தூர் மலைக்கு விஜயம் செய்து, அங்கு கட்டுமானப்பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாது எனக் கட்டளை பிறப்பித்திருந்தார். இந்நிலையில் 21.09.2022 நேற்றுமுன்தினம் தாம் அங்கு சென்றபோது அங்கு கட்டுமானப்பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக ரவிகரன் மற்றும் மயூரன் ஆகியோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேலும் அங்கு கட்டுமானத்திற்குத் தயாரான நிலையில் சீமெந்து கலவை செய்யப்பட்டிருந்தமை, கட்டுமானப் பணிகள் இடம்பெற்றமைக்கான அடையாளங்கள், கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானப்பணிக்கான கருவிகள் அங்கு காணப்பட்டமை தொடர்பிலும் முறைப்பாட்டில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்றக் கட்டளையை அவமதிப்பது ஜனநாயகத்தை கேள்விக்குட்படுத்துகிறது

## தடுப்புக்காவலில் இருந்தபடி ரவிகரன், மயூரன் முறைப்பாடு -அங்கஜன் எம்.பி

சாவகச்சேரி விஷேட நிருபர்

முல்லைத்தீவு, குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்ற கட்டளையை மீறிச் செயற்படுவது நாட்டின் ஜனநாயகத் தன்மையை கேள்விக்குட்படுத்தியிருப்பதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கட்டளைகளை புறந்தள்ளி குருந்தூர்மலைப் பகுதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நில ஆக்கிரமிப்பு செயற்பாட்டை கண்டித்து வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் அவர் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்ததாவது;

ஓர் திணைக்களத்தின் செயற்பாடு இரண்டு மதங்களுக்கு இடையே குரோதங்களை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது.ஆனால் தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடு இனங்களுக்கிடையே,மதங்களுக்கிடையே குரோதங்களை ஏற்படுத்துவதாக காணப்படுகிறது.

மதித்து நடக்க வேண்டிய நீதிமன்றக் கட்டளைகளை புறந்தள்ளுவதென்பது நாட்டின் ஜனநாயகத்தை மீறும் செயற்பாடு. நீதிமன்றக் கட்டளைகளை காப்பாற்றுபவர்களாக பொலிஸார் இருக்க வேண்டுமே தவிர தவறுகளை கண்டு கிளர்ந்தெழும் மக்களை அச்சுறுத்துவதாக பொலிஸாரின் செயற்பாடு அமையக்கூடாது.



குருந்தூர் மலை விவகாரத்தில் நீதிமன்றக் கட்டளை பேணப்பட வேண்டும். பூர்வீக மக்களின் காணிகள், அவர்களின் விவசாய நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தொல்லியல் திணைக்களம் இனங்களுக்கிடையே குரோதங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.இதுவே ஓர் ஜனநாயக நாட்டிற்கும்அதன் ஆட்சியாளர்களுக்கும் அழகு என மேலும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

## கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும்

சாவகச்சேரி விஷேட நிருபர்

கைதடி கமநல சேவை பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு கமக்கார அமைப்பின் 2022/23 ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தனங்கிளப்பு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கமக்கார அமைப்பின் தலைவர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கைதடி கமநலசேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தர் பு.அருள்நேசனும், விருந்தினர்களாக தனங்கிளப்பு கிராமத்தின் கிராம அலுவலர், பொருளாதார உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். இக்கூட்டத்தில் கமக்கார அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கமக்கார அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# போதைப்பொருள் பாவனையால் பாடசாலை மாணவர்கள் வழிதவறி செல்லும் அவலம்

சாவகச்சேரி விஷேட நிருபர்

எமது சமூகத்தில் இன்று பரவலாக இடம்பெறுகின்ற போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்காவிட்டால் காலப்போக்கில் பாரிய ஆபத்துகளை சந்திக்க நேரிடும் என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் சு.நிதிகேசன் எச்சரித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை சுட்டிக்காட்டியிருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சில பகுதிகளில் போதைப்பொருள் வியாபாரம் பரவலாக இடம்பெற்று வருகின்றது. டெங்குநோயினை ஒழிப்பது மாத்திரம் சுகாதாரம் அல்ல.போதைப்பொருள் பாவனையும் சுகாதாரம் சார்ந்த பிரச்சினையே. இது சமூகத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். இதனை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தென்மராட்சியில் போதைப்பொருள் பாவனையால் பாடசாலை மாணவர்கள் வழி தவறிப் போகும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. களவு உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. வருங்கால சந்ததி இவ்வாறு சீர்கெட்டுப் போவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை தடுக்க வேண்டிய கூட்டுப்பொறுப்பு சகலருக்கும் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

யாழ்.விசேட நிருபர்



யாழ்ப்பாணம் சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு பணிகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் திணைக்களமும் யாழ்ப்பாண மரபுரிமை மையமும் இணைந்து புனர்நிர்மாண பணிகளை ஆரம்பித்துள்ளன. இதற்காக 2.3 மில்லியன் ரூபாய் செலவு மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான நிதி பங்களிப்பினை யாழ்ப்பாண மரபுரிமை மையம் வழங்கவுள்ளது.

தோரண வாயிலின் பாதுகாப்பு, புனர்நிர்மாணம் மற்றும் நில வடிவமைப்பு ஆகிய செயற்திட்டமே முன்னெடுக்கப்படவுள்ளது.

சங்கிலியன் தோரண வாயில் அல்லது சங்கிலித்தோப்பு வளைவு என அழைக்கப்படுவது யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னனான சங்கிலியனின் மாளிகை அமைந்திருந்த இடம் எனக் கருதப்படுகின்றது.

சங்கிலித்தோப்பு வளைவு யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில், நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சிறிது தூரத்தில் இது அமைந்துள்ளது.

# கிழக்கின் குரல்



## குடும்பஸ்தர் குத்திக் கொலை

(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள கிளிவெட்டி பாரதிபுரம் கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். உடற் கூற்றாய்வுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் நேற்று (22) உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை (20)இரவு இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில், கிளிவெட்டி பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயியான மூன்று பிள்ளைகளின் தந்தை சோமசுந்தரம் சிறிகந்தராசா (வயது 50) என்பவரே குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அன்றைய தினம் மின்சாரம் தடைப்பட்டிருந்த சமயத்தில் இந்தக்கொலைச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக கிராமத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறிகந்தராசாவின் வீட்டுக்கு வந்து அவரை வெளியே வருமாறு அழைத்த சந்தேக நபர், கத்தியால் குத்தி விட்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த அருமைத்துரை கிருபாகரன் (வயது 47) எனும் சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## தம்பட்டை கடற்கரையில் ஆணின் சடலம் கரையொதுங்கல்

(திருக்கோவில் தினகரன் நிருபர்)

அம்பாறை திருக்கோவில் பொலிஸ்ப் பிரிவுக்குட்பட்ட தம்பட்டை 02 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கடற்கரையில், ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கி உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்பட்டை 02 சித்திவிநாயகர் ஆலயத்திற்கு முன்பாக உள்ள கடற்கரையோரம் இச்சடலம் கரையொதுங்கியது. இதைக்கண்ணுற்ற பொதுமக்கள் அப்பகுதி கிராம சேவையாளர் மற்றும் திருக்கோவில் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிராம சேவையாளர், பொலிஸார் மற்றும் புனனாய்வு உத்தியோகத்தர்கள் சடலத்தை பார்வையிட்டனர்.

தம்பிலுவிலைச் சேர்ந்த பி.ஜெயகாந்தன், வவுனியா விவசாயக் கல்லூரி விரிவுரையாளர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இரத்ததான முகாம்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

பல வருடங்களாக இரத்ததான முகாம்களை சிறப்பாக நடாத்தி வரும், அக்கரைப்பற்று பிரதேசத்தில் இயங்கும் இஸ்லாமிய அழைப்பு வழிகாட்டல் மையம் நாளை (24) இரத்ததான நிகழ்வை நடாத்தவுள்ளது.

அக்கரைப்பற்று அஹ்லுஸ் ஸூன்னா ஜூம்ஆ பள்ளிவாசலில் காலை 9.00 மணி முதல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இந்த இரத்தான முகாமில், பெண்களுக்கென பிரத்தியேக இடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## தேசிய உற்பத்தியின் வளர்ச்சிக்கு சிறுதோட்டச் செய்கைகள் பலம்சேர்க்கும்

(கிண்ணியா தினகரன் நிருபர்)



கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட 700 வறிய குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலகத்தில் புதன்கிழமை (21) இப்பொதிகள் விநியோகிக்கப்பட்டன.ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கப்பட்டன.முஸ்லிம் "ஹேண்ட்ஸ்' நிறுவனம் இதற்கான அனுசரணையை வழங்கியது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான பி. எச். என். ஜயவிக்ரம, கிண்ணியா பிரதேச செயலாளர் முஹமட் கனி, கிண்ணியா நகரசபை தவிசாளர் எம்.எம்.நிவாஸ், கிண்ணியா உதவிப் பிரதேச செயலாளர் பஹீமா றிஷ்வி உள்ளிட்ட அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பயனாளிகளும் இதில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான பி.எச்.என். ஜயவிக்ரம, சிறிய இடமாயினும் தமது வசிப்பிடங்களில் காய்,கறிகளை பயிரிடுவது அவசியம்.இச்சிறிய உற்பத்திகளூடாகவே தேசிய உற்பத்தி அதிகரிக்கிறது. இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் இவ்வாறான திட்டங்களில் ஈடுபட சகலரும் முன்வரல் அவசியம். வெளிநாடுகளின் இறக்குமதியில் தங்கியிருக்கும் நிலைமைகளை மாற்றுவதே இன்றைய நெருக்கடிக்கு தீர்வாக அமையும்.

இதனால்தான், உற்பத்திச் செயன்முறையை வலுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகவும் இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

## கிண்ணையடி அருள்மிகு ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்தில் பாற்குட பவனி

(பாசிக்குடா நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான கிண்ணையடி வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்தில் பாற்குடப்பவனி இடம்பெற்றது.

காலை சுபமூகூர்த்த நேரத்தில் பாற்குடபவனி இடம்பெற்று சங்காபிஷேகம் நடைபெற்றது.

கடந்த (06) இடம்பெற்ற எண்ணெய்க்காப்பு சார்த்தும் நிகழ்வைத் தொடர்ந்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஸ்ரீதேவி, பூதேவி, சமேதமாக விஷ்ணுவிற்கும் பிள்ளையார், கருடன், பலிபீடம், நவக்கிரகம், வைரவர், மற்றும் ஆஞ்சநேயர், ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் பால் ஊற்றப்பட்டு கிரியைகள் நடாத்தப்பட்டன. இதற்கென நேர்த்திக்கடன் செலுத்துமுகமாக கறுவாக்கேணி ஸ்ரீ ஆலகண்டி சிவன் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட பால் ஊற்றப்பட்டு கிரியைகள் நடாத்தப்பட்டது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகப் பூஜைகள் இடம்பெற்று, திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

ஆலயத் தலைவர் செ.செல்வராசா, ஆலயகுரு சிவஸ்ரீ க.ஜெயசீலன குருக்கள் உட்பட கும்பாபிஷேக பிரதமகுரு வேதாகம குருமணி கிரியாஜோதி சிவஸ்ரீ சண்முக மயூரவதன குருக்கள் தலைமையிலான குருமார்களால் திருவிழாக்கள் நடாத்தப்படுகின்றன.

## பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா

(கல்குடா தினகரன் நிருபர்)



வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீள் குடியேற்ற கிராமமான கேணிநகர் மதீனா வித்தியாலயத்தில் ஐ.எஸ்.ஆர்.சீ. சிறிலங்கா அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழாவும், இரண்டாவது பரிசளிப்பு விழாவும் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.

பாடசாலையின் அதிபர் ஏ.மீரா முகைதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம்.எம்.எஸ் உமர் மௌலானா, ஐ.எஸ்.ஆர்.சீ. சிறிலங்கா அமைப்பின் திட்ட இணைப்பாளர் ஏ.எல்.ஜூனைட் நளீமி, பிரதிக் கல்விப் பணிப்பாளரும், ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரீ.அஜ்மீர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜே.தாஜூன் நிஸா, உதவிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.யூ.எம்.இஸ்மாயில், எம்.ஏ.ஜாபீர் கரீம், ஆசிரிய ஆலோசகர்களான ஏ.எல்.சலாம், எம்.பீ.எம். சித்தீக் மற்றும் ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவரும் சமுகசேவையாளருமான எம்.ஏ.சீ.எம்.நியாஸ், ஹயா இன்ரநஷனல் கலக்ஷன் நிறுவன பணிப்பாளர் ஏ.எல்.நஜிமுதீன் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஐ.எஸ்.ஆர்.சீ. சிறிலங்கா அமைப்பின் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடத்தில் அதிபர் காரியாலயம், கலாசார மண்டபம், மாணவர்களுக்கான வகுப்பறை தொகுதி ஆகியவை அமைந்துள்ளதுடன், அதற்கான தளபாடங்களும் உள்ளன.

பாடசாலையில் இரண்டாவது பரிசளிப்பு விழாவில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும், பாடங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## பெரும்போக பாவனைக்கு மட்டக்களப்பு விவசாயிகளுக்கென நாலாயிரம் தொன் பசளை

### அமைச்சர் நஸீர் அஹமடிடம் விவசாய அமைச்சர் உறுதி

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் நேற்று (22) சுற்றாடல்துறை அமை ச்சர் நஸீர்அஹமட் பாராளுமன்றத்தில் சந்தித்துப் பேசினர். விவசாய நடவடிக்கைகளில் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை எடுத்து விளக்கிய விவசாயிகள், இவற்றை நிவர்திக்க அவசர முயற்சிகளை செய்யுமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் நஸிர்அஹமட் மேற்கொண்டார். விஷேட வாகனத்தில் இவ்விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். இச்சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனும் கலந்து கொண்டார்.

விவசாயிகளின் பிரச்சினைகளை செவிமடுத்த அமைச்சர் மஹிந்த அமரவீர,மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நாலாயிரம் தொன் பசளையை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தார். எதிர்வரும் ஒக்டோபரில் செய்கை பண்ணப்படவுள்ள பெரும்போகச் செய்கைகளுக்கு இந்தப்பசளைகள் பயன்படுத்தப்படவுள்ளன.

மேலும், உரிய வேளைக்கான நீர்ப்பாசனம்,கால்நடையாளர்களால் உரிமைகோரப்படும் மேய்ச்சல்தரை போன்ற விடயங்களுக்கு இருதரப்பினருடனும் கலந்துரையாடி முடிவெடுப்பதென இங்கு தீர்மானிக்கப்பட்டது.

## முன்பள்ளி டிப்ளோமா பரீட்சைகள் இழுத்தடிக்கப்படுவதாக கவலை

### விரைவில் நடத்துமாறும் கோரிக்கை

(பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்)

முன்பள்ளி டிப்ளோமா ஒருவருட கற்கைநெறி நிறைவடைந்து நான்கு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை பரீட்சைகள் நடத்தப்படவில்லை. இதனால் காலங்கள் வீணாகக் கழிவதாக முன்பள்ளி ஆசிரியைகள் கவலை தெரிவிக்கின்றனர். அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலைகள் கல்விப் பணியகத்தால் முன்பள்ளி டிப்ளோமா ஆரம்பிக்கப்பட்டது.

மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.எல்.எம்.அமீரின் நிதி ஒதுக்கீட்டிலும் வேல்ட் விஷன் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடனும் அம்பாறை மாவட்ட முன்பள்ளி ஆசிரியைகளின் வாண்மையை விருத்தி செய்யும் நோக்கில் இது ஆரம்பிக்கப்பட்டது.

சம்மாந்துறை மத்திய கல்லூரியில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கற்கை நெறிக்கான அனைத்து பாடங்களும் கடந்த 2018 ஆண்டு பூர்த்தியடைந்துள்ளது.

இந்நிலையில் குறித்த டிப்ளோமா கற்கை நெறிக்கான பரீட்சை கடந்த 04 வருடங்களுக்கும் மேலாக நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. இதனால் கற்கை நெறியை நிறைவு செய்து டிப்ளோமா சான்றிதழை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, முன்பள்ளி கற்கை நெறிக்கான பரீட்சையை இனியும் தாமதியாது உடன் நடத்தி டிப்ளோமா சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென முன்பள்ளி ஆசிரியைகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## பாடசாலைத் தோட்டத்தில் அறுவடை விழா

(பெரியநீலாவணை விஷேட நிருபர்)



இஸ்லாமாபாத் முஸ்லிம் மஹாவித்தியாலயத் தோட்டத்தின் அறுவடை விழா,நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்ற. இந்நிகழ்வில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ் சஹு – துல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

இதில், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் பணிப்பாளர் சபீனா ஹசமூன் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

விஷேட அதிதிகளாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எச்.எம். ஜாபிர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஸ்லம் சஜா, உதவிக் கல்விப் பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளருமான என்.எம்.அப்துல் மலிக், கல்முனை முஸ்லிம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.எம். சம்சம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் செயற்றிட்ட உத்தியோகத்தர்களான நதீரா சாலி, லைலா உடையார், குமுது பெரேரா, மசினா இல்யாஸ் உட்பட மும்மதத் தலைவர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கான ஏற்பாட்டினை முஸ்லிம் பெண்கள் ஆராய்சி செயல் முன்னணி மற்றும் டயகோனியா நிறுவனம் என்பன வழங்கியிருந்தன.

பாடசாலைத் தோட்டங்களை நிர்மாணம் செய்தல் எனும், கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கமய, கல்முனை வலயத்திலுள்ள இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் முதன்முதலாக தோட்டம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கோழிக்குஞ்சுகள் அன்பளிப்பு

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)



2021 ஆண்டுக்கான 'அருனலு' வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. இப்பிரதேசத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு சுமார் 2000 கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு (21) அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் சாபீர் தலைமையில் இடம்பெற்றது.

உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹீஜா முஸாபிர், அட்டாளைச்சேனை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் தஹானா அனீஸ், நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம் நளீல், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.எம். ஹமீட், சமுர்த்தி முகாமையாளர்களான எம்.ஏ.ஏ. நஜீப், ஐ.யூ.நபீஸா, எஸ்.எல். அஸீஸ், திட்ட உதவியாளர் ஏ.எஸ். எம் உனைஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் (சந்தைப்படுத்தல்) எஸ். ஸபானா, உட்பட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

## தம்பல காமத்தில் நிலைபேறு அபிவிருத்தி குறித்த பயிற்சிநெறி

(கந்தளாய் தினகரன் நிருபர்)

நிலைபேறு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலான பயிற்சிநெறியொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் புதன்கிழமை (21) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில், வளவாளராக கிழக்கு மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ். எம்.பாயிஸ் கலந்து சிறப்பித்தார்.

இதில், ஐக்கிய நாடுகள் 2030 நிகழ்ச்சி நிரல் திட்டம் மற்றும் 17 குறிக்கோள்களை மையமாக வைத்து இங்கு விளக்கமளிக்கப்பட்டன.

நிலைபேறு அபிவிருத்தி, நிலைபேறு அபிவிருத்தி உருவாக்கம், மிலேனியம் அபிவிருத்தி குறிக்கோள்கள், இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி, மாகாண நிலைபேறான அபிவிருத்திகள் உட்பட பல விடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டன.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில், நிலைபேறான அபிவிருத்தியின் முக்கியத்துவம், நிலையான அபிவிருத்தி எண்ணக்கரு பாதிக்கப்படும்போது ஏற்படும் தாக்கங்கள் தொடர்பிலும் மிக தெளிவாக விளக்கமளிக்கப்பட்டது. இதில், உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், வெளிக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## தனியார் கல்வி நிறுவனங்களால் அறநெறிப் பாடசாலைகளுக்கு பாதிப்பு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புகள் இடம்பெறுவதால் சமய ரீதியிலான கல்வியைக்கற்க அறநெறிப் பாடசாலைளை, அஹதிய்யா பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கிழக்கு நட்புறவு ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பாடசாலைக் கல்வியுடன் சமய கல்வியையும் கற்க வேண்டிய தேவை மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், விடுமுறை நாட்களிலாவது சமய கல்வியைக் கற்க மாணவர்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். எனினும், பாடசாலைக் கல்விக்கே பெற்றோர் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இதனால், சனி மற்றும் ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகளுக்கே, பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அனுப்புகின்றனர்.

சமயக்கல்வி அருகியுள்ள இக்காலத்தில் மாணவர்களிடையே,சமயப்பற்று குறைவடைந்து முதியோர், ஆசிரியர்கள் மற்றும் மதத்தலைவர்களை மரியாதை செலுத்தும் தன்மையும் குறைவடைந்து வருகின்றது.

சமூகத்தில் இடம்பெற்றுவரும் பல்வேறுபட்ட சட்ட விரோத செயற்பாடுகள், போதைவஸ்து பாவனை போன்றவையும் அதிகரித்துள்ளமைக்கு மத ரீதியிலான கல்வியறிவு இல்லாமையே காரணமெனவும் ஒன்றியம் தெரிவித்துள்ளது.





# சிகிரியாவை சுற்றுலா மத்திய நிலையமாக அமைக்க நடவடிக்கை

*அக்குறணை குறூப் நிருபர்*

கண்டி, கலஹா முதல் அல்துமுல்ல ஊடாக நுவரெலியா வரை 300 கிலோ மீற்றர் நடைபாதையொன்றை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கவும், சிகிரியாவில் சுற்றுலா மத்திய நிலையமொன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக காணி, சுற்றுலா துறை அமைச்சின் செயலாளர் சூலாநந்த பெரேரா தெரிவத்தார்.

பேராதனைத் தாவரவியற் பூங்கா அமைக்கப்பட்டு 200 வருட பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற வைபவத்தி லேயே அவர் இதனைத்தெரிவித்தார். இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சுற்றுலாத்துறையினர் நாடி வரும் ஒரு நாடாக இலங்கை விளங்குகின்றது. சிறந்த கடற்கரை, சிறந்த காற்று, சிறந்த சூரிய ஒளி போன்ற விடயங்கள் மட்டுமே சுற்றுலா தொடர்பாக பிரசாரம் செய்யப்படுகின்றன. கலாசாரம், பாரம்பரிய வைத்திய முறைகள், புராதன சின்னங்கள், பாரம்பரிய விவசாய மற்றும் கைத்தொழில் நுட்பமுறைகள் போன்ற பல அம்சங்கள் வெளிநாட்டவர் வியக்கும் அளவில் உள்ளன.



சிகிரியா குன்று உலக மரபுரிமையாக்கப்பட்டாலும் அதன் அநேக விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

அன்று சிகிரியா ஒரு சிறந்த பொழுது போக்கு மத்திய நிலையமாக அமைக்கப்பட்டிருந்தது. இலங்கையில் புரதான வரலாறு பெறுமதிகள் உள்ளன. கண்டி, கலஹா முதல் அல்துமுல்ல ஊடாக நுவரெலியா வரை 300 கிலோ மீற்றர் நடைபாதையொன்றை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். இதில் போர்த்துக்கேயர் காலம் முதல் பயன்படுத்தப்பட்ட அடிப்பாதைகள் உள்ளன. இப்படி இலங்கையில் மறைந்துள்ளவற்றை வெளிப்படுத்த வேண்டும். சுற்றுலா துறைக்கு 'எப்' என்ற செயலி ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளோம். இதில் இலங்கையின் சுற்றுலா தொடர்பான அழகிய இடங்கள் பற்றிய 2000ற்கும் மேற்பட்ட புகைப்படங்களை பதிவிட உள்ளோம். அதேபோல் 200 ற்கும் மேற்பட்ட வீடியோ காட்சிகளையும் பதிவிடவுள்ளோம். வெளிநாட்டு சுற்றுலா பயணியொருவர் விமானநிலையத்தில் வந்து இறங்கியது முதல் மீண்டும் திரும்பும் வரை அவர்களுக்கு தேவையான அனைத்து விடயங்களையும் தொகுத்து அச்செயலி ஊடாக( எப்) இலகுவாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

## சப்ரகமுவ மாகாண ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்



கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாரை ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார், சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு கல்வியமைச்சில் நேற்று இடம்பெற்றது.

புதிதாக பதவியேற்றுக் கொண்ட அ.அரவிந்தகுமாரை, எஸ். ஆனந்தகுமார் மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியதுடன், அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள கல்வி பிரச்சினைகள் தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார், கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் விரைவில் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமாருக்கு, கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் உறுதியளித்துள்ளார்.

## போதை ஊசிமருந்துகள் விற்பனை: சந்தேக நபர்கள் கைது

*(எம்.ஏ.அமீனுல்லா)*

இளைஞர் யுவதிகளுக்கு போதை ஊசிமருந்துகளை வழங்கி நாளொன்றுக்கு இலட்சக்கணக்கான ரூபாவை சம்பாதித்த குற்றச்சாட்டில் இருவர் கடுகன்னாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ள இருவரையும் கண்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, தப்பிச்சென்றதாக கூறப்படும் மேலும் இரு சந்தேகநபர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேக நபர்களை கைது செய்த போது,வீடு மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலிருந்து போதை ஊசி பாவனைக்கு பயன்படுத்திய சுமார் 300 சிரிஞ்சகள் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் இந்த இடத்திற்கு ஊசி மூலம் போதைப்பொருளை உடலினுள் செலுத்திக்கொண்டதாக தெரியவந்துள்ளதுடன் அவர்களிடமிருந்து 3000 முதல் 4000 ரூபா வரை அறவிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிரதான சந்தேகநபர் 28 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த போது கைதுசெய்யப்பட்டிருந்ததுடன் அதுதொடர்பான வழக்கு விசாரணை கண்டி மேல்நீதிமன்றத்தில் இருப்பதாகவும் தெரியவருகின்றன. கடுகன்னாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.யு.பி.ரத்நாயக்க தலைமையில் இச்சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது.

## நுவரெலியா கல்வி வலய புதிய பணிப்பாளராக டி.எம்.பி.சி.லசந்த அபேரத்ன நியமனம்



*தலவாக்கலை குறூப் நிருபர்*

நுவரெலியா கல்வி வலயத்தின் புதிய வலய கல்விப்பணிப்பாளராக டி.எம்.பி.சி.லசந்த அபேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். நுவரெலியா வலய கல்வி காரியாலயத்தின் பதில் வலய கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய நிஹால் அழககோன் கம்பளை வலய கல்வி காரியாலயத்திற்கு வலய கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து அப்பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை உத்தியோகப்பூர்வமாக மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித்.யூ.கமகேவினால் நேற்று முன்தினம் (21) வழங்கப்பட்டது. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான டி.எம்.பி.சி.லசந்த அபேரத்ன ஆசிரியர் சேவையில் இணைந்து நுவரெலியாவிலுள்ள பெரக்கும்புர ஆரம்ப பாடசாலையில் ஆசிரியராக பணிபுரிய ஆரம்பித்தார். அதன் பின்னர் அம்பேவல, ஹிட்டிகல மற்றும் நானுஓயா ஜேம்ஸ் பீரிஸ் பாடசாலைகளில் பிரதி அதிபராகவும் கடமையாற்றினார். 2017 ஆம் ஆண்டு பிரதிக்கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்ற இவர், இறுதியாக கொத்மலை கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மனிதகழிவு ஊடாக இயற்கை எரிவாயு

*பதுளை தினகரன் விசேட நிருபர்*



உடபுஸ்ஸலாவ பிரதேசத்தில் மனிதகழிவு ஊடாக இயற்கை எரிவாயு (பயோகேஸ்) பெற்றுக் கொள்ளும் வகையில் முதற்கட்ட அபிவிருத்தி பணிகள் நேற்று காலை ஆரம்பிக்கப்பட்டன.

உடபுஸ்ஸலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உ.டி. வசந்த திஸாநாயக்க தலைமையில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் வினவிய போது,

வெலிமடை லூனுவத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் போது அங்கு கால்நடை கழிவால் இயற்கை எரிவாயு பெற்றுக் கொள்ளும் திட்டமொன்றை மேற்கொண்டேன். அது சாத்தியமானது. இதனூடாக லூனுவத்தை பொலிஸ் நிலையத்தில் சமையல் அறைக்கு தேவையான இயற்கை எரிவாயு பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் மேலும் இதனூடாக நான்கு வீடுகளுக்கும் இயற்கை எரிவாயு வழங்கப்பட்டன. தற்போது நான் உடபுஸ்ஸலாவை பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று நிலைய பொறுப்பதிகாரியாக வந்துள்ளேன். பொலிஸ் நிலையத்தில் நான்கு கழிவறைகள் உள்ளன. இவை நிரம்பி வெளியேறும் போது பணம் செலுத்தி அகற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் மனித கழிவு ஊடாக இயற்கை எரிவாயு பெற்றுக் கொள்ள திட்டமிட்டு அதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் பெற்று பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் பூர்த்தியாக சுமார் ஏழு இலட்சம் ரூபா தேவைப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## நடமாடும் விபசார விடுதிகள்

*(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)*

இரத்தினபுரி நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் அதிகரித்து வரும் விபசார கலாசாரம் குறித்து பொதுமக்கள் தரப்பில் பெரும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையால் இளம் தலை முறையினர் மற்றும் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுவதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் சம்பிரதாயபூர்வமாக விடுதிகளில் இடம்பெற்று வந்த விபசாரத் தொழில் பொலிஸாரால் தேடப்பட்டு சுற்றிவளைக்கப்படுவதனால் நடமாடும் விபசார விடுதிகள் சூட்சுமமான முறையில் இயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக முச்சக்கரவண்டிகள் அதிகமாக பயன்படுத்தப்படுவதாகவும் இவற்றுக்கு அடிமையானோர் பாதுகாப்பான இடங்களுக்கு முச்சக்கர வண்டிகளில் அழைத்துச் செல்லப்படுவதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு விபசாரத்துக்கு அடிமையானோரிடம் அதிகமான தொகை அறவிடப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.


அடகுவைத்து மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

DFCC வங்கி பி.எல்.சி.யின் சகல கிளைகளிலும் 2021 ஓகஸ்ட் 13 ஆம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் பின்வருமாறு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| உத்தேச திகதியும் நேரமும் | இடம் |
|---|---|
| 2022 ஒக்டோபர் 22 – மு.ப. 10.00 | **வெள்ளவத்தை கிளைக் கட்டிடம்** இல. 02, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை. **நீர்கொழும்பு கிளைக் கட்டிடம்** இல. 454, பிரதான வீதி, நீர்கொழும்பு. |

மேற்குறிப்பிட்ட இடங்களில் ஏதேனுமொன்றில் ஏல விற்பனையை நடத்தவும் ஏல விற்பனைகளை இரத்துச்செய்ய அல்லது ஒத்திவைக்கவும் வங்கிக்கு உரிமை உள்ளது.

சிரேஷ்ட உப தலைவர் / பிரதம செயற்பாட்டு அதிகாரி
DFCC வங்கி பி.எல்.சி.,
இல. 73/5, காலி வீதி, கொழும்பு 03.

0112 350000 www.dfcc.lk
DFCC வங்கி உங்கள் வளர்ச்சிக்கு



இலங்கை வங்கி

பின்வரும் இலங்கை வங்கிக் கிளையை மீளமைப்பதற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் பொருத்தமான கட்டடமொன்று தேவைப்படுகின்றது.

ஹெம்மாதகமை வங்கிக் கிளை

உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தலாகாது.
- தரைப் பரப்பு குறைந்தபட்சம் 4,500 - 5,500 சதுர அடிகளைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும். மாடிகளைக் கொண்டிருப்பின் கீழ்த் தளமானது குறைந்தது 3,500 - 4,000 சதுர அடிகளாக இருத்தல் வேண்டும். மீதமுள்ள பகுதி மேல் மாடியில் இருக்க வேண்டும். (பகுதிகளாக பிரிக்கப்படாது இருத்தல் வேண்டும்.)
- உத்தேசக் கட்டடத்தின் முன்பகுதி குறைந்தபட்சம் 30 அடி அகலம் கொண்டதாக பிரதான பாதைக்கு முகப்பாக நகரத்தின் மத்தியில் அமைந்திருக்க வேண்டும்.
- இலகுவில் அண்மிக்கக் கூடியதாகவும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதியும் இருத்தல் வேண்டும்.
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் வசதி, இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு மற்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தளத்துக்கு 2'x2' அளவிலான தரையோடு பதித்து கூரைக்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 10'x10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (அவ் அறையானது இரும்புக் கம்பி போடப்பட்டு பாதுகாப்பானதாக இருத்தல் வேண்டும்.)
- நீரைச் சேமித்து வைக்க 1,000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறக் கதவு மற்றும் யன்னல்களுக்கு கனரக இரும்பு கிறில் இடப்பட்டு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறில்லையெனில் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"ஹெம்மாதகமை இலங்கை வங்கிக் கிளைக்கு பொருத்தமாக கட்டடம்"** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர் (சப்பிரகமுவ மாகாணம்)
இலங்கை வங்கி,
சப்பிரகமுவ மாகாண அலுவலகம்,
இல: 227, கொழும்பு வீதி
இரத்தினபுரி.
தொலைபேசி : 045 222 2036
தொலைநகல் : 045 222 2314
மின்னஞ்சல் : bocsbp@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



மக்கள் வங்கி

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின்கீழான தீர்மானம்**

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2022.08.31ஆந் திகதி நடைபெற்ற அதனது கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், PV 2653 எனும் பதிவிலக்கத்தை கொண்டதும் பத்தரமுல்ல பிரதான வீதி, இல. 42/2 எனும் முகவரியில் தனது பதிவுபெற்ற அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான றுஹுனு டெவலப்மென்ட் கன்ட்ரக்டர்ஸ் அன்ட் என்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனமானது கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு தேவிகா எஸ். மஹவத்த என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2022 ஜனவரி 19ஆந் திகதிய 1309ஆம் மற்றும் 1310ஆம் இலக்க ஈட்டு முறிகள் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாகையால் சொல்லப்பட்ட ஈட்டு முறிகள் மீதான மேலதிக வட்டியுடன் சேர்த்து நூற்றியாறு மில்லியன் இரண்டு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து நானூற்றி நாற்பத்து மூன்று ரூபா ஆறு சதம் (ரூபா. 106,289,443.06) பணத்தொகை இப்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது.

2022.06.01ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை நூற்றி மூன்று மில்லியன் இரண்டு இலட்சம் ரூபாவைக் (ரூபா 103,200.00) கொண்ட பணத்தொகையொன்றன் மீது ஆண்டுக்கு AWPLR + 4.5% எனும் விகிதத்திலான மேலதிக வட்டியுடன் சேர்த்து மேற்சொல்லப்பட்ட நூற்றியாறு மில்லியன் இரண்டு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து நானூற்றி நாற்பத்து மூன்று ரூபா ஆறு சதம் (ரூபா. 106,289,443.06) மொத்த பணத்தொகையையும் அத்துடன் பெறப்பட்டதிலிருந்தான கொடுப்பனவு (ஏதேனுமிருப்பின்) அதனையும் கழித்து சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டத்தினது பிரிவிக் கீழ் (29L) அறவிடப்படதக்க செலவுத் தொகைகளையும் பணங்களையும் அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு தேவிகா எஸ். மஹவத்த என்பரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான மேற்கூறிய 2022 ஜனவரி 19ஆம் திகதிய 1309ஆம் மற்றும் 1310ஆம் இலக்க ஈட்டு முறிகள் மூலம் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பு 08, பெயார்பீல்ட் தோட்டம், இலக்கம் 6A எனும் முகவரியைச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர் ஷொக்மென் அன்ட் சமரவிக்கிரம (Schockman & Samerawikrema) என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை, 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தினால் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளேயில் பல்லே பத்துவிலுள்ள கடுவெல பிரதேச செயலகப் பிரிவினுள்ளும் பத்தரமுல்ல தெற்கு 492B கிராம அலுவலர் பிரிவினுள்ளும் வருகின்ற பத்தரமுல்லயில் அமைந்துள்ள ஜயந்திபுர 1ஆவது ஒழுங்கை இடது (பரகும் மாவத்தையில்) 15ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதும் பத்தரமுல்ல பார்ம் மறுபெயர் குருந்துவத்த என்றழைக்கப்படும் காணியியாகவுள்ளதும். (உரிமம் பெற்ற நில அளவையாளர் சீ.டீ.எஸ். குணதிலக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1991.08.23ஆந் திகதிய 1834ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 1இன் மீள் நில அளவையாக இருக்கின்ற) உரிமம்பெற்ற நில அளவையாளர் சீ.டீ.எஸ். குணதிலக என்பவரினல் தயாரிக்கப்பட்ட 2009.10.06ஆந் திகதிய 3709ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும், சொல்லப்பட்ட காணித்துண்டம் பின்வரும் எல்லைகளை உடையது - **வடக்கு**: மேற்சொல்லப்பட்ட 1834ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 2, **கிழக்கு**: மேற் சொல்லப்பட்ட 1834ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்ட காணித்துண்டம் 2. **தெற்கு:** திஸ்ஸ மாவத்தை மற்றும் **மேற்கு:** பரகும் மாவத்தை, அத்துடன் பரப்பளவில் இது. மண், கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அதன்மேலுள்ள எல்லாவற்றையும், சேர்த்து பதினாறு தசம் எட்டு ஆறு பேர்ச்சுக்களைக் (00ஏ. 00றூ. 16.86பே.) கொண்டுள்ளதுடன் ஹோமாகம காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் B 1272/59 எனும் பதிவகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டும் உள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

**பிரதிப் பொது முகாமையாளர் (அறவீடுகள்)**

**மக்கள் வங்கி,**
**அறவீடுகள் பிரிவு,**
**10ஆவது மாடி, தலைமை அலுவலகக் கட்டிடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு -02.**
2022.08.10

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

## வாகன விற்பனை

| மோட்டார் வாகனம் | | வருடம் | இடம் |
|---|---|---|---|
| CAZ-9275 | மெர்சிடிஸ் பென்ஸ் | 2017 | ராகம |

மேலே காணப்படும் வாகனம் எமது இடத்தில் பரீட்சித்து பார்ப்பதுடன் Auction முறையில் விலைக்கு வழங்கப்படும்

ராகம - 0113 288 893

LB FINANCE
எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சீ.
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.



Repeat Your Ad For Better Offers


### பெயர் மாற்றம்

இறக்காமம் 04ம் பிரிவு இல. 127, ஏ.பி.சி. வீதியில் வசிக்கும் **ஹச்சி முஹம்மது நஜ்பான் நிஸா** ஆகிய நான் (தே.அ.அ.இல. 197952001580) இன்று முதல் **நஜ்முன் நிஸா** என பெயர் மாற்றிக் **கொண்டேன் எனவும்** இனி மேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரை பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**நஜ்முன் நிஸா**

## கொட்டிகாவத்த- முல்லேரியா பிரதேச சபை - புதிய நகரம், கொத்தட்டுவ

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் நிர்மாண ஒப்பந்தக்காரராக இந்த பிரதேச சபையில் பதிவு செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் 2022.11.21ஆம் திகதி வரை என்னால் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிப்பவர்களினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட விபரங்களை உள்ளடக்கி தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022.11.21ஆம் திகதி அல்லது அதற்கு முன் தலைவர், கொட்டிகாவத்த - முல்லேரியா பிரதேச சபை, கொத்தட்டுவ புதிய நகரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2023’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
   - I. பொருள் / சேவை வழங்குநர், ஒப்பந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி:
   - II. தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி:
   - III. பதிவு செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கும் வழங்குதல் சேவையின் இலக்கம் மற்றும் பெயர் (அட்டவணையின் பிரகாரம்)
   - IV. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி (வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
   - V. அனுபவம் தொடர்பான விபரங்கள்:
   - VI. நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள் துறையின் பதிவுகள் தொடர்பான விபரங்கள் (சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
   - VII. பெறுமதி சேர் வரிக்காக (VAT) பதிவு செய்து பெறுமதிசேர் வரியை செலுத்தும் (VAT) நிறுவனமானால் பெறுமதி சேர் வரிச் (VAT) சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்.
02. ஒவ்வொரு வழங்குதல் மற்றும் சேவைக்காகவும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தை ரொக்கப் பணமாக அல்லது தலைவர், கொட்டிகாவத்தை - முல்லேரியாவ பிரதேச சபையின் பெயருக்கு எழுதப்பட்ட காசோலை மூலம் செலுத்துதல் வேண்டும். (காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)
04. ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு எதிர்பார்ப்பவர்களால் தமது தகுதிகளை ஆவணச் சாட்சிகள் மூலம் நிரூபித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**கொட்டிகாவத்த**
**முல்லேரியா பிரதேச சபை,**

**2022.09.23**
**கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபையில்.**
**தொலைபேசி இலக்கம்: 0112410288**

**அட்டவணை**

| வழங்கும் சேவை இலக்கம் | வழங்கும் பொருள் / சேவையின் பெயர் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1. | அலுவலக காகிதாதிகள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 2. | அலுவலக உபகரணங்கள் / மரத் தளபாடங்கள் / உருக்கு / பிளாஸ்டிக் பொருட்கள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 3. | அலுவலக இறப்பர் முத்திரைகள் | ரூ. 1500.00 |
| 4. | வீதி விளக்கு ஒளியூட்டல் உபகரணங்கள் மற்றும் மின்சாரப் பொருட்கள் / உபகரணங்கள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 5. | கணனி மற்றும் துணைப்பாகங்கள், தொலைநகல் இயந்திரங்கள், அச்சுப் பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 6. | கணனி துணைப்பாகங்கள் (டோனர்/ கார்ட்ரிச் / மாஸ்டர் ரோல் / மை) வழங்குதல் | ரூ. 1500.00 |
| 7 | சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் (தும்புத் தடி / ஈர்க்கிள் / மலசலகூடத் தூரிகைகள் / மொப் / சுத்திகரிப்புப் பொருட்கள்) வழங்குதல் | ரூ. 1500.00 |
| 8. | கட்டிட நிர்மாணப் பொருட்கள் ABC / Chip கல் / கல் துள் (Quarry dust) / சீமெந்து / மணல் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 9. | வீதி நிர்மாணப் பொருட்கள் கோலாஸ் / தார் / பிட்டுமன் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 10. | கனரகப் பொருட்கள் (இரும்பு / பீவீசி பொருட்கள் / மை வகைகள்) வழங்குதல் | ரூ. 1500.00 |
| 11. | ஆயுர்வேத மருந்துகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 12 | கிருமிநாசினிகள் / களை நாசினிகள் உட்பட இரசாயனப் பொருட்கள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 13 | வாகன உதிரிப்பாகங்கள் டயர் / டியூப் / டேப் / பெட்டறிகள் மற்றும் டிராக்டர் உதிரிப்பாகங்கள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 14 | சீருடைத் துணிகள்/ ஏனைய துணிகள்/ திரைச்சீலை வகைகள் மற்றும் சப்பாத்துகள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 15 | விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 16 | பூந்தோட்ட அலங்காரப் பொருட்கள் (பூச்சாடிகள்/ கன்று வகைகள் / உரங்கள்) வழங்குதல் | ரூ. 1500.00 |
| 17 | அறிவித்தல் பலகைகள் / பெயர்ப் பலகைகள் / பதாகைகள் / சுவரொட்டிகள் / கட்டவுட் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 18 | அச்சு வேலைகள் (அச்சடிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் ஆவணங்கள்) | ரூ. 1500.00 |
| 19 | வாடகை அடிப்படையில் இயந்திரங்கள் வழங்குதல் (செயின் டோசர் / ஸ்கவேட்டர் / பக்கோ லோடர், வீதி அழுத்திகள் தொன் 10-12) | ரூ. 1500.00 |
| 20 | வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்குதல் (லொறி / டிப்பர் / டிராக்டர்) | ரூ. 1500.00 |
| | **சேவைகள்** | |
| 21 | உணவு பானங்கள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 22. | வாகன திருத்தவேலைகள் மற்றும் கராஜ் | ரூ. 1500.00 |
| 23 | டயர்களை மீள நிரப்புதல் | ரூ. 1500.00 |
| 24 | அலுவலக உபகரண திருத்தவேலைகள் | ரூ. 1500.00 |
| 25 | கணனிகள் / புகைப்படப்பிரதி / டுப்ளோ இயந்திரம் / அச்சுப்பொறி திருத்தவேலைகள் | ரூ. 1500.00 |
| 26 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் | ரூ. 1500.00 |
| 27 | பழைய பத்திரிகைகள் / சிதைந்த பொருட்களை கொள்வனவு செய்தல் | ரூ. 1500.00 |
| 28 | நில அளவை சேவைகள் | ரூ. 1500.00 |
| 29 | வளிச்சீராக்கிகள் / கமரா முறைமை / கெமரா வலையமைப்பு முறைமை திருத்தவேலைகள் | ரூ. 1500.00 |
| 30 | வாகனங்களுக்கான வளிச்சீராக்கம் | ரூ. 1500.00 |
| 31 | மண் மற்றும் சிதைந்த மண்களை போக்குவரத்து செய்தல் | ரூ. 1500.00 |
| 32 | திரைச்சீலைகளை தைத்து முடிவுறுத்தல் | ரூ. 1500.00 |
| 33 | முச்சக்கர வண்டி திருத்தவேலைகள், உதிரிப்பாகங்களின் விற்பனை மற்றும் சேர்விஸ் செய்தல் | ரூ. 1500.00 |
| 34 | அபாயகரமான மரங்கள் மற்றும் கிளைகளை வெட்டி வீழ்த்துதல் | ரூ. 1500.00 |
| 35 | ஒலிபெருக்கி இயந்திரங்களை வழங்குதல் | ரூ. 1500.00 |
| 36 | தகனச்சாலைகளுக்கு எரிவாயு வழங்குதல் | ரூ. 1500.00 |
| 37 | வாய்க் கவசங்கள், முகக் கவசங்கள், கை கழுவும் திரவங்கள், பாதுகாப்பு உடைகள், கிருமிநாசினித் திரவங்கள் வழங்குதல் | ரூ. 1500.00 |
| 38 | நிர்மாண ஒப்பந்தம் 500000.00 ரூபா வரை | ரூ. 1500.00 |
| 39 | நிர்மாண ஒப்பநதம் 500000.00 முதல் 1000000.00 வரை | ரூ. 1500.00 |
| 40 | நிர்மாண ஒப்பந்தம் 1000000.00 ரூபாக்கு மேல் | ரூ. 2000.00 |

மேற்படி 38, 39 மற்றும் 40 இலக்கங்களுக்கு இக்டாட் நிறுவனப் பதிவு இருத்தல் வேண்டும்.

සීමාසහිත ලංකා සීනි (පුද්ගලික) සමාගම
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
Lanka Sugar Company (Private) Limited

LSC

**பெருந்தோட்ட அமைச்சு**
**சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட அபிவிருத்திப் பிரிவு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக செவனகல லங்கா சீனி நிறுவனத்தின் தொழிற்சாலை இலக்கம் 01இன் சிற்றுண்டிச்சாலை மற்றும் உபகரணங்கள் இலக்கம் 02இன் சிற்றுண்டிச்சாலையை நடத்திச்செல்லல்

செவனகல தொழிற்சாலையின் தொழிற்சாலை இலக்கம் 01 இன் சிற்றுண்டிச்சாலை மற்றும் உபகரணங்கள் இலக்கம் 02இன் சிற்றுண்டிச்சாலையை நடத்திச் செல்வதற்கு செவனகல வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் உள்நாட்டு வழங்குநர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| அலகு | கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத விலைமனு தொகை | விலைமனு பிணை |
|---|---|---|---|
| செவனகல - தொழிற்சாலை இலக்கம் 01 | Lsc/Sev/Canteen/ 2022/ 2023-1 | 3,000.00 | 225,000.00 |
| செவனகல - உபகரணங்கள் இலக்கம் 02 | Lsc/Sev/Canteen/ 2022/ 2023-2 | 1,500.00 | 45,000.00 |

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி) - இலக்கம் 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்து மூல கோரிக்கை மூலம் மேற் குறித்த மீளளிக்கப்படாத விலைமனு கட்டணத்தை ரொக்கப்பணமாக செலுத்தி 2022 ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் வாரத்தின் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை விலைமனு ஆவணத்தை பெறுகை முகாமையாளர் - இலக்கம் 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். விலைமனு ஆவணத்தை வழங்குவது 2022 ஒக்டோபர் 11ஆம் திகதி பி.ப. 2.00க்கு முடிவுறும்.

முத்திரை பொறிக்கப்பட்ட ஆவணத்தை தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இலக்கம் 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு 2022.10.12 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் - இலக்கம் 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 இல் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவதற்கு முடியும். விலைமனுக்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு விபரம் மற்றும் இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு விலைமனு ஆவணத்தை பூர்த்தி செய்து குறித்த ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். முழுமை பெறாத விலைமனு ஆவணங்கள் மற்றும் தாமதித்து கிடைக்கின்ற விலைமனு ஆவணங்கள் ரத்துச் செய்யப்படுவதோடு விலைமனுக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

விலைமனு ஆவணங்கள் திறக்கப்படுவது 2022.10.12 ஆம் திகதி பி.ப. 2.10க்கு வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் - இலக்கம் 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் இடம்பெறும். அந்தச் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

அனைத்து விலைமனுக்களுடனும் விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியில் இருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியான வகையில் தொழிற்சாலை இலக்கம் 01க்காக ரூபா 225,000.00 (ரூபா இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் மாத்திரம்) மற்றும் உபகரணங்கள் இலக்கம் 02க்காக ரூபா 45,000.00 (நாற்பத்து ஐயாயிரம் மாத்திரம்) விலைமனு பிணைகளை இணைத்து அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் 071 410 3359 / 077 010 3359 வழியாக வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் பெறுகை முகாமையாளரை அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இலக்கம் 27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04.**
2022.09.23


The Housewives' companion
Classifieds on
Daily News


## கேள்வி அறிவித்தல்

## மஹர பிரதேச சபை

மஹர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள கீழே அட்டவணையில் உள்ள இறைச்சிக்கடைகள் மற்றும் வாரசந்தையை 2023ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2022.10.26 மு.ப. 10.00 வரை என்னால் ஏற்கப்படும். கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படுவது 2022.10.25 பி.ப. 3.00 வரை மட்டுமே.

கேள்விப் படிவங்கள் மஹர பிரதேச சபையின் தலைமையகத்தில் மாத்திரம் விநியோகிக்கப்படும். குறித்த கேள்விப் பத்திரங்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகள் வேறு வேறாக உறைகளில் இடப்பட்டு அவ் இரு உறைகளையும் ஓர் உறையில் இட்டு அவ் உறையின் இடது மேல் மூலையில் வாரசந்தை அல்லது இறைச்சிக் கடையின் பெயர் குறிப்பிட்டு செயலாளர் மஹர பிரதேச சபை, பஹல கரகஹமுன, கடவத்த என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சபையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விகள் திறக்கப்படல் 2022.10.26 மு.ப. 10.05 இற்கு இடம் பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை கடவத்த பஹல கரகஹமுன மஹர பிரதேச சபையின் தலைமையகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மஹர பிரதேச சபைக்கு உரியது.

**ஏ.ஏ. சுதீமா சாந்தனீ**
**தலைவர்,**
**மஹர பிரதேச சபை,**
**பஹல கரகஹமுன, கடவத்த**
**தொ.பே. 0112925247**
**2022.09.21**

| இலக்கம் | வியாபாரத்தின் தன்மை | குறைந்தபட்ச கேள்வி (ரூ. சதம்) | கேள்விப் படிவக் கட்டணம் (ரூ. சதம்) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை (ரூ. சதம்) |
|---|---|---|---|---|
| 01 | சூரிகம வார சந்தை | 103,700.00 | 400.00 | 10,370.00 |
| 02 | 284/சீ, எடேரமுல்ல ஆடு/ கோழி இறைச்சிக்கடை | 196,000.00 | 400.00 | 19,600.00 |
| 03 | 284/ஜி, எடேரமுல்ல மாட்டிறைச்சி கடை | 662,250.00 | 400.00 | 66,225.00 |
| 04 | இல. 300, தளுபிட்டிய மாடு/ பன்றி/ ஆட்டிறைச்சிக் கடை | 151,000.00 | 400.00 | 15,100.00 |
| 05 | அக்பர்டவுன் மாட்டிறைச்சி கடை | 450,700.00 | 400.00 | 45,070.00 |
| 06 | உடுபில வாரசந்தை | 600,000.00 | 400.00 | 60,000.00 |
| 07 | மல்வத்து ஹிரிபிட்டிய வார சந்தை | 400,000.00 | 400.00 | 40,000.00 |
| 08 | மல்வத்துஹிரிபிட்டிய வாரசந்தை பன்றியிறைச்சி கடை | 325,000.00 | 400.00 | 32,500.00 |
| 09 | மல்வத்துஹிரிபிட்டிய வாரசந்தை இல 01 மீன் கடை | 40,000.00 | 400.00 | 4,000.00 |
| 10 | பல்வத்துஹிரிபிட்டிய வாரசந்தை இல. 02 மீன் கடை | 40,000.00 | 400.00 | 4,000.00 |
| 11 | மல்வத்துஹிரிபிட்டிய வாரசந்தை இல. 03 மீன் கடை | 20,000.00 | 400.00 | 2,000.00 |

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

2277762 Toyata dyna, 1993, Lorry கூடிய விலைக் கேள்விக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சீ இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.இல. 07 1 4 542 958 055701

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

WP YI - 5485 Bajaj - 2011, Three-wheel கூடிய விலைக் கேள்விக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சீ இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 07112 10810 055703

### வர்த்தகம்

**218 மருத்துவ பொருட்கள்/ சிகிச்சை**

New Thihariya Abdeen Medical, 116C, Colombo - Kandy Road, Thihariya Junction Next to Petrol Shed 0 74065633 3. எல்லா வித மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகள் தரமான ஆய்வுகூடம் மூலம் பெற்றுக் கொள்ளவும். உடல் உறுப்புக்களின் சீராக்களுக்கும், தோல் நோய்கள், சிறுநீர் தொற்று மாதவிடாய் ஒழுங்கீனம் உட்பட எல்லா நோய்களுக்கும் தொடர்பு கொள்ளவும். 055043


The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
for 15 Words - Rs.1,000/-
For each additional word Rs. 25/-
Easy way to make your payment :- BOC - Acc.No. 000000377 LAKE HOUSE BRANCH
Green Light for Online Transfer
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கனடா, வென்கூவர் பிசி கிங்ஸ்வே இல. 944, வி5 V3 சி4, ஏபி3 இல் வசிக்கும் மல்லிகா அப்புஹாமிலாகே நெவில் ஆனந்தசிரி மந்தீரத்ன ஆகிய என்னால் ரதாவான, பண்டாரவல வீதி, இல. 345இல் வசிக்கும் எதிரிசூரிய முதயன்சேலாகே சோபான்புத்திக எதிரிசூரிய என்பவருக்கு அதிகாரத்தை ஒப்படைத்து, வென்கூவர் இன் பகிரங்க நொத்தாரிசு ஆஷா லெஹிஆ வினால் 2019.05.30ம் திகதி உறுதி செய்யப்பட்ட கம்பஹா மேலதிக உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகத்தின் தினப் புத்தகம் இல. 2042 இன் 11ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அட்டோர்ணி அதிகாரப் பத்திரம் இன்று முதல் இரத்து செய்யப்படுவதாக இலங்கை அரசுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொன்கிறேன்.

**மல்லிகா அப்புஹாமிலாகே நெவில்**
**ஆனந்தசிரி மந்தீரத்ன**
**2022.09.22**


Best way
to fulfil
your
Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer


# விலைமனு அறிவித்தல்

## சுகாதார சேவைகள் திணைக்களம் - மேல் மாகாணம்

## சமைத்த உணவு வழங்கல் – 2023

2023ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தின் கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் பின்வரும் வைத்தியசாலைகளிற்கு சமைத்த உணவு வழங்குவதற்காக, மேல் மாகாணத்தில் வசிக்கும் நபர்கள் மற்றும் பதிவு செய்யப்பெற்றுள்ள வியாபார நிறுவனங்களிடமிருந்து 2022.09.23 முதல் 2022.10.17 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ❖ மீளளிக்கப்படாத விலைமனு வைப்புத் தொகை ரூபா 1000 மற்றும் தேசிய அடையாள அட்டை, பதிவை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் சான்றிதழ் மற்றும் ஆதனச் சான்றிதழைச் சமர்ப்பித்து விபரங்களுடன் கூடிய விலைமனுப்படிவங்களை கொழும்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.
- ❖ 2022.09.23 முதல் 2022.10.16 அன்று பி.ப. 02.00 வரை மாத்திரம் இதற்கான விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும்.
- ❖ அனைத்து விலைமனுக்களும் இரண்டு பிரதிகளில் தனித்தனி இரண்டு உறைகளில் சேர்த்து முத்திரையிட்டு 2022.10.17 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, தலைவர், பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மாளிகாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதன் மூலம் சமர்ப்பிக்கலாம்.
- ❖ முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் மற்றும் அனுப்பப்பட்ட, உறைகளின் இடது பக்க மேல் மூலையில், ‘சமைத்த உணவு வழங்கல் 2023 ......... வைத்தியசாலை’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| வைத்தியசாலையின் பெயர் | மீளளிக்கப்படும் விலைமனு வைப்புத் தொகை ரூபா |
|---|---|
| மாளிகாவத்தை வைத்தியசாலை | 33,438.00 |
| மொரட்டுவ வைத்தியசாலை | 103,248.00 |
| வேத்தர வைத்தியசாலை | 79,080.00 |
| தளங்கம வைத்தியசாலை | 41,496.00 |
| கொஸ்கம வைத்தியசாலை | 34,896.00 |
| பிலியந்தல வைத்தியசாலை | 90,024.00 |
| அத்துருகிரிய வைத்தியசாலை | 79,080.00 |
| நவகமுவ வைத்தியசாலை | 33,438.00 |
| பாதுக்க வைத்தியசாலை | 66,084.00 |

**தலைவர், பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை**
**மாளிகாவத்தை, கொழும்பு-10**

# வில்கமுவ பிரதேச சபை

## கேள்விக்கான அழைப்பு

**வில்கமுவ பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| தொடர் இல. | வாகன இலக்கம் | வகை |
|---|---|---|
| 01 | 53-4732 | மிட்சுபிஷி கெப் |
| 02 | 67-0339 | டெயிலர் |
| 03 | CPRA-8217 | டிரக்டர் |
| 04 | 49-8220 | டிரக்டர் |

01. கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் 2022.09.23 முதல் 2022.10.12 மு.ப. 10.00 வரை மீளளிக்கப்படும் ரூ. 5000/- கேள்விப் பிணை வைப்பு, மீளளிக்கப்படும் ரூ. 3000/- படிவக் கட்டணத்தையும் காசாக செலுத்தி அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வாகனத்திற்கும் வேறுவேறாக கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
02. மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத்தொகை செலுத்தப்படுவது கேள்விகளை சமர்ப்பிப்போருக்கு மட்டுமே.
03. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2022.09.23 முதல் 2022.10.12 மு.ப. 10.00 இற்கு முன் ‘‘தலைவர், வில்கமுவ பிரதேச சபை’’, என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். (மேலதிக விபரங்களுக்கு தொ.பே. 066-2250075)
04. கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2022.10.12 மு.ப. 10.30 இற்கு இடம்பெறுவதுடன் அதற்காக கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
05. கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் ‘வாகன இலக்கம் மற்றும் வாகனத்தின் வகையை குறிப்பிட்டு’ ‘வாகனங்களுக்கான கேள்வி விலைமனுக்கள் - 2022’ என்று குறிப்பிடுதல் வேண்டும்.
06. வில்கமுவ பிரதேச சபையின் தலைவரின் அனுமதியின் பேரில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை மேற்படி வாகனங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
07. ஒவ்வொரு வாகனத்திற்கும் வேறு வேறாக கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
08. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்பட்டதன் பின்பு திறக்கப்படாமல் மதிப்பீட்டு பெறுமதிக்கு மேல் பெறுமதியுடைய அதி கூடிய கேள்வித் தொகையைசமர்ப்பித்துள்ள கேள்விதாரருக்கு கேள்வியை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுவதுடன், குறித்த கேள்விதாரரை தேர்ந்தெடுத்த பின்னர் அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும். அக் கடிதம் கிடைத்து 07 நாட்களுக்குள் குறித்த தொகையை பிரதேச சபையில் காசாக வைப்புச் செய்தல் வேண்டும். அக் காலத்திற்குள் அத்தொகையை செலுத்துவதற்கு தவறின் அக் கேள்விப் பத்திரத்தை நிராகரிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.
09. கவனிக்கவும் - CP-RA-8217 (ரூ. 17970/-) மற்றும் 49-8220 (ரூ. 8535/-) ஆகிய டிரக்டர்களுக்கு நிலுவை வருமான அனுமதிப்பத்திரம் 2015 ஆண்டில் இருந்து இதுவரை பெற்றுக்கொள்ளப்படவில்லை அத்துடன் அந்த நிலுவை வருமான அனுமதிப்பத்திர கட்டணத்தை வாகனத்தை பெற்றுக்கொள்பவரால் செலுத்தப்படல் வேண்டும்.
10. எந்த விடயம் காரணமாகவும் கேள்விப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை சபைக்குரியது.

**கே.ஏ.பி. தென்னக்கோன்**
**தலைவர்**
**வில்கமுவ பிரதேச சபை**

**2022.09.23ம் திகதி வில்கமுவ பிரதேச சபை அலுவலகத்தில்.**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்**

1) கடன் தொடர்பு இலக்கம்: 84362350

இல. 84, புது வீதி, ஹுனுப்பிட்டி, வத்தளை என்ற முகவரியில் அமைந்துள்ள ‘வரையறுக்கப்பட்ட தசனிமா (தனியார்) நிறுவனத்தாரின்’ கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைக்கப்பட்ட இல. 84/B புது வீதி, ஹுனுப்பிட்டி என்ற இடத்தில் அமைந்துள்ள ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய 2021.05.21ஆம் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2229ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2021.05.07ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் கட்டடங்களையும் இல.50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2022.11.18ஆந் திகதி காலை 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**
**ஆதனத்தின் விவரம்**

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் சியனே கோரளையின் அதிகாரி பற்றில் களனி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட (தலுகம உப அலுவலகம்) களனி பிரதேச செயலகர் பிரிவின் கீழுள்ள 256D ஹுனுப்பிட்டிய கிழக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள ஹுனுப்பிட்டிய என்ற இடத்தில் அமைந்துள்ள இல. 84/B, புது வீதி எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட தெல்கஹவத்தை என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி.சி.எம்.எஸ். விமலரத்ன தயாரித்த 2003.08.03ஆம் திகதிய 238/2003ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு A2B என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணியானது **வடக்கில்** ஹுனுப்பிட்டிய புது வீதியையும் அதே காணியின் ஒரு பகுதியையும் **கிழக்கில்** 542/1994ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டுகள் D, C, B என்பவற்றையும் அதே காணியின் ஒரு பகுதியையும் **தெற்கில்** பாதையையும் **மேற்கில்** காணித்துண்டு A2AIயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மேலும், குறித்த 238/2003ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தெட்டு தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சுகள் (A0. R0.P28.05) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஏழு பூச்சியம் ஒன்பது ஐந்து (0.07095) ஹெகடயர் பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணியானது கொழும்புக் காணிப் பதிவகத்தில் பக்கம் G68/98இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**

**திரு. டபிள்யு. எஸ்.எஸ்.பி ஏக்கநாயக்க**
**முகாமையாளர்**
**(அறவிடல், கடன் மேற்பார்வை)**

**இலங்கை வங்கி**
**தலைநகரக் கிளை**
திகதி: 2022.09.16

# நிந்தவூர் பிரதேச சபை

## 2023 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டிற்காக நிந்தவூர் பிரதேச சபைக்கு பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் செய்தல், பராமரிப்பு வேலைகள் செய்தல், மற்றும் ஒப்பந்த வேலைகளுக்கு நிந்தவூர் பிரதேச சபையில் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள் ஒப்பந்தக்காரர்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதிவு செய்வதற்காக ரூபா 1000/= செலுத்துதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 2022.09.27ம் திகதி முதல் 2022.10.26ம் திகதி வரை மு.ப. 8.30 தொடக்கம் பி.ப.3.00 வரை பிரதேச சபையின் நிதிப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை 2022.10.26ம் திகதி பதிவு செய்யும் இறுதித்தினமாகும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**எம்.ஏ.எம். தாஹிர்**
**கௌரவ தவிசாளர்,**
**பிரதேச சபை,**
**நிந்தவூர்.**
**தொலைபேசி இலக்கம் : 067-2250035**

# நிந்தவூர் பிரதேச சபை

## கேள்விப்பத்திர அழைப்பு – 2023

நிந்தவூர் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான பொதுச்சந்தை திறந்த வெளி, வெளவாலோடை பூ பந்து உள்ளக அரங்கு, பொதுச்சந்தை கடையறைகள், மாட்டிறைச்சி, கோழி இறைச்சி, ஆட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு உரிமம் வழங்குதல் போன்றவற்றுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. நிந்தவூர் பிரதேச சபைக்குரிய மேற்குறிப்பிட்ட கேள்விகளை 2023.01.01 முதல் 2023.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான ‘‘சீல்’’ வைத்த கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

- ▶ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் முதல் திகதி 27.09.2022
- ▶ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் இறுதித் திகதி 10.10.2022 நண்பகல் 12.00 மணி வரை
- ▶ கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 11.10.2022 பிற்பகள் 2.00 மணி வரை
- ▶ கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும் 11.10.2022 பி.ப. 2.30 மணி

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பர அறிவித்தலை பார்க்கவும்.

**எம்.ஏ.எம். தாஹிர்**
**கௌரவ தவிசாளர்,**
**பிரதேச சபை,**
**நிந்தவூர்.**
**தொலைபேசி இலக்கம் : 067-2250035**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத சேவைகள்

**கடுகண்ணாவ முற்றவெளிக்கு புகையிரதப் பாதை தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கான 4000 எண்ணிக்கையான குறைந்த உயரமுடைய கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்குவதற்கான பெறுகை**

**பெறுகை இல. SRS/F.7879**

01. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களக் கொள்வனவுக் குழு (மேஜர்) தவிசாளர், கடுகண்ணாவ முற்றவெளிக்கு புகையிரதப் பாதை தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கான 4,000 எண்ணிக்கையான குறைந்த உயரமுடைய கொங்கிறீட் சிலிப்பர்களை கொள்வனவு செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார்.
02. சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.
03. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2022-09-23ஆம் திகதி முதல் 2022-10-17ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**
**தொலைபேசி** : 94 (11) 2438078 **அல்லது** 94 (11) 2436818
**தொலைநகல்** : 94 (11) 2432044
**மின்னஞ்சல்** : srs.slr@gmail.com
**இணையதளம்** : www.railway.gov.lk

04. விலைமனுதாரர்கள் கடந்த ஐந்து வருடங்களில் இலங்கை புகையிரத சேவைக்கு 5,000 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்கியிருத்தல் அல்லது 50 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் தூண்கள் வழங்கியிருத்தல் அல்லது 500 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் கம்பங்களை வழங்கியிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைப்பட்டியல்களின் பிரதிகளையும் (Copies of invoices) இணைத்தல் வேண்டும்.
05. மீளளிக்கப்படாத கட்டணமாக 30,500.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் 2022-09-23ஆம் திகதி முதல் 2022-10-17ஆம் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
06. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 1,700,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.
07 விலைமனுக்கள் 2022-10-18ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (மேல்நிலை),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10 இலங்கை**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

Ref. No. SRS/F.7879


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk



# பந்துவீச்சாளர் வரிசையில் தீக்ஷன ஓர் இடம் உயர்வு

சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் புதுப்பிக்கப்பட்ட டி20 பந்துவீச்சாளர் தரவரிசையில் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன ஓர் இடம் முன்னேற்றம் கண்டு ஏழாவது இடத்திற்கு உயர்ந்துள்ளார்.

இது அவரது சிறந்த பந்துவீச்சு தரவரிசை என்பதோடு அவரது சுழற்பந்து சகாவான வனிந்து ஹசரங்க இந்த தரவரிசையில் ஆறாவது இடத்தில் மாற்றம் இன்றி நீடிக்கிறார்.

ஆசிய கிண்ணத் தொடரில் சிறப்பாக பந்து வீசிய தீக்ஷன ஆறு போட்டிகளில் ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தி இலங்கை அணி கிண்ணத்தை கைப்பற்றுவதில் முக்கிய பங்கு வகித்திருந்தார்.

இதற்கு முன்னர் தரவரிசையில் ஏழாவது இடத்தில் இருந்த இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் இரண்டு இடங்கள் பின்தள்ளப்பட்டுள்ளார். நான்காவது இடத்தில் இருந்த அவுஸ்திரேலியாவின் அடம் சம்பா ஐந்தாவது இடத்துக்கு தள்ளப்பட்டிருப்பதோடு ஆப்கான் சுழற்பந்து வீச்சாளர் ரஷீத் கான் நான்காவது இடத்திற்கு வந்துள்ளார்.

டி20 பந்துவீச்சாளர் தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் ஹேசல்வுட் தொடர்ந்து முதல் இடத்தை தக்கவைத்துள்ளார்.

டி20 துடுப்பாட்ட வீரர் தரவரிசையின் முதல் பத்து இடங்களில் ஒரே மாற்றமாக பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் அஸாம் நான்காவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டு இந்தியாவின் சூர்யகுமார் யாதவ் மூன்றாவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளார். பாகிஸ்தானின் மொஹமட் ரிஸ்வான் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

இலங்கை ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிஸ்ஸங்க தொடர்ந்தும் எட்டாவது இடத்தில் நீடிக்கிறார்.

# பிலியந்தலை மத்தியக் கல்லூரியிடம் யாழ். சென். ஜோன்ஸ் அணி தோல்வி



இலங்கையின் 19 வயதின் கீழ் மூன்றாம் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் கடந்த புதனன்று (21) நடைபெற்ற பிலியந்தலை மத்தியக் கல்லூரிக்கு எதிரான போட்டியில், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் அணி 48.4 ஓவர்களில் 173 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. அண்டன் அபிஷேக் 76 ஓட்டங்களை பெற்றார். பதிலெடுத்தாடிய பிலியந்தலை மத்தியக் கல்லூரி அணிக்கு சென். ஜோன்ஸ் பந்துவீச்சாளர்கள் நெருக்கடி கொடுத்தனர். எனினும் அந்த அணி 46.3 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. இதன்போது செதிக டில்மித் 52 ஓட்டங்களை பெற்றார்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தங்களுடைய குழுவில் மொத்தமாக 4 போட்டிகளில் இதுவரை விளையாடியுள்ளதுடன், இரண்டு வெற்றி மற்றும் இரண்டு தோல்விகளை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வியங்கல்லை ரெட்லைன் இறுதிப் போட்டிக்கு தகுதி

பேருவளை உதைபந்தாட்ட சங்கத்தினர் ஏற்பாடு செய்த ஜனாதிபதி கிண்ண அரை இறுதிப் போட்டியில், பேருவளை சுப்பர் சன் அணியை 1–0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, வியங்கல்லை ரெட்லைன் உதைபந்தாட்டக் கழகம் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

இந்த போட்டி கடந்த திங்கட்கிழமை (19) தர்கா நகர் சாஹிரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டி தர்கா நகர் யுனைடட் கழகத்துடன் இடம்பெறவுள்ளது. அரை இறுதிப் போட்டியில் சிறந்த வீரராக வியங்கல்லை ரெட்லைன் கழகத்தின் எம்.என். நஸ்ரான் விருது பெற்றார்.



# இளம் தடகள வீரர்களை தேடும் பணிகள் ஆரம்பம்




படம்: விமல் கருணாதிலக்க

இலங்கை ஒலிம்பிக் குழுவினால் நியமிக்கப்பட்ட கனிஷ்ட அபிவிருத்திக் குழு இளம் தடகள வீரர்களை அடையாளம் காணும் 'இளையோர் எழுச்சி 2026' திட்டத்தின் கீழ் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

'இளையோர் எழுச்சி 2026' திட்டமானது கனிஷ்ட அபிவிருத்தி குழுவினால் அமைக்கப்பட்ட விரிவான மூன்று கட்ட மூலோபாயம் மூலம் உறுதியான மற்றும் தொடர்ச்சியான வழிகாட்டல் மற்றும் பயிற்சியுடன் இளம் தடகள வீரர்களை வெளிக்கொண்டுவருவதை இலக்காகக்கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

'இலங்கையில் விளையாட்டுகளின் தரத்தை அதிகரிப்பது மற்றும் எமது வீரர்களை சர்வதேசத்துடன் போட்டியிடச் செய்வதற்கு கனிஷ்ட அபிவிருத்திக் குழு பதிலாக இருக்கும்' என்று அதன் தலைவர் ஷிரந்த பீரிஸ் தெரிவித்தார்.

### இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின்

# புதிய யாப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றம்

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய யாப்பு நேற்று (22) நடைபெற்ற விசேட பொதுக் குழு கூட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை விட அதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

ஒரு லீக்கிற்கு மூன்று வாக்குகள் வீதம் வழங்குவது தொடர்பான சரத்துக்கு ஆதரவாக 48 வாக்குகள் அளிக்கப்பட்டதோடு எதிராக வாக்குகள் எதுவும் அளிக்கப்படவில்லை.

13 பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்த சரத்து தவிர மற்ற அனைத்துக் சரத்துகளுக்கு ஆதரவாக 61 வாக்குகள் கிடைத்ததோடு எவரும் எதிராக வாக்களிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வத்தளை பெகாஸஸ் ஹோட்டலில் இந்த விசேட பொதுக் குழு கூட்டம் இடம்பெற்றது.

SRI LANKA FOOTBALL
EST 1939

யாப்பு வரைவை மேற்பார்வை செய்வதற்காக சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் இரு பிரதிநிதிகளும் ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் இந்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த புதிய யாப்பு நிறைவேற்றப்பட்டதையடுத்து விளையாட்டுத்துறை அமைச்சரின் விசேட அனுமதியைப் பெற்று 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதியன்று நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேர்தலையொட்டி ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதிகள் இருவர் மற்றும நிர்வாக அதிகாரி ஒருவர் உள்ளிட்ட சுயாதீன தேர்தல் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# ரஷ்யாவில் போருக்கு எதிரான பேரணிகளில் 1,300 பேர் கைது




உக்ரைன் போருக்காக ஆயிரக் கணக்கான மேலதிக துருப்புகளை அணிதிரட்டும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் உத்தரவுக்கு எதிராக ரஷ்யாவில் இடம்பெற்ற பேரணிகளில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 1,300க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் செயின் பீட்டர்ஸ்பேர்க் மற்றும் மொஸ்கோவில் பெரும் எண்ணிக்கையானோர் கைதாகி இருப்பதாகவும் ரஷ்ய மனித உரிமைகள் குழுவான ஓ.வி.டி–இன்போ தெரிவித்துள்ளது. மொஸ்கோவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில், "போர் வேண்டாம்" என்று மக்கள் கோசம் எழுப்பியதோடு செயின் பீட்டர்ஸ்பேர்க்கில் அணிதிரட்டலுக்கு எதிராக குரலெழுப்பினர்.

இராணுவம் மற்றும் போரை விமர்சிப்பதற்கு எதிராக ரஷ்யாவில் கடும் சட்டங்கள் இருந்தபோதும் 38 நகரங்களில் கடந்த புதன்கிழமை (21) இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

அனுமதியற்ற ஒன்றுகூடல்களுக்கான முயற்சிகள் முறியடிக்கப்பட்டதாக ரஷ்ய உள்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# லெபனான் வங்கிகள் காலவரையின்றி பூட்டு




போதிய பாதுகாப்பு இல்லாததன் காரணமாக லெபனான் வங்கிகள் தொடர்ந்து காலவரையின்றி மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் தமது முடக்கப்பட்ட வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை பெறுவதற்கு வங்கிகளை முற்றுகையிட்ட சம்பவங்களைத் தொடர்ந்தே லெபனான் வங்கிகளின் சம்மேளனம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

வங்கி ஊழியர்கள் தொடர்ந்து அச்சுறுத்தலை எதிர்கொள்வதாக அந்த சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

தனது குடும்ப மருத்துவச் செலவுக்காக வங்கியில் உள்ள தனது பணத்தை பெற கடந்த வாரம் பெண் ஒருவர் விளையாட்டுத் துப்பாக்கியைக் கொண்டு வங்கி ஊழியர்களை மிரட்டி இருந்தார். தொடர்ந்து இதனைப்போன்ற ஐந்து சம்பவங்கள் பல வங்கிகளில் இடம்பெற்றன.

பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கும் லெபனானின் மக்கள் தொகையில் 80 வீதத்துக்கும் அதிகமானவர்கள் உணவு மற்றும் மருந்துகளை பெறுவதற்கு போராடி வருகின்றனர்.

# அமெ. வட்டி வீதம் மேலும் அதிகரிப்பு



உலகின் மிகப் பெரிய பொருளாதாரமான அமெரிக்கா விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த போராடி வரும் நிலையில் அந்நாட்டு மத்திய வங்கி கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வட்டி வீதத்தை அதிகரித்துள்ளது.

தனது முக்கிய வட்டி வீதத்தை மேலும் 0.75 வீத புள்ளிகளால் உயர்த்தி இருப்பதாக மத்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. இதன்மூலம் இலக்கு வரம்பு 3 வீதத்தில் இருந்து 3.25 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதனால் கடன் பெறும் செலவுகள் மேலும் அதிகரிக்கும் என்று வங்கி குறிப்பிட்டுள்ளது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் செலவு கடுமையான பொருளாதாரச் சரிவை ஏற்படுத்தும் என்ற கவலைக்கு மத்தியிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வட்டி வீதத்தை அதிகரித்ததைத் தொடர்ந்து, பங்குச் சந்தை வீழ்ச்சிகண்டது. எண்ணெய் விலைகள் சுமார் ஒரு வீதம் குறைந்தன.

பணவீக்கம் காரணமாக உலகில் கிட்டத்தட்ட அனைத்து நாடுகளின் வங்கிகளும் தனது வட்டி வீதத்தை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் 'ஹிஜாப்' ஆர்ப்பாட்டங்கள் தீவிரம்: பலி ஒன்பதாக அதிகரிப்பு



ஈரானின் கண்டிப்பான ஹிஜாப் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து வெடித்த ஆர்ப்பாட்டங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரித்துள்ளது.

இதில் பாதுகாப்பு படையினர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது சூடு நடத்தியதில் 16 வயது சிறுவன் ஒருவனும் கொல்லப்பட்டுள்ளான். தலைநகர் டெஹ்ரான் உட்பட 20 பிரதான நகரங்களுக்கு இந்த பதற்ற சூழல் பரவியுள்ளது.

இதில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பெண்கள் தமது ஹிஜாப் துணியை தீயிட்டு கொளுத்தும் காட்சிகள் சமூக ஊடகங்களில் பரவியுள்ளன.

22 வயதான மஹ்ஷா அமீன் என்ற பெண் ஹிஜாப் அணியாத குற்றத்திற்காக அறநெறிப் பொலிஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். தாக்கப்பட்டதாக கூறப்படுவதை பொலிஸார் மறுத்து வருகின்றனர்.

# எய்ட்ஸ், காசநோய், மலேரியாவுக்கு எதிராக 14 பில். டொலர் சேகரிப்பு



எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவுக்கு எதிரான போராட்டத்துக்காக சர்வதேச நிதியத்துக்கு தீர்க்கமான 14.25 பில்லியன் டொலர் நிதி அளிக்க உலகத் தலைவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக இந்த நோய்களை ஒழிப்பதற்கான நிதியில் தடங்கல் ஏற்பட்டிருந்தது. ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்திற்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனினால் நியுயோர்க்கில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட மாநாட்டிலேயே இந்த நிதி சேகரிக்கப்பட்டுள்ளது.

பலதரப்பு சுகாதார அமைப்பு ஒன்றுக்காக உறுதி அளிக்கப்பட்ட அதிக தொகையாக இது பதிவானது.

"இந்த முதலீடு அடுத்த நான்கு ஆண்டுகளில் இந்த நோய்களினால் உயிரிழப்பவர்களை 64 வீதம் குறைப்பதோடு மேலும் 20 மில்லியன் உயிர்களை பாதுகாக்கும்" என்று பைடன் தெரிவித்தார். இந்த நிதியத்திற்கு அமெரிக்கா 6 பில்லியன் டொலரை வழங்குவதாக உறுதியளித்துள்ளது. எய்ட்ஸ், காசநோய், மலேரியா நோய்களுக்கு எதிரான சர்வதேச நிதியம் 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட அடிப்படை வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

## டயர், டியுப் மற்றும் உராய்வுப் பதார்த்தங்களைக் கொள்வனவு செய்தல்

**கேள்வி இலக்கம்:- PRDA/WP/PRO/2022/29**

இவ் அதிகார சபையின் கனரக வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்களிற்குத் தேவையான டயர்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக, இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| S/ No. | Machine type | Tyre Size | Ply Rate | Tyre Qty | Tube Qty | Flaps Qty | Bid Bond | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Cash (Rs.) | Bank/ Insurance Bond |
| 1. | Asphalt Paver | 825x20 | Lug 14 PR | 04 | - | - | | |
| 2. | Bituman/Water Bouser | 1100x20 | Lug 18 PR | 04 | 06 | - | | |
| 3. | Low Bed Trailer | 1,000x15 | 18 PR | 02 | 02 | 04 | | |
| 4. | Prime Mover | 1,200x20 | 18 PR | 02 | - | - | | |
| 5. | Backhoe Loader/Skid | 19.5x24 | 12 PR | 06 | 06 | - | | |
| 6. | Backhoe Loader/Skid Steer Loader | 12x16.5 | Lug 12 PR | 06 | 04 (Long Valve) | 04 (Short Valve) | | |
| 7. | Motor Grader/Wheel Loader | 17.5x25 | Lug 12 PR | 04 | 04 | - | | |
| 8. | Tipper/Crane Truck | 1,000x20 | 18 PR | 04 (Rib) 06 (Lug) | 06 | - | 25,000.00 | 50,000.00 |
| 9. | Tipper/other | 20" | - | - | - | 10 | | |
| 10. | Crane Truck Tyre | 900x20 | 16 PR | 04 | 04 | 04 | | |

| S/ No. | Product | Required Qts | Units |
|---|---|---|---|
| 1. | Engine Oil 15W 40 | 4 | drums |
| 2. | Hydraulic Oil SAE 10 | 1 | drums |
| 3. | Hydraulic Oil HD 68 | 6 | drums |
| 4. | Grease 15/16 Kg | 15 | Bucket |

02. 2022.09.23 முதல் 2022.10.10 வரையான தினங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 1,150.00 ஐ (அதிகார சபையில் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்ந்த) செலுத்தி, இவ் அதிகார சபையின் பெறுகைப்பிரிவில் இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையத்தை காசாக பெறுகைப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் மேற்படி பெறுமானத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. மேற்படி பெறுகைகளிற்குத் தகைமை பெறுவதற்கு கேள்விதாரர், 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும், பதிவுச் சான்றிதழ் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் திறத்தல் 2022.10.11 அன்று பி.ப. 2.30 இற்கு இவ் அலுவலகத்தில் மேற் கொள்ளப்படுவதுடன், அவ் வேளையில் கேள்வி தாரர் அல்லது அவரின் அதிகாரம் அளிக்கப்பெற்றுள்ள பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12**

**தொலைபேசி இல: 011-5676903**

## கல்கமுவ பிரதேச சபை - 2023 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டிற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்துக் கொள்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட தயாரிப்பாளர், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடத்தில் விண்ணப்பப் படிவம் கோரப்படுகின்றது.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் 2022.12.31 ஆந் திகதிக்கு முன் "தலைவர், கல்கமுவ பிரதேச சபை, கல்கமுவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து பொறுப்படைக்கலாம். விண்ணப்பப்படிவம் இடப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023 ஆம் ஆண்டிற்கு வழங்குநர்களை பதிவு செய்தல்" என்று குறிப்பிடப்பட வேண்டும். குறித்த திகதிக்கு பின்பு கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**பொருட்கள் / மூலப்பொருட்கள்**

01. எல்லா அலுவலக எழுது கருவிகள் (பேனை, பென்சில், கடதாசி வகைகள், பைல், கால்குலேடர் உற்பட ஏனையவைகள்)
02. கணனி இயந்திரம்.
03. கணனி உதிரிப்பாகங்கள். (பிரின்டர், யூ.பி.எஸ்., டோனர், ரிபன் என்பன)
04. போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் போட்டோ பிரதி இயந்திரத்திற்கான மேலதிக உதிரிப்பாகங்கள்.
05. வீதி வெளிச்சத்திற்க்கு தேவையான வீதி விளக்கு உற்பட எல்லா மின்சார உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள்.
06. எல்லா வாகனங்களுக்காகவும் டயர், டியுப், பட்டரி என்பன.
07. வாகன மேலதிக உதிரிப்பாகங்கள் (மோட்டார் கிரேட்டர், JCB இயந்திரம், Bobcat வாகனம், கெப் வாகனம், டிரக்டர். (முச்சக்கர வண்டி, டிரம் டிரக்)
08. ஹாட்வெயார் பொருட்கள். (சீமெந்து, மண் வெட்டி, சவல் என்பன)
09. ஆரோக்கியம் மற்றும் சுகாதார பொருட்கள் (சவர்க்காரம், விம், டைல் கிளீனர், கிருமிநாசினி பொருட்கள் போன்றன).
10. அலுவலக வீட்டு உபகரணம் வழங்குதல். (மரம் / இரும்பு நாற்காலி, மேசை என்பன)
11. கைத்தொழில் பொருட்கள் (கருங்கல், சிப்ஸ் கல், கல் தூள், மணல், மண், திரிவானா கெரவல் (பொரலு), ABC கலவைகள் என்பன)
12. சீமெந்தியிலான தயாரிப்புக்கள் (ஹியும் குளாய்கள், அச்சுக் கல், பூச்சாடி என்பன)
13. முன் கலவை கொன்கிறீட்.
14. தார்
15. பலகை
16. பண்டிகை பொருட்கள். (கெனபி, தகடு ஹட், மேடை, மூடுகை என்பன)
17. சங்கீத பொருட்கள், முன் பள்ளி உபகரணங்கள் மற்றும் விளையாட்டு பொருட்கள்.
18. பிளாஸ்டிக் குப்பை கொள்கலன், பிளாஸ்டிக் நீர் தாங்கி, சேதனப்பசளை கலன், குளாய் மற்றும் நீர் குளாய் உதிரிப்பாகங்கள் என்பன.
19. நூலகப் புத்தகங்கள், சஞ்சிகை மற்றும் பத்திரிகை.
20. எரிவாயு சிலிண்டர்.
21. தாவரங்களின் வகைகள். (பூக் கன்று வகைகள் மற்றும் ஏனைய கன்று வகைகள்)

**சேவைகள்**

01. அச்சக நடவடிக்கை (ஆவணங்களை ஒழுங்கமைத்தல், துண்டு பிரசுரம், சான்று பத்திரங்கள், பில் என்பன)
02. பெயர் பலகை, பதாகை என்பன மற்றும் ஒழுங்கமைத்தல்.
03. அலுவலக அதிகாரபூர்வ அடையாள அட்டை ஒழுங்கமைத்தல்.
04. பதவி முத்திரை ஒழுங்கமைத்தல்.
05. அலுவலக உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவை செய்தல். (போட்டோ பிரதி இயந்திரங்கள், விரல் அடையாள இயந்திரம் என்பன)
06. கணனி இயந்திரம் மற்றும் கணனி உதிரிப்பாகங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவை செய்தல்.
07. வாகன பழுதுபார்ப்பு மற்றும் சேவைகள் செய்தல். (மோட்டர் கிரேட்டர், டிரம் டிரக், JCB இயந்திரம், கெப் வாகனம், லொரி, முச்சக்கர வண்டி, டிரக்டர் என்பன). 08. தகன கூடத்தை பழுதுபார்க்கும் நடவடிக்கை.
09. நில அளவைச் சேவை.
10. பழைய பத்திரிகை, வெற்று போத்தல், பழைய இரும்பு, எரியாத டியுப் பல்ப் மற்றும் CFL பல்ப் என்பவற்றை விலைக்கு எடுத்தல்.
11. குளிர்பதனாக்கி அமைப்பை பழுதுபார்த்தல்.
12. நீர் குளாய் அமைப்பு / நீர் பில்டர் பழுதுபார்ப்பு.
13. ரூ.2,000,000/= பெறுமதிக்கு மேற்பட்ட சிவில் பொறியியல் செயற்திட்டத்திற்காக ஆலோசனை சேவை வழங்குதல்
14. ரூ.2,000,000/= மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட பொருட்கள் / மூலப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக ஒரு விடயத்திற்கு பதிவுக் கட்டணம் ரூ.1000/- என்பதுடன், ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்காக ரூ. 5000/- கட்டணம் அறவிடப்படும்.

### கல்கமுவ பிரதேச சபை - 2023 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களை மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்யும் மாதிரிப் படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :- ..........................................
2. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி :- ..........................................
3. வியாபாரத்தின் தன்மை :- ..........................................
4. வியாபாரம் / ICTAD பதிவு இலக்கம் மற்றும் திகதி (பிரதி ஒன்றினை இணைக்கவும்) :- ..........................................
5. பதிவு செய்துக் கொள்வதற்கு எதிர்பார்கின்ற உருப்படியின் இலக்கம் :- ..........................................
6. பதிவு செய்துக் கொள்வதற்கு எதிர்பார்கின்ற உருப்படிகள் :- ..........................................
7. தொலைபேசி இலக்கம் :- ............................ அலுவலகம் :- ................................ கையடக்க :- ..........................................
8. பெக்ஸ் இலக்கம் :- ..........................................
9. வெட் வரி பதிவு இலக்கம் :- ..........................................
10. இலக்கம் ................................ கான ரூ ................................ பெறுமதி உடைய காசோலை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிப்பாளர் / வழங்குநர் / ஒப்பந்தக்காரர் ஒருவராக பதிவு செய்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

........................................ ..........................................
திகதி விண்ணப்பதாரியின் / முகாமையாளரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

**பொது விதிமுறைகள்**

01. விண்ணப்பப் படிவத்துடன் வியாபார பெயர் பதிவு செய்யப்பட்டதற்கான ஒரு பிரதி மற்றும் வெட் பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்றினையும் இணைத்து அனுப்ப வேண்டும்.
02. கல்கமுவ பிரதேச சபை அலுவலகத்திற்கு வருகைத் தந்து செலுத்த இயலுமானதுடன், தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் "செயலாளர். கல்கமுவ பிரதேச சபை" என்ற பெயருக்கு எழுதிய காசோலையினை மாத்திரம் செலுத்த வேண்டும். தபால் கட்டளை பொறுப்பேற்கப்படமாட்டாது.
03. எல்லா வழங்கல்களுக்காகவும் 30 நாள் கால எல்லைக்கு சபைக்கு கடன் வசதி வழங்க வேண்டும்.

இது பற்றி மேலதிக விபரம் கல்கமுவ பிரதேச சபையின் தொலைபேசி இலக்கம் 037-2254081 மூலம் கடமை நேரத்தினுள் அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**எச். கே. விமலசேன,**
**தலைவர்,**
**பிரதேச சபை - கல்கமுவ.**

## உலர்ந்த மற்றும் பச்சையான மருந்துகளை கொள்வனவு செய்தல் – 2022 நான்காம் காலாண்டு மற்றும் வழங்கல்கள் மற்றும் சேவைகள் – 2023

## மாகாண ஆயுர்வேத திணைக்களம்

**சுகாதார, சுதேச மருத்துவ, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு**

**மத்திய மாகாண சபை**

மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைச் சபையின் தலைவரால் மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு 2022ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்கான மருத்துவ உற்பத்திகளுக்கு தேவையான உலர்ந்த மற்றும் பச்சையான மருந்துகளை கொள்வனவு செய்தல் மற்றும் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலை மற்றும் மாகாண ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியகத்திற்கு 2023ஆம் ஆண்டிற்கு கீழ்க்காணும் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் சார்பாக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | வழங்கல்கள்/ சேவைகள் | நிறுவனம் | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணையின் பெறுமதி | | சொத்துச் சான்றிதழ் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| | | | | காசாக (ரூபா) | பிணை (ரூபா) | |
| 01 | உலர்ந்த மற்றும் பச்சையான மருந்துகள் வழங்குதல் | மாகாண ஆயுர்வேத மருந்துகல் உற்பத்தியகம் - பல்லேகெலே குண்டசாலை | 2,000/- | கேள்விப் பெறுமதியில் 1% | கேள்விப் பெறுமதியில் 2% | தேவை இல்லை |
| 02 | விடுதி நோயாளர்களுக்கான சமைத்த உணவு வழங்குதல் | 1. மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை பல்லேகெலே குண்டசாலை<br>2. ஆயுர்வேத தள வைத்தியசாலை - தொழுவ<br>3. ஆயுர்வேத தள வைத்தியசாலை - கொத்மலே<br>4. டி.பீ. தென்னக்கோன் ஞாபகார்த்த ஆயுர்வேத தள வைத்தியசாலை மற்றும் கல்வி நிலையம் மாத்தளை வடக்கு கவுடுபெலல்ல<br>5. எஸ்.பீ. வேரபிடிய ஞாபகார்த்த ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - பன்வில<br>6. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - கெலிஓய<br>7. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - ஹந்தகனாவ<br>8. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - தென்ன<br>9. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - நில்தண்டாஹின்ன | 1,000/- | 10,000/- | 20,000/- | 100,000/- |
| 03 | அழுக்குத் துணிகள் சலவை செய்தல் | 1. ஆயுர்வேத தள வைத்தியசாலை - கொத்மலே<br>2. டி.பீ. தென்னக்கோன் ஞாபகார்த்த ஆயுர்வேத தள வைத்தியசாலை மற்றும் கல்வி நிலையம் மாத்தளை வடக்கு கவுடுபெலல்ல<br>3. எஸ்.பீ. வேரபிட்டிய ஞாபகார்த்த ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - பன்வில<br>4. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - கெலிஓய<br>5. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - ஹந்தகனாவ<br>6. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - தென்ன<br>7. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - நில்தண்டாஹின்ன | 500/- | 1,000/- | 2,000/- | தேவை இல்லை |
| 04 | உலர்ந்த விறகு வழங்குதல் | 1. மாகாண ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியகம் பல்லேகெலே குண்டசாலை<br>2. ஆயுர்வேத தள வைத்தியசாலை - தொழுவ<br>3. ஆயுர்வேத தள வைத்தியசாலை - கொத்மலே<br>4. டி.பீ. தென்னக்கோன் ஞாபகார்த்த ஆயுர்வேத தள வைத்தியசாலை மற்றும் கல்வி நிலையம் மாத்தளை வடக்கு கவுடுபெலல்ல<br>5. எஸ்.பீ. வேரபிட்டிய ஞாபகார்த்த ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - பன்வில<br>6. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - கெலிஓய<br>7. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - ஹந்தகனாவ<br>8. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - தென்ன<br>9. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - நில்தண்டாஹின்ன | 1,000/- | 2,500/- | 5,000/- | 10,000/- |
| 05 | உணவகம் குத்தகைக்கு விடல் | மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை - பல்லேகெலே, குண்டசாலை | 500/- | 2,000/- | 4,000/- | தேவை இல்லை |
| 06 | போசணை நிலையம் (உணவகம்) குத்தகைக்கு விடல் | எஸ்.பீ. வேரபிட்டிய ஞாபகார்த்த ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை - பன்வில | 500/- | 1,000/- | 2,000/- | தேவை இல்லை |

02. கேள்வி ஆவணங்களை 2022.09.23 முதல் 2022.10.11 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் நிதி உதவியாளரிடம் காசாக செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை சமர்ப்பிக்கும் போது திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்களை மாத்திரம் பாவித்தல் வேண்டும். அவ்வாறல்லாத போது கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள் கேள்வி ஆவணங்களுடன் விநியோகிக்கப்படும்.

03. கேள்விப் பிணை மேற்படி அட்டவணையில் குறிப்பிடுமாறு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து மத்திய மாகாண ஆயுர்வேத ஆணையாளரிடம் விநியோகிக்கப்பட்ட 2022.12.31ம் திகதி வரை செல்லுபடியான கேள்விப் பிணையொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் குறித்த பிணையை காசாக செலுத்துவதாயின் மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் நிதி உதவியாளரிடம் இலங்கையில் செல்லுபடியான காசில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை கேள்விப் பிணையொன்றாக சமர்ப்பித்தல் வேண்டும்

04. மேற்படி பிணை வைப்பிற்கு மேலதிகமாக அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கல்கள் மற்றும் சேவைக்காக கேள்விகளை சமர்ப்பிக்கும்போது கேள்விதாரர்கள் குடியிறுக்கும் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்படும் பெறுமதி சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட மூலப் பிரதியொன்றை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. உலர்ந்த மற்றும் பச்சையான மருந்துகளுக்கான விலைமனுக்களை சமர்ப்பிக்கும் கேள்விதாரர்கள் ஒவ்வொரு மருந்துக்கும் மாதிரியை வேறுவேறாக பொதியொன்றில் சுற்றி பொறியிட்டு 2022.10.12ம் திகதி மு.ப. 8.30 முதல் மு.ப. 10.00 வரை மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு பட்டியலொன்றுடன் ஒப்படைத்து சரியான சாம்பிளை ஒப்படைத்ததாக உறுதியொன்றை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. சகல கேள்விப் பத்திரங்களையும் இரு பிரதிகளுடன் தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிதியை வேறுவேறாக உறைகளில் இட்டு பெயரிட்டு, பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விகளை சமர்ப்பிப்பதுடன் சம்பந்தப்பட்ட வழங்கலின் பெயர் மற்றும் நிறுவனத்தைக் குறிப்பிட்டு 2022.10.12 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன்பு குண்டசாலை, பல்லேகெலே முகவரியில் மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை திறத்தல் அன்றே மு.ப. 10.30 இற்கு இடம்பெறுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்து மூல அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

07. பெறுகை விடயங்கள் சம்பந்தமான சகல தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரம் பெறுகைக் குழுவிற்கு உரியது.

08. கேள்வி கோருவதுடன் சம்பந்தப்பட்ட பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2022.10.05 மு.ப. 10.30 இற்கு மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

09. கேள்வி பற்றிய மேலதிக விபரங்களை 081-2423144 தொ.பே. இலக்கம் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆவணங்களை திணைக்கள கணக்குப் பிரிவில் 2022.09.23 முதல் 2022.10.11 வரை வாரத்தன் வேலை நாட்களில் 12.00 - 13.00 மணி வரை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கப் பெறுகைக் குழு,**
**மாகாண ஆயுர்வேத திணைக்களம்,**
**பல்லேகெலே, குண்டசாலை,**
**2022.09.23**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஏல விற்பனை அறிவித்தல்

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

1) கடன் தொடர்பு இலக்கங்கள்: 3768398, 80586773, 80442114, 75384724, 75839122

கல் அமுன, கிரிமெட்டிய, இல. 570, தங்கொல்ல அரிசி ஆலை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. வக்கம கெதர பொடிஅப்புஹாமி ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.08.23ஆம் திகதி 2138ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.08.08ஆம் திகதி வியாழக்கிழமை டெய்லி நியூஸ், தினகரன் மற்றும் தினமின ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2022.10.26ஆந் திகதி புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

வடமத்திய மாகாண பொலன்னறுவை மாவட்டம் லங்காபுர பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் சிங்ஹலபற்று மஹகிரிமெட்டியாவ கிராம உத்தயோகத்தர் பிரிவு இல. 150ல் கல்அமுன கிராமத்தில் அமைந்த ‘கொட இடம’ என அழைக்கும் காணி அளவையாளர் நாயகம் அதிகாரமளித்த F.C.P.Po.126ல் (வெளிக்களத்தாள் இல. 01) விபரித்த துண்டு இல. 128 என அடையாளமிட்ட காணித்துண்டு **வடக்கில்** துண்டு இல. 127ம், **கிழக்கில்** துண்டு இல. 129ம், **தெற்கில்** துண்டு இல. 158ம், **மேற்கில்** துண்டு இல. 16ம் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் நான்கு பேர்ச்சுகள் (ஏ01.றூ01.பே.4) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது பொலன்னறுவை மாவட்ட காணிப்பதிகத்தில் LDO/C/10/148ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் W.A. பிரேமரத்ன தயாரித்த 25.02.2011 திகதியிட்ட அண்மைய வரைபடம் இல. 11/11ன் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கல்அமுன கிராமத்தில் அமைந்த ‘கொட இடம’ என அழைக்கும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் W.A. பிரேமரத்ன தயாரித்த 25.02.2011 திகதியிட்ட வரைபடம் இல. 11/11ல் விபரித்த துண்டு இல. 1 என அடையாளமிட்ட காணித்துண்டு **வடக்கில்** F.C.P.126ல் துண்டு இல. 127ம் **கிழக்கில்** F.C.P. 126ல் துண்டு இல. 129ம், **தெற்கில்** F.C.P.126ல் துண்டு இல. 158ம், **மேற்கில்** F.C.P.126ல் துண்டு இல. 16ம் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் நான்கு பேர்ச்சுகள் (ஏ01.றூ.01பே.4) அல்லது ஹெக்டயர்கள் பூச்சியம் தசம் நான்கு ஒன்று நான்கு எட்டு (ஹெக்டெயர்கள் 0.4148) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

**ஒதுக்கங்கள்:**

1. இக்காணியில் காணப்படும் அல்லது அதன் மேலான (இவ் வழங்கலின் விதிக்கமைய பெறுமதியான கற்கள் உட்பட) சகல கனிப்பொருள்களதும் உரிமையுடன் கனிப்பொருளை அகழ்வதற்கு, தேடுவதற்கு வேலைசெய்வதற்கு எடுத்துச் செல்வதற்கு உரிமை அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
2. உரிமையாளர்கள் பாதைக்கு வைத்திருக்கும் எந்தவொரு உரிமையும் மற்றும் இவ்வழங்கல் திகதியில் நடைமுறையில் வைத்திருக்கும் ஏனைய உழைப்புகளும் ஆகும்.

**நிபந்தனைகள்**

1. இங்கு குறிப்பிட்ட உப பிரிவின் அலகை விட விஸ்தீரணத்தில் குறிப்பாக 1/4 ஏக்கர் மேட்டு நிலமும் வயல் நிலத்தில் ஏக்கர்கள் ஹெக்டெயர்களுக்கு குறைந்த பிரிக்கப்பட்டதொரு பாகத்தை உரிமையாளர் விற்கலாகாது.
2. இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக்குறைந்த பங்கை விட வைத்திருப்பவையின் பிரிக்கப்படாத பங்கை உரிமையாளர் விற்கலாகாது.
3. எந்தவொரு நபரும் இங்கு 01ஆவது நிபந்தனையில் குறிப்பிட்ட உப பிரிவின் அலகை விட விஸ்தீரணத்தில் குறைவான பிரிக்கப்பட்டதொரு பாகத்துக்கு உரிமையாளராக முடியாது.
4. எந்தவொரு நபரும் இங்கு 02ஆவது நிபந்தனையில் குறிப்பிட்ட ஆகக்குறைந்த பங்கை விட குறைவாக வைத்திருப்பவைகளின் பிரிக்கப்படாத பங்கின் உரிமையாளராக முடியாது.
5. இதன் பின்பு காணித்துண்டுக்கு அல்லது அதன் எந்தவொரு பகுதிக்கும் நீர்ப்பாசன வசதி அளிக்க முடியுமாயின் அல்லது தற்போது நிர்மாணித்துள்ள நீர்ப்பாசன நிர்மாண வேலையின்போது அல்லது எதிர்காலத்தில் நீர்ப்பாசன வேலைகள் மேற்கொள்ள இருப்பின் உரிமையாளர் அந்த நீர்ப்பாசன வசதிகளை வழங்கக்கூடிய பிரதேசங்கள் சம்பந்தமாக நீர்ப்பாசன கட்டளைச்சட்டத்தின் (453ஆம் அத்தியாயம்) முன்னேற்பாடுகள் மற்றும் அதன் கீழான சட்டதிட்டங்களுக்கும் இணங்க வேண்டும்.
6. உரிமையாளர் அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்தில் அனுமதி பெற்றிராவிடின் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரசபையிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றிராவிடின் இக்காணியில் அல்லது அதன் மேல் காணப்படும் எந்தவொரு கனிப்பொருள்களையும் தோண்டவோ, தேடவோ, எடுக்கவோ, பிரயோகிக்கவோ, விற்கவோ, அகற்றவோ முடியாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதி இன்றி இதன் எந்தவொரு பாகத்தையோ அல்லது வைத்திருப்பவையையோ வெளியே வழங்க முடியாது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**திரு. S.M.C.T. அம்பத்தலே**
**முகாமையாளர்.**

**இலங்கை வங்கி**
**ஹிங்குரக்கொட**

**திகதி: 05.09.2022**

---

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஏலவிற்பனை அறிவித்தல்

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்**

**வசதி தொடர்பு இலக்கங்கள்: 75955974, 77696837, 80562485**

**இல. 31, யோதஎல, ஹிங்குரக்கொட, என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. கங்கானம்லாகே அப்புஹாமி ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2019.10.18ஆம் திகதி 2146ஆம் இலக்கச் வர்த்தமானியிலும் 2019.10.07ஆம் திகதி வியாழக்கிழமை டெய்லி நியூஸ், தினகரன் மற்றும் தினமின ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26ன் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவ என்னம் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 26.10.2019ஆம் திகதி புதன் கிழமை பி.ப. 3.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

வடமத்திய மாகாணம் பொலன்னறுவ மாவட்டம் மெதிரிகிரிய (தற்சமயம் ஹிங்குரக்கொட) பிரதேச செயலாளர் பிரிவில் சிங்கள பற்றுவவில் திவுலங்கடவல கிராம உத்தியோகத்தர் பிரிவு இல.68Aல் திவுலங்கடவல கிராமத்தில் அமைந்த **“உல்கொல பொத்த மூகலான”** என அழைக்கும் காணி அளவையாளர் நாயகம் அதிகாரமளித்த F.C.P.Po136ல் விபரித்த துண்டு இல.206 என அடையாளமிட்ட காணித்துண்டு **வடக்கில்** துண்டு இல. 201ம், **கிழக்கில்** துண்டு இல.205 2/2ம், **தெற்கில்** துண்டு இல.205 2/2ம், **மேற்கில்** துண்டு இல.205 2/2ம் எல்லைகளாகக் கொண்டு **இரண்டு ஏக்கர் ஒரு றூட் நான்கு பேர்ச்சுகள்** (ஏ02.றூ01.பே04) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் அகும். இது **பொலன்னறுவை** மாவட்ட காணிப்பதிவகத்தில் **LDO/F/15/61ல்** பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் W.A.பிரேமரத்ன, தயாரித்த 23.02.2013 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.2013/39ன் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட திவுலங்கடவல கிராமத்தில் அமைந்த “உல்கொல பொத்த மூகலான” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் W.A.பிரேமரத்ன தயாரித்த 23.02.2013 திகதியிட்ட வரைபடம் இல.2013/39ல் விபரித்த **துண்டு 01** என அடையாளமிட்ட காணித்துண்டு **வடக்கில்** F.C.P.Po136ல் துண்டு இல. 201ம், **கிழக்கில்** F.C.P.Po136ல் துண்டு இல.205 2/2ம், **தெற்கில்** F.C.P.Po136ல் துண்டு இல.205 2/2ம், **மேற்கில்** F.C.P.Po136ல் துண்டு இல.205 2/2ம், எல்லைகளாகக் கொண்டு **இரண்டு ஏக்கர் ஒரு றூட் நான்கு பேர்ச்சுகள் (ஏ02.றூ01.பே04) அல்லது ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் ஒன்பது இரண்டு பூச்சியம் ஆறு (ஹெக்டெயர்கள் 0.9206)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

**ஒதுக்கங்கள்:**

1. இக்காணியில் அல்லது காணியின் மேல் காணப்படும் (இவ்வுரித்து மன்றத்தில் இச்சொல் பெறுமதியான கற்கபளை உள்ளடக்கும்) சகல கனிப்பொருட்களது உரிமையும் அக் கனிப்பொருளை அகழ்வதற்கான தேடுவதற்கான வேலை செய்வதற்கான எடுத்துச் செல்வதற்கான உரிமையும் அரசாங்கத்துக்கு உதுக்கப்பட்டுள்ளது.
2. இவ் ஆதன்தின்மீது உரிமையாளர்களுக்குள்ள உரித்தானது இவ்வுரித்து மற்றும் உறுதியின் திகதியில் இவ்வாதனத்தின் மீது தற்போது உள்ள வழி வாய்க்கால் உரிமைகளுக்கு உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்**

1. உரிமையாளர், 1/2 ஏக்கர்கள் மேட்டுநிலம் ..... ஹெக்ரயர்/ஏக்கர்கள் நீர்ப்பாசனக் காணி என இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உப பிரிவின் அலகைவிடக் குறைவான பரப்பளவுடைய பிரிக்கப்பட்டவொரு பாகத்தை கையுயர்த்தலாகாது.
2. உரிமையாளர், இங்கு 1/1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் ஆகக் குறைந்த அலகிலும் குறைவான பிரிக்கப்படாதவொரு பாகத்தை கையுயர்த்தலாகாது.
3. நிபந்தனை 01இல் குறிப்பிடப்பட்ட காணியின் உப பிரிவைவிடக் குறைவான பரப்பளவுடைய பிரிக்கப்பட்டவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.
4. நிபந்தனை 02இல் குறிப்பிட்ட காணியின் ஆகக் குறைந்த அலகிலும் குறைவான பிரிக்கப்படாதவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.
5. காணியோ அதன் எந்தவொரு பகுதியோ கட்டுமான காலத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட அல்லது இதன் பிறகு கட்டப்படவுள்ள நீர்ப்பாசன வசதி மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படக் கூடியதாக இருந்தால் அல்லது இதன் பிறகு நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடியதாக மாறினால் நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடிய பகுதி தொடர்பில் நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 453) கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் வரும் எந்தவொரு விதிக்கும் உரிமையாளர் இணங்க வேண்டும்.
6. அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்து மூல அனுமதியையும் உரிய அதிகார சபையிடமிருந்து உரிமம் ஒன்றையும் பெற்றுக் கொண்டாலே ஒழிய, காணியில் அல்லது காணியின்மேல் காணப்படும் கனிமங்களை உரிமையாளர் அகழவோ தேடவோ எடுக்கவோ உரிமை கொண்டாடவோ விற்கவோ வேறு விதத்தில் கையுதிர்க்கவோ கூடாது.
7. பிரதேச செயலரின் எழுத்து மூல முன் முன்மனுமதி இன்றி காணியே அதன் ஏதேனும் பாகமோ கையுதிர்க்கப்படலாகாது

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**திரு. S.M.C.T.அத்பத்லே**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**ஹிங்குரக்கொட**

**திகதி: 05.09.2022**

---

# விலைமனு அழைத்தல்

## சிற்றுண்டிச்சாலைகளைக் குத்தகைக்கு விடுதல் 2023

**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - வடமேல் மாகாணம்**

2023ஆம் ஆண்டில் குருநாகல் மற்றும் புத்தளம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும், தம்பதெனிய, நிக்கவரட்டிய, கல்கமுவ மற்றும் புத்தளம் ஆகிய ஆதார வைத்தியசாலைகளின் சிற்றுண்டிச்சாலைகளை 2023.01.01 முதல் 2023.12.31 வரையான காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காக 2022.10.14 அன்று மு.ப. 11.00 மணி வரை வட மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2022.10.13 வரை வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பின்வரும் முகவரியில் நேரில் சமுகமளித்து, வட மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து படிவக் கட்டணம் ரூபா 10,000/- ஐச் செலுத்தி இதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

02. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்

இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் ஒரு தபாலுறையில் உள்ளிட்டு அதன்இடது பக்க மேல் மூலையில் சேவையின் பெயர் மற்றும் வைத்தியசாலையின் பெயரைக் குறிப்பிட்டு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது இவ்வலுவலகப் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம்.

2022.10.14 அன்று மு.ப. 11.00 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாக மு.ப. 11.05 இற்கு அவை திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**குருநாகல்.**
**2022.09.20**

---

NSB

## தேசிய சேமிப்பு வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**தேசிய சேமிப்பு வங்கிக்கு காப்புறுதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

பின்வரும் காப்புறுதி காப்பீடுகளுக்காக தேசிய சேமிப்பு வங்கிக்கு காப்புறுதி சேவைகளை வழங்குவதற்காக காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்துகொண்டுள்ள காப்புறுதி சேவை வழங்குநர்களை அழைக்கின்றது.

- I. **Motor Vehicle Fleet**
- II. **Fire Insurance Policy – (Head Office, Branches & Stores)**
- III. **Electronic All Insurance Cover – (Head Office, Branches & Stores)**
- IV. **Bankers’ Indemnity Policy**
- V. **Cyber Liability Policy**
- VI. **Computer Crime Policy**
- VII. **Burglary Insurance Cover – (Branches)**
- VIII. **Public Liability**

1. 2022-09-23ஆம் திகதியிலிருந்து 2022-10-13ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் இயைபுடைய விபரங்கள் தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. விலைமனுக்களை 2022-10-14ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் வழங்கல் முகாமையாளர், வழங்கல் பிரிவு, தேசிய சேமிப்பு வங்கி, 255, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 13,000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
4. விலைமனுக்கள் 2022-10-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன் வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் (வழங்கல்) சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டு வர்த்தக பெறுகைக்குழு – மேல் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி, கொழும்பு-03.**

---

# ஆர்வத்தின் வெளிப்பாடு

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**

**பொது நிர்வாகம், உள்விவகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

## இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை

### தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கையை உருவாக்கல்

தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையின் சார்பாக திணைக்கள ஆலோசனைப் பெறுகைக் குழு இங்கே விபரிக்கப்பட்ட சேவைகளை வழங்குவதற்கான அவர்களுடைய ஆர்வத்தைக் குறிப்பிடுவதற்குத் தகுதிவாய்ந்த உள்ளூர் ஆலோசனையாளர்கள் அல்லது உள்ளூர் நிறுவனங்கள் (இதன் பின்னர் ஆலோசனையாளர்கள் எனக் குறிப்பிடப்படும்) அவர்களது ஆர்வத்தைப் பற்றிய விபரங்கள் NHRDC யின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள ஆலோசனையாளர்கள் அவர்கள் சேவையை வழங்குவதற்குத் தகுதியுடையவர்கள் என்பதை நிரூபிப்பதற்கான தகவல்களை (இது போன்ற செயற்றிட்டங்களை செய்திருப்பதற்கான அனுபவம், இவ்வாறான நிபந்தனைகளின் அனுபவம், அவசியமானதும் பொருத்தமானதுமான திறன்கள் இருப்பதற்கான சான்றுகள்) வழங்குதல் வேண்டும்.

தேசிய பெறுகை முகவர் நிலையத்தினால் வெளியிடப்பட்ட ஆலோசனையாளர்களின் தேர்வு மற்றும் தொழில்வழங்கல் வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு ஏற்பவே ஆலோசனையாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஆர்வமுள்ள ஆலோசனையாளர்கள் மேலதிக தகவல்களை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையின் இணையதளத்தில் (www.nhrdc.gov.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

ஆர்வமுள்ள வெளிப்படுத்தல்கள் 2022/10/14 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, கீழ்வரும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பபடுதல் அல்லது டென்டர் பெட்டியிலிடுதல் வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை**
**354/2, 7ஆம் மாடி, “நிபுணதா பியச”,**
**எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05.**

**தொலைபேசி : 0112-595680**

# பகிரங்க அறிவித்தல்
## நிறுவனத்தின் அந்தஸ்து மாற்றம்

கார்கோஸ்டார் லிமிட்டட்டின் அந்தஸ்து மாற்றம் குறித்து 2007இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் கீழ் இத்தால் நாம் அறிவித்தல் கொடுக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| முன்னைய கம்பனியின் பெயர் | : | கார்கோஸ்டார் லிமிட்டட் |
| கம்பனி இலக்கம் | : | PB 715 |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் | : | இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| **புதிய கம்பனியின் பெயர்** | : | **கார்கோஸ்டார் (பிறைவேட்) லிமிட்டட்** |

கார்கோஸ்டார் (பிறைவேட்) லிமிட்டட் சபையின் கட்டளைப்படி
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள்

2022 செப்டெம்பர் 23

# கேள்வி அறிவித்தல் – 2023
## புத்தளம் நகர சபை

2023ம் ஆண்டுக்கு புத்தளம் நகர சபையின் இறைச்சிக்கடை மற்றும் இதர சொத்துக்கள் உட்பட பத்தொன்பது (19) சொத்துக்களின் வியாபார உரிமைகளை குத்தகைக்கு வழங்கும் பொருட்டு புத்தளம் நகர சபையினால் கேள்விகள் வரவழைக்கப்படுகின்றன.

குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் புத்தள நகர சபையின் அறிவித்தல் பலகையிலும், நகரத்தில் உள்ள அரச அலுவலக அறிவித்தல் பலகையிலும், அனைத்து வட்டாரங்களில் உள்ள நகர சபை உறுப்பினர்களின் காரியாலயங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள் என்பவற்றை உரிய கொடுப்பனவுகளை செலுத்தி 2022.09.27ம் திகதி மு.ப. 8.30 முதல் 2022.10.14ம் திகதி பி.ப. 3.00 வரை புத்தள நகர சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்வி கட்டுப்பாடுகளுக்கமைவாக பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை 2022.10.17ம் திகதி மு.ப. 10.00க்கு முன்னர் 'கேள்விப் படிவம் 2023' என குறிப்பிட்டு 'தலைவர், நகர சபை' என முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கேள்விகளை நகர சபைக்கு நேரில் வந்து கையளிக்கவோ அல்லது வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடவோ முடியும்.

கேள்விகள் யாவும் 2022.10.17ம் திகதி மு.ப. 10.30க்கு திறக்கப்படும். கேள்விகள் தொடர்பாக கேள்விச் சபையால் மேற்கொள்ளும் தீர்மானம் இறுதியானதாகும்.

**எம்.எஸ்.எம். ரபீக்**
**தலைவர்,**
**புத்தளம் நகர சபை**
**2022.09.23**

# பெறுகை அறிவித்தல்
## இலங்கை புகையிரத சேவைகள்

**இலங்கை புகையிரத சேவைக்கு 200,000 எண்ணிக்கையான கல்வனைஸ்ட் இளாஸ்டிக் ரெயில் கிளிப்களின் (GALVANIZED ELASTIC RAIL CLIPS) பெறுகை**

**பெறுகை இல. SRS/F.7826**

01. இலங்கை, கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் தலைமை அலுவலகம், இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களப் பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர் நிலையான பாதைகளின் மீள சிலிப்பர் கட்டைகளை இடுதல் மற்றும் மீள் தண்டவாளமிடுதலுக்காக 200,000 எண்ணிக்கையான கல்வனைஸ்ட் இளாஸ்டிக் தண்டவாளக் கிளிப்புகளை வழங்குவதற்காக உள்நாட்டு/ வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர்கள் தங்களது விலைமனுக்களை நேரடியாக அல்லது அற்றோணித் தத்துவம் அளிக்கப்பட்டவர்களுமான அதிகாரமளிக்கப்பட்ட இலங்கையில் பதிவு செய்யப்பட்ட முகவர்களின் ஊடாகச் சமர்ப்பிக்கலாம்.
02. 2022-11-09ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுறும்.
03. 15,500.00 ரூபா மட்டும் அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான வெளிநாட்டு நாணயத்தை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் 2022-11-08ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையில் (இலங்கை நேரம்) இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியதான ஆங்கில மொழியிலான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. விலைமனுக்களுடன் 700,000.00 ரூபா ஏழு இலட்சம் இலங்கை ரூபா அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான வெளிநாட்டு நாணயத்தை அவர்களின் விலைக்கோரலின் ஒரு பகுதியாக விலைக்கோரல் பிணை முறியொன்றாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இலங்கை, கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகளின் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் வைத்து, விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்த உடனடியாகவே அவை திறக்கப்படும். விலைகூறுநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ கீழ்க் குறிப்பிடப்பட்டவருக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும்.

    **தலைவர்,**
    **திணைக்கள பெறுகைக் குழு, (உயர் மட்டம்),**
    **இலங்கை புகையிரத சேவைகள்,**
    **பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகம்,**
    **த.பெ. இல. 1347,**
    **ஒல்கொட் மாவத்தை,**
    **கொழும்பு-10.**

07. விலைமனு ஆவணங்களை இலங்கை, கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின் தயவு செய்து தொடர்புகொள்ளவும்:

    **பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),**
    **பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகம்,**
    **த.பெ. இல. 1347,**
    **ஒல்கொட் மாவத்தை,**
    **கொழும்பு-10.**
    **இலங்கை.**

    தொலைபேசி: 94 (11) 2438078 அல்லது 94 (11) 2436818
    தொலைநகல்: 94 (11) 2432044

Ref. No. SRS/F.7826

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்)**
**இலங்கை புகையிரத சேவைகள்.**




# இலங்கை சேமிப்பு வங்கியின் மன்னார் கிளையை இடமாற்றுவதற்காக வாடகை அடிப்படையில் அலுவலக இடப்பரப்பை பெற்றுக்கொள்ளல்

இலங்கை சேமிப்பு வங்கி மன்னார் கிளையை பொருத்தமான, பாதுகாப்பான மற்றும் வசதியான இடத்திற்கு இடமாற்றுவதற்காக கட்டிட உரிமையாளர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் அலுவலகக் கட்டிடம் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- **அமைவிடம்** : மன்னார் நகரம்
- **தரை பரப்பளவு** : தரை தளத்தில் 1,500 - 2,000 சதுர அடிகள்
- **கட்டிடம்** : மின் பிறப்பாக்கியை பொருத்துவதற்கான இடவசதி மற்றும் சிறந்த தோற்றத்துடன் பிரதான வீதியை அணுகும் பாதையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- **வசதிகள்** : மூன்று பேஸ் மின்சார இணைப்பு, நீர் வழங்கல், துப்புரவேற்பாட்டு வசதிகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய வசதிகள்.
- **வாகனத்தரிப்பிடம்** : குறைந்தபட்சம் 3 வாகனங்களுக்கான இடவசதி

எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை மற்றும் கட்டிடத்தின் திட்ட வரைபடம், நில அளவை வரைபடம் மற்றும் காணி உறுதியின் நகல் பிரதிகளுடன் உங்கள் விலைக்கோரல்களை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு 2022 ஒக்டோபர் 07ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மன்னார் கிளைக்கான அலுவலக இடப்பரப்பிற்கான விலைக்கோரல்'' என தயவு செய்து குறிப்பிடவும்.

**தலைவர் - திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை சேமிப்பு வங்கி,**
**இல. 265, வார்ட் பிளேஸ், கொழும்பு 07.**
**தொலைபேசி: 0112674700/1/2/3**
2022-09-23.

# மத்திய சுற்றாடல் அதிகாரசபை

## தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ உபபிரிவு (2) இன் கீழான அறிவித்தல்

## மாவனல்லையில் உத்தேச யதிமஹான நீர்த்தேக்கத் திட்டத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு. தா. ம) அறிக்கை

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினது 1988ம் ஆண்டின் 56ம் இலக்க மற்றும் 2000ஆம் ஆண்டின் 53ம் இலக்க சட்டங்களால் திருத்தி அமைக்கப்பட்டவாறு 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 வ(1)ற்கு அமைவாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மாவனல்லையில் (கேகாலை மாவட்டம்) உத்தேச யதிமஹான நீர்த்தேக்க கருத்திட்டத்துக்கான சுற்றாடல் தாக்கமதிப்பீட்டு (சு. தா. ம) அறிக்கையானது பின்வரும் இடங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணிவரை 30 நாட்களுக்கு பொதுமக்களின் பார்வைக்காக (ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொதுவிடுமுறை நாட்கள் தவிர) பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து வைக்கப்பட்டுள்ளது.

1. பிரதேச செயலகம், மாவனல்ல
2. பிரதேசசபை, மாவனல்ல
3. கேகாலை மாவட்ட அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இல. 55/7, அலபேரடசெனிவிரத்ன மாவத்தை, கேகாலை.
4. தேசிய சுற்றாடல் தகவல் மையம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, ''பரிசரபியச", 104, டென்சில்கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
5. இணையம்: www.cea.lk

பொதுமக்கள் எவரேனும் இவ்விளம்பர திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தமது கருத்துக்களை பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை,**
**''பரிசரபியச",**
**இல. 104,டென்சில்கெபேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

# வர்த்தக நாம எச்சரிக்கை அறிவித்தல்

பின்வரும் KRYPTON வர்த்தக நாமத்தின் உரிமையாளர் மற்றும் ஏக உரிமையாளராக ராஜகிரிய, நாவல வீதியிலுள்ள 312ஆம் இலக்கத்தின் அதன் முக்கிய வர்த்தக நிலையத்தைக் கொண்ட சென்ட்ரல் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டினால் (இலங்கையின் கம்பனிச் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனம்) இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**KRYPTON**

09ஆம் வகுப்பில் சுவர் சுவிட்சுகள், டிரிப் சுவிட்சுகள், M.C.B, R.C.C.B, சேர்கியுட் பிரேக்கர் பெட்டிகள், ஹோல்டர்கள், பிளக் டொப்கள், பிளக் பெட்டிகள் மற்றும் பிளக்குகள் மற்றும் அதுசார்ந்த துணைப்பொருட்கள் தொடர்பாகப் பயன்படுத்துவதற்கு.

சுவர் சுவிட்சுகள், டிரிப் சுவிட்சுகள், M.C.B, R.C.C.B, சேர்கியுட் பிரேக்கர் பெட்டிகள், ஹோல்டர்கள், பிளக் டொப்கள், பிளக் பெட்டிகள் மற்றும் பிளக்குகள் மற்றும் அதுசார்ந்த துணைப்பொருட்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட வர்த்தக நாமத்தைப் பதிவு செய்து பயன்படுத்துவதன் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட உரிமையாளர், கூறப்பட்டதைப் பயன்படுத்துவதற்கான பிரத்தியேக உரிமையைப் பெற்றுள்ளார். வர்த்தக நாமம் மற்றும் அது சார்ந்த அனைத்து உரிமைகளுக்கும் உரிமையுண்டு.

மேற்கூறிய வர்த்தக முத்திரையை யாரேனும் ஒருவர் அல்லது நபர்கள் சட்டவிரோதமாகப் பயன்படுத்தினால் மற்றும் / அல்லது பயன்படுத்துதல் மற்றும்/அல்லது பதிவுசெய்தல் மற்றும்/அல்லது சுவிட்சுகள் தொடர்பாக மேற்கண்ட வர்த்தக நாமம்(கள்) போன்ற அல்லது ஒத்த அடையாளத்தை பதிவு செய்ய முயற்சித்தால், டிரிப் சுவிட்சுகள், M.C.B, R.C.C.B, சேர்க்யூட் பிரேக்கர் பெட்டிகள், ஹோல்டர்கள், பிளக் டொப்கள், பிளக் பெட்டிகள் மற்றும் பிளக்குகள் மற்றும் தொடர்புடைய துணைப் பொருட்கள் மற்றும்/ அல்லது சந்தைப்படுத்தல், விற்பனை அல்லது விநியோகம் சுவிட்சுகள், டிரிப் சுவிட்சுகள், M.C.B, R.C.C.B, சேர்க்கியூட் பிரேக்கர் ப்ளக், டொப் ஹோல்டர்கள், பிளக் ஹோல்டர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தக நாமம்(கள்) போன்ற அல்லது ஒத்த அடையாளங்களின் கீழ் எந்தவொரு வடிவத்திலும் பிளக்குகள் மற்றும் தொடர்புடைய துணைப் பொருட்கள் என்பவற்றின் மூலம் பொதுமக்களை தவறாக வழிநடத்துவதன் மூலம் மேற்கூறிய வர்த்தக முத்திரைகள் மற்றும் மேற்கூறிய வர்த்தக முத்திரைகளுக்கு மேலே பெயரிடப்பட்ட உரிமையாளரின் உரிமைகளை மீறுகிறது.
கூறப்பட்ட வர்த்தக நாமங்களினால் அத்தகைய மீறல்களைத் தடுக்க மற்றும்/அல்லது நிறுத்துதல் மற்றும் சேதங்கள் மற்றும் பிற நிவாரணங்களை மீட்டெடுப்பதற்காக அத்தகைய நபர் அல்லது நபர்களுக்கு எதிராக உரிமையாளரான மேலே குறிப்பிடப்பட்டவர்களால் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எந்தவொரு விசாரணையும் அவர்களின் வர்த்தக நாம இலங்கை முகவருக்குத் தெரிவிக்கப்படல் வேண்டும்.

**தரங்க டி சில்வா,**
**சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு,**
**வர்த்தக நாமம் மற்றும் காப்புரிமை முகவர்,**
**இல. 12, எபென்சர் பிளேஸ்,**
**தெஹிவளை, இலங்கை.**
**தொலைபேசி: 94 1 4200445/ 94 777361857**
**தொலைநகல்: 94 1 2714618**
**மின்னஞ்சல்: tharanga.desilva@gmail.com**

# திவுலப்பிட்டிய பிரதேச சபை

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்துகொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் வகையிலான மாதிரிக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022-11-04ஆம் திகதி அல்லது அதற்கு ''செயலாளர், திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டிய'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கப்படலாம். விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**பொருட்கள் / பண்டங்கள் - வழங்குதல்**

01. அனைத்து வகையான அலுவலக காகிதாதிகள்
02. அச்சடிக்கப்பட்ட ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் ஏனைய அச்சு வேலைகள் (துண்டுப் பிரசுரங்கள், சான்றிதழ்கள் போன்றன)
03. பெயர்ப் பலகைகள், பதாகைகள், உத்தியோகபூர்வ முத்திரைகளைத் தயாரித்தல்
04. அலுவலக அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
05. ஞாபகச் சின்னங்கள், ஞாபகப் பெயர்ப் பலகைகளைத் தயாரித்தல்
06. கணனி இயந்திரங்கள், கணனி துணைப்பாகங்கள்
07. புகைப்படப் பிரதி இயந்திரங்கள், நகல் பிரதி இயந்திரங்கள், விரல் ரேகை பதிவு இயந்திரம் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்கள்
08. வீதிகளை வெளிச்சமாக்குவதற்குத் தேவையான வீதி விளக்குகள் மற்றும் மின் வழங்கல் துணைப்பாகங்கள்
09. சகல வாகனங்களுக்கும் தேவையான டயர், டியூப், பட்டறிகள் போன்றன
10. வாகன உதிரிப்பாகங்களை வழங்குதல் (மோட்டர் கிரேடர், JCB இயந்திரம், Bobcat இயந்திரம், கெப் வாகனம், டிராக்டர், முச்சக்கரவண்டிகள்)
11. கனரகப் பொருட்கள் (சீமெந்து, மண்வெட்டி, சவல் என்பன) மற்றும் நீர்க் குழாய் சார்ந்த பொருட்கள்
12. சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு பொருட்கள் (பொலிசெக் உறைகள் போன்றன)
13. கிருமி நாசினிகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்கள் (பைனோல், டெட்டோல், செசர்கோன், செசர்பிளை என்பன)
14. பாதுகாப்புக் கவசங்கள் (கம்பூட்ஸ், மழை அங்கிகள், முகக் கவசம் என்பன)
15. அலுவலக தளபாடங்கள் (உருக்கு / மரக் கதிரை, மேசைகள் போன்றன)
16. வீதிப் பராமரிப்புப் பொருட்கள் (கருங்கல், சிப்ஸ் கல், கற்தூள், கலவைகள், மணல், மண், கிரவல் ABC போன்றன)
17. சீமெந்து சார்ந்த உற்பத்திகள் (ஹியூம் குழாய்கள், புளொக் கற்கள், பூச்சாடிகள் போன்றன)
18. முன்கலவை கொங்கிறீட்
19. தார் / கொலாஸ்
20. கைத்தொழில்களுக்குத் தேவையான ரெஜிபோர்ம் மற்றும் இறப்பர் சீட்கள்
21. கைத்தொழில்களுக்குத் தேவையான பலகைகள் வழங்குதல்
22. சீருடைகள் மற்றும் துணிகள், டீ சேர்ட் மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினைகள்
23. இசைக் கருவிகள் மற்றும் முன்பள்ளி உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்
24. சபையின் உற்சவங்களுக்குத் தேவையான சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் மற்றும் குடிநீர் போத்தல்கள்
25. பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள், பிளாஸ்டிக் கதிரைகள், பிளாஸ்டிக் நீர்த் தாங்கிகள், கொம்போஸ்ட் தொட்டிகள் போன்றன
26. நூலகத்திற்கான புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள்

**சேவைகள் வழங்குதல்**

01. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் (புகைப்படப் பிரதி இயந்திரம், விரல் ரேகை பதிவு இயந்திரம் போன்றன)
02. கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள், அச்சுப்பொறிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
03. வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை வாடகைக்கமர்த்துதல் (பக்கோ இயந்திரம், பழுதடைந்த வாகனங்களை இழுத்துச் செல்லும் வாகனம், வேன், டிப்பர் போன்றன)
04. வாகனங்களின் தகர வேலைகள் உட்பட வெளிப்புற திருத்தவேலைகள் (கெப், லொறி, முச்சக்கர வண்டி, டிராக்டர் போன்றன)
05. வாகனங்களின் இயந்திர திருத்தவேலைகள்
06. வாகனங்களின் மின்னியல் திருத்தவேலைகள்
07. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
08. தகனச்சாலைகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புச் சேவைகள்
09. நில அளவை சேவைகள்
10. சட்டத்தரணி சேவைகள்
11. வளிச்சீராக்கி முறைமைகளின் திருத்தவேலைகள்
12. 2,000,000.00 ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான சிவில் பொறியியல் செயற்திட்டங்களுக்கான ஆலோசனைச் சேவைகள்
13. நிர்மாண ஒப்பந்தங்கள் (500,000.00 ரூபா வரையான வேலைகள்)
14. நிர்மாண ஒப்பந்தங்கள் (500,000.00 ரூபாவிற்கும் மேற்பட்ட வேலைகள்)

மேற்குறிப்பிடப்பட்ட சேவைகளின் பொருட்டு ஒரு விடயத்திற்கான பதிவுக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

| தொ. இல. | விபரங்கள் | தொகை |
|---|---|---|
| 01 | பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்யும் கட்டணம் (ஒரு விடயத்திற்கு) | ரூபா 2,500.00 |
| 02 | நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் 500,000.00 ரூபா வரையான வேலைகள் | ரூபா 6,000.00 |
| 03 | நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் 500,000.00 ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகள் | ரூபா 12,000.00 |

அலுவலகப் பயன்பாட்டிற்கு
பற்றுச்சீட்டு இல. : ..............................
திகதி : ..............................
தொகை : ..............................

## திவுலப்பிட்டிய பிரதேச சபை
## 2023ஆம் வருடத்தின் பொருட்டு வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

01. விண்ணப்பதாரரின் பெயர்: ..............................
02. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி: ..............................
03. வியாபாரத்தின் தன்மை: ..............................
04. வியாபார / ICTAD பதிவு இலக்கம் மற்றும் திகதி: .............................. (பிரதியொன்றை அனுப்பவும்)
05. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் விடய இலக்கம்: பொருள்/சேவை: ..............................
06. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் விடயம்: ..............................
07. தொலைபேசி இல. அலுவலகம்: ........................ கைபேசி: ..............................
08. தொலைநகல் இல.: ..............................
09. வெட் வரி பதிவிலக்கம்): ..............................
10. .............................. இலக்கமுடைய .............................. ரூபா பெறுமதியுடைய காசோலையொன்றை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். 2023ஆம் வருடத்திற்கான உற்பத்தியாளர் / வழங்குநர் / ஒப்பந்தக்காரராக பதிவு செய்து கொள்ளும்படி இத்தால் தயவுடன் வேண்டுகிறேன்.

.............................. ..............................
திகதி விண்ணப்பதாரர்/ முகாமையாளரின் ஒப்பம்

**பொது நிபந்தனைகள்**

1. வழங்குநர்கள் / ஒப்பந்தகாரர்களால் அந்தந்த பெறுமதிக்கு எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தையும் அதற்குரிய NBT (தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி) 2% தொகையையும் செலுத்துதல் வேண்டும்.
2. சகல விண்ணப்பதாரர்களும் அவர்களது பெறுமதி சேர் வரியின் (வெட்) பொருட்டான வரி இலக்கத்தைக் குறிப்பிடல் வேண்டும் (வெட் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்) என்பதுடன் சகல வழங்கல்களின் பொருட்டும் 60 நாட்களுக்கான கடன் வசதியை சபைக்கு வழங்குதல் வேண்டும்.
3. திவுலப்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்திற்கு வருகை தந்து பதிவு செய்ய உத்தேசிப்பவர்கள் வாரத்தின் திங்கள் முதல் வெள்ளி வரையான கடமை நாட்களில் (அரச விடுமுறை நாட்கள் தவிர) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் சபையின் காசாளரிடம் பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின் விண்ணப்பப் படிவத்தை ஒப்படைத்து பதிவு செய்து கொள்ளலாம். தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் ''செயலாளர், திவுலப்பிட்டிய பிரதேச சபை'' எனும் பெயருக்கு வரையப்பட்ட காசோலையின் மூலம் மட்டுமே செலுத்துதல் வேண்டும். தபாற் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
04. தேவையான வேளைகளில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோரும் அல்லது கொள்வனவு செய்யும் உரிமை மற்றும் ஏனைய பெறுகை முறைகளை கடைபிடிக்கும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
05. இந்தச் சபையினால் விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழங்குநர்கள் அவர்களுக்கு இயைபாக வழங்கும் சகல பொருட்களையும் போக்குவரத்துக் கட்டணம் இன்றி திவுலப்பிட்டிய பிரதேச சபையின் பிரதான களஞ்சியத்திற்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு வழங்கும் போது இயைபுடைய விலைப்பற்றுச்சீட்டை (Bill) சமர்ப்பித்தல் வேண்டும். உரிய திகதி மற்றும் உரிய நேரத்திற்கு முன் பொருட்கள் மற்றும் சேவைகைள வழங்கத் தவறும் பட்சத்தில் மீண்டும் அறிவிக்காமல் இச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடுத்த வழங்குநருக்கு கட்டளை வழங்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும். உரிய நேரத்திற்கு விலைகளைச் சமர்ப்பிக்காத மற்றும் உரிய நேரத்திற்கு உரிய தரத்திலான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களின் பெயர் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 031-2246275 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் கடமை நேரங்களில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**டீ.ஈ. இந்திக ஜயசிங்க,**
**தலைவர்,**
**திவுலப்பிட்டிய பிரதேச சபை திவுலப்பிட்டிய**
**2022-09.15.**
**திவுலப்பிட்டிய பிரதேச சபையில்.**

## வெளிமடை பிரதேச சபை 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு ஆவணம் தொடர்பாக அதிகாரத்திற்குற்பட்ட பிரதேசத்தின் குடிமக்களுக்கு முன்வைக்கும் அறிவித்தல்

இலக்கம் 2199/25 இனை உடைய 2020 ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதியினை கொண்ட இலங்கை ஜனநாயக வர்த்தமானி பத்திரத்தின் அதி விஷேட அறிவித்தலுடன் தொடர்புடையது.

அதன் சட்டம் 10 (2) (ஆ) அத்தியாயத்தின் கீழ் 2023ஆம் வருடத்திற்கான வெளிமடை அதிகார எல்லைக்குள் வெளிமடை பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட வரவு செலவு ஆவணத்தினை மதிப்பீடு செய்து பார்ப்பதற்கு பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதாக இதனூடாக அறிவிக்கின்றேன்.

**தலைவர்,**
**பிரதேச சபை,**
**வெளிமடை.**

Repeat Your Ad For Better Offers

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண விதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## கருங்கல் வகைகளை வழங்கல்

இவ் அதிகார சபையின் பன்னல மற்றும் வகவத்த அஸ்.்.போல்ட் உற்பத்திச்சாலைக்கு மூன்று மாதங்களிற்குத் தேவையான கருங்கல் வகைகளை வழங்குவதற்கு அங்கீகாரம் பெற்ற வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதற்கான விண்ணப்பப்படிவங்களைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.

**கேள்வி அட்டவணை**

| கேள்வி இலக்கம் | அஸ்.்.போல்ட் உற்பத்தி நிலையம் | வழங்கப்பட வேண்டிய அளவு கியு.மீற்றர் | | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா (பதிவு செய்யப்பெற்றுள்ள வழங்குநர்களை தவிர்ந்த) | கேள்விப் பிணைத் தொகை ரூபா | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக | வங்கி வரைவு ஒன்றாக |
| PRDA/WP/ PRO/2022/30 | பன்னல அஸ்.்.போல்ட் உற்பத்திச்சாலை | 0-5 | 518 | 2,000.00 + பெசேவ (VAT) | 43,000.00 | 86,000.00 |
| | | 5-10 | 480 | | | |
| | | 10-20 | 140 | | | |
| PRDA/WP/ PRO/2022/31 | வகவத்த அஸ்.்.போல்ட் உற்பத்திச்சாலை | 0-5 | 1750 | 2,000.00 + பெசேவ (VAT) | 147,000.00 | 294,000.00 |
| | | 5-10 | 1250 | | | |
| | | 10-20 | 900 | | | |

02. 2022.09.22 முதல் 2022.10.06 வரை வாரவேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 02.30 வரை மேற்படி படிவக் கட்டணத்தைச் செலுத்தி இதற்கான கேள்வி ஆவணங்களை பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையத்தைக் காசாக அல்லது வங்கி வரைவு ஒன்றாக, பெறுகைப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கமைவாக மேற்படி பெறுமானத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. பெறுகையைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கேள்வித் தொகையானது 5.0 மில் ரூபாவிற்கு மேற்படும் சந்தர்ப்பங்களில் விலைமனுதாரர் குறித்த 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2022.10.07 அன்று பி.ப. 02.30 என்பதுடன் விலைமனுத்திறத்தல் உடனடியாகவே இவ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும். அவ் வேளையில் வழங்குநர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் அளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12**
**தொ.பே. இல. 011-5676903**

# மாஹோ பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

### பெறுகை அறிவித்தல் மற்றும் நிபந்தனைகள்

மாஹோ பிரதேச சபைக்கு உரித்தான, பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் 2023.01.01 முதல் 2023.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக, முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், 2022.10.14 அன்று மு.ப. 9.30 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2022.09.23 முதல் 2022.10.13 அன்று பி.ப. 1.00 வரை வார நாட்களில், மாஹோ பிரதேச சபை அலுவலகத்தில் இதற்கான மாதிரிப் படிவங்கள் வழங்கப்படும்.

01. விலைமனுப்படிவங்கள் இரண்டு பிரதிகளாக வழங்கப்படுவதுடன், அவற்றைப் பிழைகளின்றிப் பூரணப்படுத்தி, மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என தனித்தனி உறைகளில் சேர்த்து, 'தலைவர் மாஹோ பிரதேச சபை, மாஹோ' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் சேர்த்தல் முடியும்.
02. விலைமனுக்களை அடக்கும் உறைகள் முத்திரையிடப்பட்டு, அவற்றின் இடது பக்கமேல் மூலையில் குறித்த விலைமனுவின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுவின் இரண்டு பிரதிகளும் உரிய நேரத்திற்கு முன்னர் இச்சபைக்குக் கிடைக்கச் செய்வதற்கு, விலை மனுதாரர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளல் வேண்டும்.
03. அனைத்து விலைமனுக்களும் குறித்த கருமத்திற்கான ஆகக்குறைந்த விலைக்குக்கூடிய தொகைக்காக விண்ணப்பித்தல் வேண்டும். விலைமனுப் படிவங்களை வழங்குவதற்காக, காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்பதுடன், ஆகக்குறைந்த கேள்விக்குக் குறைவாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள், தாமதமாகக் கிடைக்கபெறும் மற்றும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும், விலைமனுப்பிணையம் சபைக்கு உரித்தாக்கப்படும்.
04. விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொண்டு அவற்றை சமர்ப்பிக்கத்தவறும் நபர்களின் பிணைத் தொகை சபைக்கு உரித்தாக்கப்படும்.
05. 2022.10.14 அன்று மு.ப. 10.00 இற்கு மாஹோ பிரதேச சபையில் பெறுகைக் குழுவின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம்.
06. மாஹோ பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தீர்மானம், இறுதித் தீர்மானமாக அமையும்.
07. மேலதிக விபரங்களை மாஹோ பிரதேச சபையில் நேரடியாக அல்லது 037-2275275 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

| தொடர் இலக் கம் | ஆதனங்களின் விபரம் | ஆகக் குறைந்த கேள்வி | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப் படும் விலைமனுப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 1 | மாஹோ மாட்டிறைச்சிக்கடை | 1783100.00 | 1,000.00 | 89155.00 |
| 2 | அம்பன்பொல மாட்டிறைச்சி கடை | 203500.00 | 1,000.00 | 16280.00 |
| 3 | மாஹோ கோழியிறைச்சிக் கடை | 435600.00 | 1,000.00 | 34848.00 |
| 4 | மாஹோ இல 01 மீன் தட்டு | 253000.00 | 1,000.00 | 20240.00 |
| 5 | மாஹோ இல 02 மீன் தட்டு | 253000.00 | 1,000.00 | 20240.00 |
| 6 | அபன்பொல மீன் தட்டு | 110000.00 | 1,000.00 | 8800.00 |
| 7 | மாஹோ புதிய பொதுச் சந்தை இல 11 கடை அறை | 39600.00 | 1,000.00 | 3960.00 |
| 8 | மாஹோ புதிய பொதுச் சந்தை இல 12 கடை அறை | 39600.00 | 1,000.00 | 3960.00 |

**2022.09.23ஆம் திகதி**
**மாஹோ பிரதேச சபையில்**

**தலைவர்,**
**மாஹோ பிரதேச சபை**

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு 10**

## ரெக்சின் தலையனை உறை மற்றும் ரெக்சின் மெத்தை உறை கொள்வனவு செய்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு தேவைப்பாட்டின் படி கீழ்க்காணும் ரெக்சின் மெத்தை உறைகள் மற்றும் ரெக்சின் தலையனை உறைகளை கொள்வனவு செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | உருப்படி | உருப்படி அளவு | தொடர் இலக்கம் | 1 - 3 உருப்படி வரை மீளளிக்கப்படாத கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | ரெக்சின் மெத்தை உறை (72" x 36" x 0.5") | 500 | SF/08/2022 | 1500.00 |
| 02 | ரெக்சின் மெத்தை உறை (72" x 30" x 05") | 500 | | |
| 03 | ரெக்சின் மெத்தை உறை (27" x 17") | 1000 | | |

மேற்படி வழங்கலுக்கு தகைமையுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடிவதுடன் ரெக்சின் மெத்தை உறை மற்றும் ரெக்சின் தலையனை உறைக்காக மேற்கண்டவாறு வேறுவேறாக மீளளிக்கப்படாத கட்டணத்தை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்னர் 2022.09.26 முதல் 2022.10.18ம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவில் குறித்த கேள்வி நிபந்தனைகளுடனான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2022.10.19ம் திகதி மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்திய நிபுணர் டபிள்யூ.கே. விக்ரமசிங்ஹ**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

### 20 எண்ணிக்கையிலான வன்மைக்கூறு அணுகல் புள்ளிகளின் (FORTI ACCESS POINTS) உரிமத்தைப் புதுப்பித்தல்

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் **20 எண்ணிக்கையிலான வன்மைக்கூறு அணுகல் புள்ளிகளின் (FORTI ACCESS POINTS) உரிமத்தைப் புதுப்பித்தல்** சேவையினை வழங்குவதற்கு தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதன்பால் ஆர்வமுள்ள மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL இல் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.2,000.00** கட்டணத்தினை செலுத்தி **2022.10.12** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுதாரர்கள் TRCSL இன் நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவிடமிருந்து விலைமனு ஆவணங்களை பரிசோதித்தல் மற்றும் மேலதிக தகவலல்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி மனுக்களை சரியான முறையில் பூரணப்படுத்தி பிரதியை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2022.10.13 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"20 எண்ணிக்கையிலான வன்மைக்கூறு அணுகல் புள்ளிகளின் (FORTI ACCESS POINTS) உரிமங்களை புதுப்பித்தல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே மனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**சிரேஷ்ட கொள்முதல் குழு,**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**

## புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்

**சுற்றாடல் அமைச்சு**

# பெறுகை அறிவித்தல்

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்திற்கு கீழ்க்காணும் உருப்படிகளை வழங்குவதற்கு பணியகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| உருப்படி இல. | உருப்படி | அளவு | கேள்வி இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக) (ரூ) | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ) | கேள்விப் மாதிரிகள் மற்றும் ஏனைய தகவல்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய இறுதித் திகதி | கேள்விகள் ஒப்படைக்க வேண்டிய இறுதித் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | Inkjet Printer | 55 | PR/02/Q/ 54/22 | 12,500.00 | 384,435.00 | 2022.10.13 | 2022.10.14 |
| 02 | Deskop Computer | 60 | | | | | |
| 03 | External Hard Disk | 02 | | | | | |
| 04 | Notebook Computer | 11 | | | | | |
| 05 | Multmedia Projector | 04 | | | | | |
| 06 | Multimedia Projector Screen | 04 | | | | | |
| 07 | UPS System | 35 | | | | | |
| 08 | Color Printer | 04 | | | | | |
| 09 | Dotmetrix Printer | 02 | | | | | |
| 10 | Documents Scanner | 14 | | | | | |
| 11 | Multifunction Laser Printer | 01 | | | | | |

மேற்படி உருப்படிகளை வழங்குவதற்கு ஆர்வம் காட்டுகின்றவர்கள் தரப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்தி வார நாட்களில் பி.ப. 3.00 வரை புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் பெறுகை அதிகாரியிடம் கேள்வி ஆவணங்கள் மற்றும் குறித்த மாதிரிகள் ஏனைய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை முத்திரையிட்டு மேலே தரப்பட்டுள்ள இறுதித் திகதி பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம், இல. 569, எபிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது ஏற்றுக்கொள்ளும் பிரிவில் உள்ள குறித்த கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடையும் திகதியிலேயே பி.ப. 2.00 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் சமுகமளிப்பதற்கு கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு அனுமதி வழங்கப்படும். தயவு செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கணனி மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்களுக்கான விலைமனுக்கள் என்று குறிப்பிடுங்கள்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எபிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.